Vol.6, Issue 1 | Annual Subscription ₹480

@NewsRotary

/RotaryNewsIndia

ஜூன் 2023

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

ADVT.

# PROMISE OF HEALTH AND HAPPINESS

SAY IDHAYAM • SPELL HEALTH




IDHAYAM
SESAME OIL

Mantra
GROUNDNUT OIL

▪ *Unmatchable Quality and Colour* ▪ *Abundant Flavour While Cooking*
▪ *Wonderful Taste* ▪ *Endless Health Benefits*

LEKHA ads/June 2023/R1-01

**IDHAYAM | www.idhayam.com | office@idhayam.com | Whatsapp : 99447 66661**

# உள்ளே


14
மெக்கினலியைப் பொறுத்தவரை, ரோட்டரி என்பது தொடர்ச்சி மற்றும் இதயத்தை பற்றியது

26
மனநோய் மருத்துவ வசதிகள் புதுப்பிப்பு

28
பெரிய கனவுகளை காணுங்கள்

32
மும்பையில் ராஜஸ்ரீ பிர்லாவை மெக்கினலி சந்தித்தார்

34
மருத்துவர்களுக்கான ரோட்டரி சங்கம்

36
அன்பினால் மட்டுமே நம்பிக்கையை விதைக்க முடியும்: மெக்கினலி

44
ஆடை வடிவமைப்புச் சாதனையாளர்களான திருநபர்கள்

46
சத்தீஸ்கர் கிராமத்தில் ஒரு மருத்துவ முகாம்

48
நாக்பூர் மூத்த குடிமக்களின் மகிழ்ச்சிப் பயணம்

52
நைல் நதியால் ஆசீர்வதிக்கப்பட்ட எகிப்து

62
தொழுநோய் சிகிச்சைக்கு ஆதரவு தரும் தில்லி ரோட்டரி சங்கங்கள்

64
சமூக உணர்வை வெளிக்கொண்டு வாருங்கள்

68
மாயாஜால இசை ஜாம்பவான் S D பர்மன்!

76
உங்களின் பற்கள் ஆரோக்கியமாக இருக்க





## ரோட்டரி நியூஸ்-ன் மிகச் சிறந்த பதிப்புகள்

*RC மெட்ராஸ் கோரமண்டல் நடத்திய நீர்நிலைத் திட்டம் ஒன்றில் கிராமப் பெண்கள் குழுவாகத் தோன்றும் மே இதழின் அட்டைப் புகைப்படம் மிகவும் மகிழ்ச்சியளித்தது. கிருஷ்ணகிரியில் உள்ள கிராமத்து மக்களின் வாழ்க்கையை மாற்றிய இந்தத் திட்டத்தைப்பற்றிப் படித்து மகிழ்ந்தோம். உண்மை வாழ்க்கையில் நடைபெற்ற இந்த பஜ்ரங்கி பாய்ஜான் கதை நெஞ்சைத் தொட்டது, அனைவரும் படிக்கவேண்டியது, இதில் ரோட்டரியின் பங்கு பாராட்டவேண்டியது.*

*நாம் தனியாக இல்லை என்பதை உணரும் இடம் ரோட்டரி என்று RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் குறிப்பிட்டிருப்பது சிறப்பு. புதிய ரோட்டரி ஆண்டு மன நலனில் கவனம் செலுத்தும் என்று RIPE கோர்டன் மெக்கினலி அறிவித்திருப்பதை அறிந்து மகிழ்ந்தேன்.*

*ஆசிரியர் குறிப்பு, சமூகத்துக்கு நம் சேவைகளை ஊக்குவிப்பதாகவும் மேம்படுத்துவதாகவும் அமைந்து நம் கண்களைத் திறந்தது. வெற்றிகரமான வாழ்க்கைக்கு, இலக்குகளை அமைப்பது எந்த அளவு முதன்மையானது என்று RID மகேஷ் கோட்பாகி நன்கு விளக்குகிறார். RID AS வெங்கடேஷ் ரோட்டரியில் உறுப்பினர்களைத் தக்கவைத்துக்*



*கொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். ரோட்டரியில் TRF நிதி எவ்வளவு கவனமாகப் பயன்படுத்தப்படுகிறது என்று TRF அறங்காவலர் தலைவர் இயான் ரைஸ்லி நமக்குச் சொல்கிறார். அறங்காவலர் பரத் பாண்ட்யா ஆண்டு நிதிக்கு நிறையக் கொடையளிக்கும்படி ரோட்டரியன்களை வலியுறுத்துகிறார்.*

*பொகாரோ அருகில் ஒரு கிராமத்தை மாற்றி அமைத்த ரோட்டரியன்கள், மும்பையில் பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்கான திரைப்பட விருந்து, எகிப்து, மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சமூகத் திருமணம் போன்ற மற்ற கட்டுரைகள் அனைத்தும் தகவல்கள் நிறைந்தவையாகவும் நன்கு எழுதப் பட்டவையாகவும் இருந்தன.*

*ஃபிலிப் முலப்பொனெ M T, RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211*

*ஏப்ரல் இதழைப் படிப்பது கண்களுக்கும் நெஞ்சுக்கும் விருந்தாக அமைந்தது. ஒவ்வொரு பக்கத்திலும் பலன் பெற்றோர், திறன்களைக் கற்கும் மாணவர்கள், மேம்பட்ட எதிர் காலத்துக்கான திட்டங்களைச் செய்யும் ரோட்டரியன்களின் செயல் புகைப்படங்கள் நிறைந்திருந்தன. இந்த இதழில் ரோட்டரி இளைஞர் பரிமாற்றுத் திட்டம் போன்ற பல சேவை வாய்ப்புகளைப்பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன.*

*ராதேஷ்யாம் மோடி RC அகோலா — D 3030*

*ரோட்டரி நடத்தும் பல திட்டங்களைப் பற்றி, உலகம்முழுவதும் உள்ள ரோட்டரியன்களுக்குத் தெரிவிக்க நீங்கள் செய்யும் மதிப்பு மிக்க பணிக்கென நான் உங்களை மிகவும் பாராட்டுகிறேன். ரோட்டரி சமூகத்திலிருந்து செய்திகள், கதைகளைப் பகிரும் உங்களுடைய அர்ப்பணிப்பு உண்மையில் மிகச் சிறந்தது. நீங்கள் பதிப்பிக்கும் கதைகள் எனக்குத் தொடர்ந்து ஊக்கம் அளிக்கின்றன. நாம் அனைவரும் இணைய, ஒருவரிடமிருந்து ஒருவர் கற்க, அறிவைப் பெற ஒரு தளமாக ரோட்டரி நியூஸ் அமைகிறது.*

*பிபன் சேதி RC அகமத்கர் — D 3090*

ஓர் உண்மை பஜ்ரங்கி பாய்ஜான் கதை என்ற கட்டுரை ஒரு மிகச் சிறந்த, நமக்கு முன்மாதிரியான மனிதத்தன்மைச் சேவையைச் சுட்டிக்காண்பிக்கிறது. நாங்கள் இந்தத் திட்டத்தை அரிமா சங்க உறுப்பினர்களுடன் விவாதித்தோம். அனைவருக்கும் பாராட்டுகள்.

அருண் குமார், அலகாபாத் அரிமா சங்கம், UP

### தக்கவைத்தல் சவால்

உறுப்பினர்களைத் தக்கவைப்பது பற்றிய RID AS வெங்கடேஷின் அறிவுறுத்தல் மிகச் சிறந்தது, சரியான நேரத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த முதன்மையான பிரச்சனைபற்றி எங்களுக்கு அறிவூட்டியதற்கு RI இயக்குநருக்கு நன்றி.

மகேஷ் திரிகா, RC தில்லி சவுத் ஈஸ்ட் — D 3011

நான் ரோட்டரி சங்கத்தில் சேர்ந்து 12 நாட்கள் தான் ஆகின்றன. நான் இரண்டு நாட்கள் RLIல் பங்கேற்றேன். ஆம், தக்கவைத்துக் கொள்வது ரோட்டரியில் ஒரு பெரிய சவால். என்னுடைய பரிந்துரை, என்னைப் போன்ற புதியவருக்கு ரோட்டரி அறக்கட்டளையை வெளிப்படுத்தாதீர்கள். TRF போன்ற தகவல்களைப் புதிய உறுப்பினர்களுக்குப் படிப்படியான முறையில் அறிமுகப்படுத்துவதற்கு ஒரு கட்டமைப்பான அணுகுமுறை தேவை.

அனில்குமார் நாயக், RC நவி மும்பை சமாரிட்டன் — D 3142

### சேவையையும் மகிழ்ச்சியையும் இணைத்த பயணம்

நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்குத் துருக்கி சென்ற மகிழ்ச்சிப் பயணத்தைப் பற்றிய கட்டுரை (ஏப்ரல் இதழ்) ஆர்வமூட்டியது. DG I ஜெரால்ட் தலைமையில் RID 3000ஐச் சேர்ந்த ரோட்டரியன்கள் துருக்கியில் நில

நடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களை அணுகிச் சரியான நேரத்தில் உதவிப் பொருட்களை வழங்கினார்கள். RID 3000 ரோட்டரியன்களுடைய பரந்த மனத்துக்கு எங்கள் பாராட்டுகள்.

S முனியாண்டி, RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

**'பார்வை இழப்பு' என்ற சொல்லின் பயன்பாடு**

மும்பையில் பார்வைக் குறைபாடு கொண்டவர்களுக்கான திரைப்பட விருந்து பற்றிய கட்டுரையின் தலைப்பு தவறாக உள்ளது. 'பார்வை இழப்பு' என்று சொல்லாமல் 'பார்வைக் குறைபாடு' அல்லது 'பார்வையில் சவால்' என்பதுபோன்ற சொல்லைப் பயன்படுத்தவேண்டும். நாம் ரோட்டரியன்கள். அதனால், நாம் இன்னும் மனிதத்தன்மையுடன் நடந்துகொள்ளவேண்டும்.

K கோபால் ரத்னம், RC மெட்ராஸ், — D 3232

கடந்த பல ஆண்டுகளாக மாற்றுத் திறனாளிகளுடைய தலைவர்கள், அவர்களுக்கெனப் போராடுகிறவர்கள், தாங்களே மாற்றுத் திறனாளிகளாக உள்ள தலைவர்கள் பலருடன் நான் விரிவாக உரையாடியுள்ளேன். அவர்கள் ஊடகங்களுக்குத் தரும் தெளிவான செய்தி, 'எங்களை விவரிக்கச் சரியான சொற்களைப் பயன்படுத்தவேண்டும் என்று மெனக்கெடாதீர்கள். நீங்கள் எங்களைப் பார்வை இழந்தவர்களாகக் குறிப்பிடுவதில் எங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால், தயவுசெய்து எங்களை மனிதர்களைப்போல் நடத்துங்கள்' என்பதுதான். 'பார்வை இழப்பு' என்ற சொல் உடல் சார்ந்த நிலையைக் குறிப்பிடும்போது அது இழிவான பொருளை உணர்த்துவதில்லை. அறியாமை, விழிப்புணர்வின்மை போன்றவற்றைக் குறிக்க உவமை யாகப் பயன்படுத்தும்போதுதான் (எடுத்துக்காட்டாக, 'குருட்டு நம்பிக்கை') அது இழிவான பொருளை உணர்த்துகிறது. அதனால், இந்தக் கட்டுரையில் அந்தச் சொல் முற்றிலும் பொருத்தமாகத்தான் பயன்பட்டுள்ளது.

**ஆசிரியர்**


**அட்டையில்:** கொல்கத்தா லக்ஷ்யா சந்திப்பில் RIPE கோர்டன் மெக்கினலி மற்றும் ஹெதர். **புகைப்படம்:** ரஷீதா பகத்

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.

## ROTARY NEWS PLUS

படித்தீர்களா?

அல்லது உங்கள் e-mailல் உள்ள Junk folder-க்கு செல்கிறதா?




ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை **ஒவ்வொரு உறுப்பினருக்கும்** e-mail மூலம் அனுப்புகிறோம்.

**Rotary News Plus** இதழை எங்கள் வளைத்தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.
















1. *நியூயார்க்கில் நடைப்பெற்ற உலகளாவிய குடிமக்கள் திருவிழாவில் RI தலைவர் ஜெனிஃபர் ஜோன்ஸ் உலக போலியோ ஒழிப்பு முயற்சிக்கு $150 மில்லியன் கூடுதலாக ரோட்டரி அளிப்பதாக அறிவிக்கிறார்.*
2. *ஜாம்பியாவில் சுகாதார ஊழியர்களுடன்.*
3. *குவாத்தமாலா எழுத்தறிவு திட்ட மாணவி லக்கி சிமோனுடன்.*
4. *இமேஜின் ரோட்டரி கனடா டூரில் ஜோன்ஸ்.*
5. *உகாண்டாவில் நாக்கிவாலே குடியிருப்பில் நடிகை சிபோன்கிலே ம்லாம்போவுடன்.*



6



7

# விடைபெறல் இல்லை, வாழ்த்து

சென்ற ஆண்டு முழுவதும் ரோட்டரி இதழ்ப்பக்கங்கள் வழியாக உங்களுடன் பேசியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. குறிப்பாக, ''தாக்கத்தைக் கற்பனை செய்யுங்கள்'' பயணத்தில் நிக்-கும் நானும் சந்தித்த மிகச்சிறந்த மக்களுடைய மிகச் சிறந்த கதைகளைப் பகிர்ந்துகொள்வது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

குவாத்தமாலா-வின் மலைகள் நிறைந்த மேற்கு உயர்நிலங்களில் உள்ள பட்ஜூனில் தொடங்கி, ஜாம்பியா-வின் லுசாகா-வுக்கு வெளியில் உள்ள ஒரு சிறு கிராமம்வரை, இன்னும் மேம்பட்ட உலகுக்கெனப் பணியாற்றும் ஏராளமான மக்கள் எங்களை வரவேற்றுள்ளார்கள்.

இந்த ஆண்டு, நாம் அனைவரும் ரோட்டரியைக் கற்பனை செய்துள்ளோம். இதன் பொருள், நம்முடைய நேற்றைத் திரும்பிப்பார்த்தல், இன்றை உணர்தல், நாளை நாம் என்னவாக இருக்கலாம் என்று சிந்தித்து முன்னேறுதல்.

நாங்கள் பகிர்ந்துகொண்ட நேரங்கள், ரோட்டரியைக் கற்பனை செய்வதற்கான உங்கள் முயற்சிகளுக்கென நிக்-கும் நானும் உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். இப்போது, நாங்கள் உலகில் நம்பிக்கையை உருவாக்கும் முயற்சிகளைத் தொடர விரும்புகிறோம். உங்கள் ஒவ்வொருவருக்கும் சேவை புரிந்தது எங்களுக்குப் பெரிய பெருமை, மகிழ்ச்சி.

**ஜெனிஃபர் ஜோன்ஸ்**
RI தலைவர்



8



9




10

6. *லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் தினம் அன்று மூன்றாம் சார்லஸ் மன்னர் அவர்களுடன் ஜோன்ஸ் மற்றும் அவர் கணவர் நிக் க்ரயாசிச்.*
7. *தாய்வானில் ஜோன்ஸ் தம்பதியினர்.*
8. *ஜோன்ஸ் தன் சகோதரர் டாரனுடன்.*
9. *டெக்சாஸில் ஒரு ரோட்டரி நிகழ்ச்சியில்.*
10. *அல்பர்டாவில் நடைபெற்ற கல்கரி ஸ்டாம்பீட் அணிவகுப்பில் ஜோன்ஸ் தம்பதியினர்.*

Pictures by: 1. David Alexander; 2, 5. Esther Ruth Mbabazi; 3. James Rodríguez; 4, 10. Carol Tichelman; 6, 8. Courtesy of Jennifer Jones; 7. I-Hwa Cheng; 9. Monika Lozinska

# Rotarians!

Visiting Chennai
for business?

Looking for a
compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

Tariff:

₹2,500 for 2 hours
₹5,000 for 4 hours
₹1,000 for every additional hour

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 37,075 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 11,263 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 13,151 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | 12,843 |
| ரோட்டரியினர் | : | 1,202,506 |
| ரோட்டராக்டர்கள் | : | 175,906 |
| இன்டராக்டர்கள் | : | 302,473 |

As on May 16, 2023

## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on May 1, 2023

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 136 | 6,366 | 7.18 | 72 | 477 | 31 | 255 |
| 2982 | 83 | 3,774 | 6.89 | 32 | 778 | 79 | 76 |
| 3000 | 132 | 5,518 | 10.26 | 103 | 1,625 | 165 | 215 |
| 3011 | 123 | 4,735 | 28.57 | 82 | 2,661 | 105 | 37 |
| 3012 | 152 | 3,784 | 23.10 | 73 | 1,246 | 71 | 61 |
| 3020 | 87 | 5,016 | 7.34 | 42 | 1,207 | 116 | 350 |
| 3030 | 101 | 5,519 | 14.98 | 122 | 2,023 | 403 | 383 |
| 3040 | 115 | 2,603 | 15.56 | 59 | 805 | 64 | 213 |
| 3053 | 71 | 2,975 | 15.97 | 35 | 569 | 42 | 128 |
| 3054 | 172 | 7,087 | 19.95 | 107 | 1,471 | 145 | 577 |
| 3060 | 103 | 5,056 | 14.95 | 67 | 2,411 | 52 | 144 |
| 3070 | 128 | 3,527 | 16.44 | 47 | 551 | 50 | 60 |
| 3080 | 108 | 4,367 | 12.85 | 121 | 2,260 | 105 | 117 |
| 3090 | 105 | 2,459 | 5.25 | 46 | 599 | 178 | 164 |
| 3100 | 108 | 2,299 | 13.61 | 15 | 137 | 29 | 151 |
| 3110 | 145 | 3,983 | 12.25 | 16 | 117 | 28 | 106 |
| 3120 | 89 | 3,736 | 15.71 | 35 | 402 | 24 | 55 |
| 3131 | 144 | 5,825 | 24.77 | 140 | 3,128 | 165 | 145 |
| 3132 | 91 | 3,686 | 13.05 | 37 | 515 | 99 | 168 |
| 3141 | 112 | 6,277 | 27.00 | 149 | 5,615 | 158 | 175 |
| 3142 | 103 | 3,934 | 21.05 | 91 | 2,957 | 66 | 88 |
| 3150 | 112 | 4,416 | 13.13 | 151 | 1,999 | 91 | 129 |
| 3160 | 78 | 2,741 | 9.12 | 32 | 233 | 28 | 82 |
| 3170 | 148 | 6,837 | 15.78 | 108 | 1,867 | 142 | 178 |
| 3181 | 87 | 3,681 | 10.32 | 38 | 451 | 74 | 117 |
| 3182 | 88 | 3,664 | 10.10 | 45 | 215 | 101 | 107 |
| 3190 | 170 | 7,140 | 20.45 | 223 | 5,277 | 190 | 74 |
| 3201 | 170 | 6,689 | 9.90 | 133 | 2,026 | 81 | 93 |
| 3203 | 94 | 4,954 | 7.87 | 82 | 1,132 | 118 | 39 |
| 3204 | 76 | 2,583 | 7.36 | 23 | 206 | 17 | 13 |
| 3211 | 157 | 5,215 | 8.40 | 9 | 132 | 19 | 133 |
| 3212 | 127 | 4,794 | 11.35 | 85 | 3,527 | 140 | 153 |
| 3231 | 97 | 3,514 | 8.20 | 37 | 411 | 39 | 417 |
| 3232 | 173 | 6,929 | 20.42 | 122 | 7,094 | 129 | 101 |
| 3240 | 110 | 3,718 | 16.89 | 71 | 1,451 | 59 | 226 |
| 3250 | 103 | 3,948 | 21.02 | 68 | 1,035 | 33 | 191 |
| 3261 | 91 | 3,345 | 20.93 | 17 | 70 | 20 | 45 |
| 3262 | 125 | 3,874 | 14.84 | 75 | 741 | 640 | 282 |
| 3291 | 153 | 4,048 | 25.15 | 135 | 2,054 | 50 | 708 |
| **India Total** | **4,567** | **174,616** | | **2,945** | **61,475** | **4,146** | **6,756** |
| 3220 | 72 | 2,165 | 16.40 | 98 | 5,121 | 71 | 77 |
| 3271 | 171 | 3,438 | 18.64 | 174 | 2,846 | 288 | 28 |
| 3272 | 162 | 2,222 | 15.39 | 70 | 947 | 13 | 48 |
| 3281 | 312 | 7,336 | 18.10 | 280 | 2,215 | 143 | 207 |
| 3282 | 184 | 3,668 | 10.09 | 203 | 1,687 | 29 | 47 |
| 3292 | 158 | 5,942 | 18.75 | 179 | 4,874 | 78 | 135 |
| **S Asia Total** | **5,626** | **199,387** | | **3,949** | **79,165** | **4,768** | **7,298** |

*Source: RI South Asia Office*



# நிமிர்ந்து நில் துணிந்து சொல்!

நமது வாழ்க்கையில் பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் போதும், வழிபாட்டு இடங்களில் பிரசங்கங்களை கேட்கும் போதும் நம்மை நல்லவர்களாகவும், கண்ணியம் மிகுந்தவர்களாகவும், நன்னடத்தையுடன் இருக்குமாறு வலியுறுத்துகின்றனர். சுருக்கமாகச் சொன்னால் சமூக விதிமுறைகளுக்கு இணங்க செயல்பட பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த காரணங்களால் நியூயார்க்கர் இதழில் வெளியான *A club for the Cancelled* என்ற தலைப்பில் வெளியான கட்டுரை என்னை படிக்கத் தூண்டியது. நியூயார்க்கில் ஒவ்வொரு மாதமும் ஊடகவியலாளர்கள், கல்வியாளர்கள், அறிவு ஜீவிகள் என 200-க்கும் மேற்பட்டவர்கள் அழைக்கப்பட்டு விவாதக்கூட்டம் நடைபெறுகிறது. இந்த கூட்டத்துக்கு கிரிமினல்களின் சிந்தனைக்கூட்டம்! என பெயரிடப்பட்டுள்ளது. இதில் பங்கேற்க வேண்டுமானால் நீங்கள் சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்களாகவோ, விதிகளை மீறி செயல்படுபவர்களாகவோ, வேலை இழந்தவர்களாகவோ, ஏற்றுக்கொள்ளமுடியாத கருத்துகளை உடையவர்களாகவோ இருக்கவேண்டும். விருந்தினர் பட்டியலில் உள்ள சிலர் இழிவாக பேசுவதில் பிரபலமானவர்களாக இருப்பார்கள். பல்கலைக்கழக விதிகளை மீறிய உயர்நிலை பேராசியர்கள், எதையாவது பேசி மக்களின் எதிர்ப்பை சம்பாதித்து பிரபலமான பத்திரிகையாளர்கள்கூட இதில் இடம்பெற்றிருப்பார்கள்.

இந்த அமைப்பை தொடங்கியவர் சிகாகோ பல்கலைக்கழகத்தில் PhD பட்டம் பெற்ற பமீலா பரேஸ்கி என்பவர்தான். இவரது கிரிமினல்களின் சிந்தனைக் கூட்டம் மாதம் ஒரு முறை கூடுகிறது. இதில் பங்கேற்ற ஒருவர் நியூயார்க் எப்படி இடதுசாரி பக்கம் சாய்கிறது என்று வசைமாறி பொழிந்தார். ஒவ்வொரு உரையாடலும் முதலாளித்துவம் எந்த வகையில் மோசமானது அல்லது அமெரிக்கா எப்படி உலகிலேயே இனவெறிமிக்க, பாலின பாகுபாடு கொண்ட, ஓரினச்சேர்க்கையாளர்களை ஆதரிக்கும் நாடாக மாறியது என்பது பற்றியதாக அமைந்திருந்தது.

இது அரசியலில் ஒதுங்கியிருக்கும் தன்மை மற்றும் இதர விஷயங்கள் குறித்து விவாதிக்கப்படும் நீண்ட கட்டுரை. நமது சொந்த நாடு உள்பட உலகில் கருத்து வேறுபாடு மற்றும் இணக்கமற்ற கருத்துக்களுக்கான பார்வை எவ்வாறு சுருங்கி வருகிறது என்பது பற்றிய விவாதங்கள் என்னை ஆச்சரியப்படவைத்தன. பள்ளி, கல்லூரி, பணிசெய்யும் இடம், மத அமைப்புகள், அரசியல் கட்சி அல்லது அரசு இப்படி அதிகாரத்தில் இருப்பவர்கள் எதைச் சொன்னாலும் அது நல்லதோ அல்லது கெட்டதோ, சரியானதோ அல்லது தவறானதோ அதை எல்லோரும் கேட்டு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்றால் நம் வாழ்க்கை எவ்வளவு மந்தமாகவும், சலிப்பாகவும் மாறிவிடும் என்பதை கற்பனை செய்து பாருங்கள். அப்படியே நடந்தால் புதுவிதமான சிந்தனை, கண்டுபிடிப்புகள், Airbnb அல்லது உபேர் போன்ற வர்த்தகங்கள் எப்படி வளரும்? வாழ்க்கை நடைமுறைகள், உங்கள் அமைப்புகள், உங்கள் அன்புக்குரியவர்கள் அல்லது அரசு, கேள்வி கேட்காமல், எதையும் நிராகரிக்காமல், சந்தேகிக்காமல் அப்படியே ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு மக்களை மயக்கி அல்லது வழிநடத்தினால் மனித மனதில் என்னதான் மிச்சம் இருக்கும்? கேள்வி கேட்பவர்களை நகர்ப்புற நக்சல்கள் அல்லது சுற்றுச்சூழல் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்துவது ஆட்சியாளர்களுக்கு மிகவும் வசதியானது. கேள்விகளை காது கொடுத்து கேட்காமலும், எச்சரிக்கைகளுக்கு செவிசாய்க்காமலும் இருந்ததால் நடந்த பேரழிவை பாருங்கள். கேரளம் அடிக்கடி வெள்ளத்தால் பேரழிவிற்கு ஆளாகியிருக்கலாம் அல்லது உத்தரகண்டில் ஜோஷிமத்தில் சுற்றுச்சூழலை பாதிக்கும் கட்டுமானப் பணிகளால் பேரழிவை சந்தித்திருக்கலாம்.

இது சமூக அளவில் ஏற்படுவது. ஆனால், தனிப்பட்ட முறையில், நாம் எப்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்டு செயல்பட்டால் வீட்டிலும் வேலை செய்யும் இடத்தில் சொல்வதை கேட்டுநடந்தால் நிச்சயமாக நமக்குள் ஏதோ ஒன்று சுருங்குகிறது. மேலும் தனிப்பட்ட முறையில் உங்களின் தரம் குறைந்து விடுகிறது.

எழுந்து நிற்பதற்கும், வெளிப்படையாக பேசுவதற்கும் தகுதி இருக்கிறது. ஆனால், அதற்கு துணிச்சல் வேண்டும். அதன் மதிப்பு நீண்டகாலத்துக்கு இருக்கும். பமீலா பரேஸ்கியின் கூட்டத்தில் நாம் சேரவேண்டாம். ஆனால், எங்காவது, எப்படியாவது, யாரிடமாவது வித்தியாசமான மாற்றத்தை ஏற்படுத்த உறுதியேற்போம்!

ரஷீதா பகத்

**ஆளுநர் குழு**

RID 2981 செல்வநாதன் V
RID 2982 சரவணன் P
RID 3000 ஜெரால்ட் I
RID 3011 அசோக் கண்டூர்
RID 3012 Dr லலித் கன்னா
RID 3020 பாஸ்கர் ராம் V
RID 3030 Dr ஆனந்த் ஜுன்ஜுனுவாலா
RID 3040 ஜினேந்தர ஜெயின்
RID 3053 ராஜேஷ்குமார் சூரா
RID 3054 பல்வந்த் S சிரானா
RID 3060 ஸ்ரீகாந்த் இந்தானி
RID 3070 Dr துஷ்யந்த் சௌத்ரி
RID 3080 கல்டா V P
RID 3090 குல்பர் சிங் சௌத்ரி ரெடோல்
RID 3100 தினேஷ் குமார் சர்மா
RID 3110 பவன் அகர்வால்
RID 3120 அனில் அகர்வால்
RID 3131 Dr அனில் லால்சந்த் பார்மர்
RID 3132 ருக்மேஷ் ஜகோட்டியா
RID 3141 சந்தீப் அகர்வல்லா
RID 3142 கைலாஷ் ஜித்தானி
RID 3150 டல்லா ராஜசேகர் ரெட்டி
RID 3160 வொமினா நாக சதீஷ்பாபு
RID 3170 வெங்கடேஷ் H டேஷ்பாண்டே
RID 3181 N பிரகாஷ் காரந்த்
RID 3182 Dr ஜெயகௌரி ஹடிகல்
RID 3190 ஜிதேந்திரா அனேஜா
RID 3201 ராஜ்மோகன் நாயர் S
RID 3203 இளங்குமரன் B
RID 3204 ப்ரமோத் நாயனார் V V
RID 3211 பாபுமோன் K
RID 3212 முத்து V R
RID 3231 பழனி J K N
RID 3232 Dr நந்தகுமார் N
RID 3240 குஷாநாவா பாபி
RID 3250 சஞ்ஜீவ்குமார் தாகூர்
RID 3261 ஷஷங்க் ரஸ்டோகி
RID 3262 பிரவுதத்தா சுபதி
RID 3291 அஜய்குமார் லா

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.
ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம் பரத்தில் வெளியிடப்படும் கருத்துக்களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரைகளை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

இணையதளம்

# RI இயக்குநர்

## இயக்குனராக எனது பயணம்



ரோட்டரி இயக்குநராக பணிபுரியும் வாய்ப்பு பெற்றதற்கு நான் மிகவும் நன்றிக் கடன் பட்டுளேன். இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்றபோது, பல சேவைத் திட்டங்களின் அடிப்படையாக பல்வேறு யோசனைகளைக் கண்டேன், ரோட்டேரியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் உலகின் பல்வேறு மூலைகளில் ரோட்டரி எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் கண்டேன்.

4, 5, 6 மற்றும் 7 ஆகிய மண்டலங்களில் உள்ள சங்கங்கள் அடிமட்ட அளவில் செய்த உழைப்பு பாராட்டுக்குரியது. உறுப்பினர்கள் வளர்ச்சி மற்றும் சேவை திட்டங்களில் நாம் முதலிடத்தில் இருக்கிறோம், மேலும் TRF-விற்கு கொடுப்பதில் இரண்டாவது இடத்தில் இருக்கிறோம்.

எனது ஆட்சிக் காலத்தில் நாம் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் கவனம் செலுத் தினோம். நன்கொடைகளுக்குப் பதிலாக, வாழ்க்கையை மாற்றுவதற்கான திறனை வளர்ப்பதில் நம் கவனம் இருந்தது.

என்னை ஆதரித்தவர்களுக்கும், சிறப்பு உதவியாளராக என்னைக் கவனித்துக்கொண்டவர்களுக்கும், இயக்குநராக எனது சேவையை மகிழ்ச்சியாகவும் திருப்திகரமாகவும் மாற்ற ஒத்துழைத்தவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வாரியத்தில் உள்ள எனது சக ஊழியர்கள், TRF அறங்காவலர்கள் மற்றும் RI மற்றும் RISAO ஊழியர்களுக்கு ரோட்டரி நியூஸ் ஆசிரியர் மற்றும் பணியாளர்கள், பிராந்தியத் தலைவர்கள் மற்றும் RI அதிகாரிகளுக்கு எனது மனமார்ந்த நன்றி.

20-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு நான் பயணித்ததில் என்னிடம் ஏராளமான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள், மற்றும் எண்ணற்ற நினைவுகள் உள்ளன. ஒரு இயக்குனராக எனது பொறுப்பு முடிந்துவிட்டது, ஆனால் ரோட்டேரியராக எனது பங்கு என்றென்றும் தொடரும்.

எனக்கு பின்வருவோருக்கு நான் என் கோலை ஒப்படைக்கும்போது, ரோட்டரியின் எதிர்காலம் குறித்த நம்பிக்கை எனக்குள் நிறைந்துள்ளது. தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர்கள் தலைமையில், நமது உலகின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தொடர்ந்து பரிணாம வளர்ச்சியடையும் ஒரு துடிப்பான அமைப்பை நான் காண்கிறேன்.

மகேஷ் கோட்பாகி
RI இயக்குநர், 2021–23

# களின் செய்திகள்

## பெரிய, நிலையான திட்டங்களே ரோட்டரிக்கு பயனளிக்கும்



ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநராக நான் எனது கடைசி தகவலை எழுத உட்கார்ந்திருக்கும் போது, என் மனதில் தோன்றும் முதல் எண்ணம் “நேரம் பறக்கிறது’’ என்பது தான்! நான் நிறைய கற்றுக்கொண்ட ஒரு முழுமையான மற்றும் சுவாரஸ்யமான பயணம் இது. நம் நாட்டின் தலை முதல் பாதம் வரை பயணிக்க எனக்குக் கிடைத்த வாய்ப்பில் ஆயிரக்கணக்கான ரோட்டேரியர்களுடன் உரையாடி, அவர்களின் பேச்சைக் கேட்டு, அவர்களின் ஆர்வத்தால் உற்சாகமடைந்து, அவர்களின் அர்ப்பணிப்பைக் கண்டு வியந்துள்ளேன். நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் வினிதாவிற்கும் எனக்கும் அளித்த அரவணைப்பு மற்றும் தாராளமான விருந்தோம்பலுக்காக அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் பிராந்தியத்தில் ஒவ்வொரு மட்டத்திலும் ரோட்டரி தலைமைத்துவம் மிகுந்த அர்ப் பணிப்பை வெளிப்படுத்தியது. ஒவ்வொருவரும் ஆரோக்கியமான முறையில் மற்றொருவரை விட சிறப்பாக செயல்பட முயற்சி செய்தனர். இருப்பினும், நாம் பெறும் பாராட்டுகளை கண்டு நாம் ஓய்வெடுக்க முடியாது. இன்னும் சிறப்பாகச் செய்யபட வேண்டிய பகுதிகளில் நாம் நன்றாக பணியாற்ற வேண்டும்.

முதலாவதாக, ஒவ்வொரு மட்டத்திலும், நமது திட்டங் களைத் திட்டமிடும் போது ஒரு வருடத்திற்கு அப்பால் யோசிக்க வேண்டும்.

அடுத்து, எண்ணிக்கையை உயர்த்துவது மட்டுமல்லாமல் நிலையான உறுப்பினர் வளர்ச்சியிலும் நமது கவனம் இருக்க வேண்டும். இது நீண்ட காலத்திற்கு நம்மை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

கடைசியாக, ரோட்டரி அறக் கட்டளையின் மூலம் செய்யப்படும் நல்ல பணிகளைப் பற்றி அனைத்து ரோட்டரியர்களும் அறிந்திருக்கக் கூடிய சூழலை உருவாக்குவோம், இதன் மூலம் அவர்கள் இந்த நன்மையை பரப்பவும், தாங்களாகவே பங்களிக்கவும் முடியும்.

எதிர்காலத்தைப் பற்றி நான் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறேன். உலகில் நம்பிக்கையை உருவாக்க தங்கள் சொந்த வழியில் பாடுபடும் ஒவ்வொரு ரோட்டேரியர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்!

நாம் மீண்டும் சந்திக்கும் வரை...



A S வெங்கடேஷ்
RI இயக்குநர், 2021–23


**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| A S வெங்கடேஷ்<br>RI இயக்குநர் மற்றும்<br>RNT தலைவர் | RID 3232 |
| Dr மகேஷ் கோட்பாகி<br>RI இயக்குநர் | RID 3131 |
| Dr பரத் பாண்ட்யா<br>TRF அறங்காவலர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**RI இயக்குநர் தேர்வு**

| | |
|---|---|
| அனிருதா ராய்சௌத்ரி | RID 3291 |
| TN சுப்ரமணியன் | RID 3141 |

**செயற்குழு உறுப்பினர்கள் (2022–23)**

| | |
|---|---|
| Dr துஷ்யந்த் சௌத்ரி<br>தலைவர், ஆளுநர் குழு | RID 3070 |
| வெங்கடேஷ் H தேஷ்பாண்டே<br>செயலாளர், ஆளுநர் குழு | RID 3170 |
| Dr N நந்தகுமார்<br>பொருளாளர், ஆளுநர் குழு | RID 3232 |
| தினேஷ்குமார் சர்மா<br>ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3100 |



**ஆசிரியர்**
ரஷீதா பகத்


**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

இதழ்

# நம் உலகை மாற்ற தாராளமாக உதவுங்கள்



ஜூன் மாதம் வந்தால், ரோட்டரியில் ஓர் அத்தியாயம் முடிகிறது, இன்னொன்று தொடங்குகிறது. இது மகிழ்ச்சியும், வருத்தமும் கலந்த நேரம், முன்னோக்கிப் பார்க்கும் நேரம்.

இந்த ஆண்டைத் திரும்பிப் பார்த்தால், ரோட்டரி அறக்கட்டளை பல சிறந்த சாதனைகளை நிகழ்த்தியது. ரோட்டரியும் பன்னாட்டு இளம்பிள்ளை வாத அகற்றல் முன்னெடுப்பைச் சேர்ந்த அதன் கூட்டாளர்களும் பாகிஸ்தான், ஆஃப்கானிஸ்தான் ஆகிய நோயுள்ள நாடுகளில் வைல்ட் போலியோவைரஸ் பரவுதலைத் தடுக்கவும், நோய்ப் பரவல் நாடுகளில் தடுப்பு மருந்தால் வந்த போலியோவைரஸின் சுழற்சியைத் தடுக்கவும் ஒரு வியூகத்தைச் செயல்படுத்துகிறார்கள். கடந்த அக்டோபரில் ரோட்டரி, பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை, பன்னாட்டு சமூகம் இணைந்து இந்தத் திட்டத்துக்கென $2.6 பில்லியன் உறுதியளித்தார்கள்.

இதற்கென நீங்கள் தொடர்ந்து நிதி திரட்டவேண்டும், விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும், அத்துடன், உங்கள் சங்கம் அல்லது மாவட்டத்தில் போலியோப்ளஸ் சமூகம் ஒன்றைத் தொடங்க முயலுங்கள். நம் அறக்கட்டளை சிரியா, துருக்கியைத் தாக்கி அழிவை உண்டாக்கிய நில நடுக்கத்துக்கும் எதிர்வினை யாற்றியது, நாம் வழங்கிய பேரிடர் எதிர்வினை நல்கைகள் சங்கங்களும் மாவட்டங்களும் உதவி வழங்க உதவின.

இந்த ஆண்டில் நம் அறக்கட்டளை தொடர்ந்து வளர்ந்தது. ரோட்டராக்ட் சங்கங்கள் தன்னார்வத்துடன் செயல்படத் தொடங்கினார்கள், தாங்களாக அறக்கட்டளை நல்கைகளுக்கு விண்ணப்பம் செய்யத் தொடங்கினார்கள். ஒட்டோ மற்றும் ஃபிரான் வால்டர் அறக்கட்டளை உதவியுடன் அடுத்த ரோட்டரி அமைதி மையம் இஸ்தான்புல்லில் உள்ள பஹ்செசெஹிர் பல்கலைக்கழகத்தில் அமையவுள்ளது.

நல்கைத் திட்டத்தில் தன்னார்வத்துடன் செயல்படுதல் அல்லது வழங்குதல் மூலம் ரோட்டரி அறக்கட்டளையை ஆதரித்த அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன். நீங்கள் அறக்கட்டளைக்கு உங்கள் பரிசை இன்னும் அளிக்கவில்லை என்றால், தயவு செய்து, ஜூன் 30க்குள் இணையம் வழியாக அதைச் செய்யுங்கள். இதன் மூலம், இந்தச் சிறந்த ஆண்டை நாம் உயர்ந்த நிலையில் நிறைவு செய்யலாம், $430 மில்லியன் திரட்டும் நம் இலக்கை எட்டலாம். உலகை மாற்றுவது வேறு யார் கையிலும் இல்லை, நம் கையில் தான் உள்ளது. தேவை உள்ள வர்களுக்கு உதவுவதுதான் ரோட்டரியும் அதன் அறக்கட்டளையையும் வரையறுக்கிறது, இனி வரும் ஆண்டுகளிலும் அவ்வாறு வரையறுக்கும். ரோட்டரி அறக்கட்டளையின் வழியாக ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதில் தொடர்ந்து வெற்றி பெறவேண்டும் என்று உள்வரும் அறங்காவலர் தலைவர் பேரி ராஸ்ஸின், அறங்காவலர்கள், நம் ஊழியர்கள் அனைவரையும் நான் வாழ்த்துகிறேன்.

**இயன் ரிஸ்லி**
TRF அறங்காவலர் தலைவர்

# RID 3231 சார்பில் சென்னையில் PETS



RID 3231 PETS நிகழ்ச்சியில் RIDE அனிருதா ராய் சௌத்ரி, அவர் மனைவி ஷிப்ராவுடன் DGE P பரணீதரன், PDGs பாபு பேரம், C சிவஞான செல்வம், சந்தர பாப், E K சகாதேவன் மற்றும் உறுப்பினர்கள். DGN ராஜன் பாபு இடதிலிருந்து நான்காவதாக உள்ளார்.

ரஷீதா பகத்

RID 3231-சார்பில் சென்னையில் DGE பரணீதரன் PETS நடத்தினார். இந்நிகழ்ச்சிக்கு உள்வரும் இயக்குநர் அனிருத்த ராய் சௌதுரி தலைமை வகித்தார். அவரது மனைவி ஷிப்ரா, மாவட்டத்தில் உள்ள 96 சங்கங்களில் 82 சங்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். RID 3232, PDG அபிராமி ராமநாதன், PDGs E K சகாதேவன் (3203), M முருகானந்தம் (3000), C சிவஞான செல்வம் (2982), DGE ரவிராமன் (3232), DGN N S சரவணன் (3232) ஆகியோர் பங்கேற்றனர். அரக்கோணம் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் PETS தலைவராக இருந்தார்.■

# சென்னை ரோட்டரி திட்ட சேவைகள்: RIPE மெக்கினலி பெருமிதம்!

**ஜெய்ஸ்ரீ**

நீங்கள் செய்துவரும் மிகப்பெரிய திட்டங்கள் எங்களுக்கு பெருமையை அளிக்கிறது. உங்களது ஒவ்வொரு சேவைத் திட்டத்தையும் பார்க்கும் போது உங்களைப் போன்ற ரோட்டேரியன்கள் மூலம் ரோட்டரி சமூகத்திற்கு செய்துவரும் சேவைகள் நம்பிக்கை அளிக்கின்றன என்றார் RIPE கோர்டன் மெக்கினலி. அண்மையில் மனைவி ஹெதருடன் சென்னை வந்திருந்த அவர், பல்வேறு திட்டங்களைத் தொடங்கிவைத்து பார்வையிட்டார்.

சென்னை, ராயப்பேட்டை மருத்துவமனையில் மார்பக புற்றுநோய் சிகிச்சைக்கான மம்மோகிராபி டிஜிட்டல் கருவியை இயக்கிவைத்து மெக்கினலி பேசினார். இத்திட்டம் சென்னை தி.நகர் ரோட்டரி சங்கத்தின் திட்டமாகும். PDG அபிராமி ராமநாதன் இத்திட்டத்திற்கு தனது பங்காக ரூ.46 லட்சம் வழங்கியுள்ளார். சங்கத்தின் தலைவர் மீனாட்சி பெரியகருப்பன் அவரின் மகளாவார். அவரது பேத்தி மீனாட்சி பெரிய கருப்பனும் சவிதா மருத்துவக் கல்லூரி ரோட்ராக்ட் சங்கத்தின் தலைவராக உள்ளார். இது $57,000 மதிப்புள்ள சர்வதேச மானிய திட்டமாகும். RID 3830 பிலிப்பின்ஸில் உள்ள மகாட்டி ஜோஸ் டிரைஜால் ரோட்டரி சங்கம் இதன் சர்வதேச கூட்டாளர்.

RID A S வெங்கடேஷ், ரோட்டரி மற்றும் ரோட்ராக்ட் இடையிலான கூட்டாண்மையை பாராட்டினார். பெருநன்கொடையாளரான ராமநாதன் குடும்பத்தினரின் தாராள மனப்பான்மைக்கு அவர் நன்றி தெரிவித்தார். RID 3232 கடந்த ஆண்டு சென்னையில் 146 டயாலிஸ் கருவிகளையும் நிறுவியுள்ளது. இந்த ஆண்டு டாங்கர் அறக்கட்டளை, வோக்கார்டு மற்றும் சென்னை மாநகராட்சியுடன் இணைந்து மேலும் 70 டயாலிஸிஸ் கருவிகள் நிறுவ திட்டமிட்டுள்ளோம். சர்வதேச மானிய உதவித் திட்டத்தின் கீழ் 40 பேரின் உறுப்புமாற்று அறுவைச் சிகிச்சைக்கு ஆதரவுக்கரம் நீட்டவும் திட்டமிட்டுள்ளோம் என்றார் DG N நந்தகுமார்.



ஜெய்ஸ்ரீ

*சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் RC மெட்ராஸ் தி. நகர் நிறுவியுள்ள டிஜிட்டல் மம்மோகிரோபி கருவியை RIPE கோர்டன் மெக்கினலி துவக்கி வைக்கிறார். உடன் ஹெதர், RID A S வெங்கடேஷ், DG N நந்தகுமார், PDG அபிராமி ராமநாதன், சங்கத் தலைவர் மீனாஷி பெரியகருப்பன் மற்றும் RAC சவிதா கல்லூரி தலைவர் மீனாஷி பெரியகருப்பன் ஆகியோரும் உள்ளனர். மருத்துவமனை கதிரியக்கவியல் துறை தலைவர் Dr கோபிநாத் இடதில் உள்ளார்.*

மாலையில் சென்னை ரோட்டரி சங்கத்தின் ஆதரவில் பொது சுகாதார நிலையத்தில் நிறுவப்பட்ட டயாலிஸிஸ் மையத்தையும் RIPE மெக்கினலி தொடங்கிவைத்தார். சர்வதேச மானிய உதவித் திட்டம் 112,632 டாலர் மதிப்பில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் நிலேஷ் குமார் சிங் தெரிவித்தார்.

சென்னையில் இயங்கிவரும் ரோட்டரி டயாலிஸில் மையங்களை அடையாளம் காணும் வகையில் மெட்ராஸ் இண்டஸ்டிரியல் சிட்டி ரோட்டரி சங்கம் புதிய இணையதளத்தை உருவாக்கியுள்ளது. *Rotarydialysis.com* என்னும் இணைய தள முகவரியில் தேடினால் இச்சேவை தொடர்பான முழு தகவல்களை பெற முடியும். இந்த வசதியையும் மெக்கினலி தொடங்கிவைத்தார்.

காரைக்குடியில் உள்ள சரஸ்வதி வித்யாலயா ஆரம்பப்பள்ளி மற்றும் மேனிலைப் பள்ளிகளில் 66 கழிப்பறை மற்றும் கைகழுவும் நிலையங்களை RC மெட்ராஸ் கட்டிக் கொடுத்துள்ளது. இத்திட்டம் ரூ.52 லட்சம் செலவில் (72,000 டாலர்) நிறைவேற்றப்பட்டுள்ளது. தேவக்கோட்டையில் உள்ள பொது சுகாதார மையத்தில் நிறுவப்பட்ட மம்மோகிராபி கருவியையும் மெக்கினலி தொடங்கிவைத்தார்.■




கோர்டன் மற்றும் ஹெதர் மெக்கினலி, மகள்கள் ரெபெக்கா (இடது) மற்றும் சாராவுடன்.

# மெக்கினலியைப் பொறுத்தவரை, ரோட்டரி என்பது தொடர்ச்சி மற்றும் இதயத்தை பற்றியது

ரஷீதா பகத்



இந்தியாவில் உள்ள உறுப்பினர் நிலையிலான ரோட்டேரியர்களைப் பற்றி பேசும் போது நான் உயராதிக்கம் செலுத்த விரும்பவில்லை, ஏனென்றால் நாம் அனைவரும் உறுப்பினர் நிலை ரோட்டேரியர்கள்தான். ஆனால் இந்திய சங்கங்களில் உள்ள ரோட்டேரியர் களிடையே உள்ள ஆர்வமும் பெருமையும் என்னை உற்சாகப்படுத்துகிறது. கடந்த மூன்று நாட்களாக நான் இந்தியாவில் இருந்தேன்; சென்னை, மதுரை மற்றும் இப்போது கல்கத்தாவில் இருக்கிறேன்... மேலும் நாக்பூர், அகமதாபாத் மற்றும் மும்பைக்கு செல்லவிருக்கிறேன். இந்த ஆர்வத்தையும் பெருமையையும் காண அருமையாக இருக்கிறது!

கல்கத்தாவில் லக்ஷ்யா நிகழ்வில் உள்வரும் RI தலைவர் கோர்டன் மெக்கினலி மற்றும் அவரது துணைவியார் ஹெதர் ஆகியோரை நான் சந்தித்தேன். ஹெதர் வண்ணமயமான மஞ்சள் பட்டுப் புடவையை அணிந்தும் மற்றும் கோர்டன் ஊதா நிற குர்தா அணிந்தும் மேடையில் பாடல்களை முனுமுனுத்து பின்னர் பாலிவுட் இசைக்கு ரோட்டேரியர்களுடன் இணைந்து நடனமாடியது என சாவகாசமாக இருந்தனர். காரமான இந்திய உணவா? பரவாயில்லை, அவர் அதை விரும்பி உண்டார்.

ஆனால் அவரை சாதரணமாக நினைத்துவிடாதீர்கள்; மிக தெளிவாக பேசும் உள்வரும் RI தலைவர் தன் மனதில் உள்ளதை சுற்றிவளைக்காமல் தயக்கமின்றி பேசுபவர்; “உங்கள் பாக்கெட்டில் உள்ளது எவ்வளவு முக்கியமோ அதேபோல் உங்கள் இதயத்தில் உள்ளதும் முக்கியம்! என அவர் கூறும் போது அந்த வார்த்தைகள் அவர் இதயத்திலிருந்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

இந்தியாவின் ரோட்டரி அவருக்கு புதிதல்ல, பல ஆண்டுகளாக அவர் அதை “பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகங்களில் நெருக்கமாகப் கவனித்துக் கொண்டிருக்கிறேன். ரோட்டரி இங்கு மிகவும் துடிப்பாக செயல்படுகிறது என்பதை நான் அறிவேன், உறுப்பினர்களிடையே மிகுந்த ஆர்வமும் பெருமையும் உள்ளது.” புதிய ரோட்டரி

# ஒரு பார்வையில்



**மதவாதம்:** *நான் ஒரு கிறிஸ்தவன், வலுவான நம்பிக்கை கொண்டவன். ஆம், நான் மதவாதி.*

**உணவு:** *எனக்கு உணவு, குறிப்பாக இந்திய உணவு மிகவும் பிடிக்கும். எனக்கு அது காரமாகத் தெரியவில்லை. இங்குள்ள இந்திய உணவு ஸ்காட்லாந்தில் நாங்கள் பெறுவதை விட வித்தியாசமானது. ஆனால் ஸ்காட்லாந்தில் கிடைக்கும் இந்திய உணவும் நன்றாகவே இருக்கும். எனது அளவிலிருந்து உங்களால் சொல்லமுடியும் நான் எல்லா உணவுகளையும் விரும்புபவன் என்று!*

**சமையல்:** *எனக்கு சமைப்பதும், உணவு தயாரிப்பதும் பிடிக்கும். (ஹீதரிடம் அவரது கணவரின் சிறந்த தயாரிப்பு பற்றி கேட்டபோது: "நான் செய்யாத ஒன்றை கோர்டன் செய்வார் - ஒரு செய்முறையை எடுத்து அதை சிறிதளவும் மாறாமல் கடைபிடிப்பார். நான் ஒரு செய்முறையை மேம்படுத்து விரும்புவேன், ஆனால் அவர் செய்முறைபடி கடைபிடித்து நன்றாக தயார் செய்வார்.")*

**இசை:** *எனக்கு எல்லா வகையான இசையும் பிடிக்கும். (சிரிக்கிறார்). எனக்கு ஓபரா மற்றும் இசை நாடகம் பிடிக்கும். ஆனால் என் ஆர்வம் சற்று கிளாசிக்கல் மியூசிக் பக்கமாகவே சாய்ந்திருக்கும்.*

**திரைப்படங்கள்:**
*இப்போதெல்லாம் திரைப் படங்களைப் பார்க்க எனக்கு அதிக நேரம் கிடைப்பதில்லை. உங்களுக்குப் பிடித்த படம் எது என்று ஒருவர் என்னிடம் கேட்டார், நான் அதற்கு காசாபிளாங்கா என்றேன்! நான் எவ்வளவு திரைப்படங்களைப் பார்க்கிறேன் என்பதை அதுவே உங்களுக்குச் சொல்லும்! (ஹெதர்: எனக்கு புட்ச் காசிடி மற்றும் சன்டான்ஸ் கிட்!) ஒரு திரைப்படத்தைப் பார்க்க எடுக்கும் நேரம் காரணமாக நான் பெரிதாக திரைப்படம் பார்ப்பதில்லை. நான் தூங்க விரும்பினால் ஒரு திரைப்படத்தைப் பார்ப்பேன்!*

**படித்தல்:** *நான் புனைகதைகள், த்ரில்லர்கள், குறிப்பாக மருத்துவப் புனைகதைகளைப் படிக்க விரும்புகிறேன். நான் பாட்ரிசியா கார்ன்வெல், கேத்தி ரீச்ஸின் தீவிர ரசிகன்.*

**பிடித்த புத்தகம்:** *கிளாசிக்ஸைப் படிப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ராபர்ட் லூயிஸ் ஸ்டீவன்சன் எனக்கு பிடித்த எழுத்தாளர். அவரின் கிட்நாப்ட் மற்றும் ட்ரஷர் ஐலாண்ட் எனக்கு பிடித்த புத்தகங்கள்.*

**உலகத்திற்கான கனவு:**
*நான் மிகவும் அமைதியான உலகத்தைப் பார்க்க விரும்பு கிறேன், மக்கள் நல்ல சகிப்புத் தன்மையை கொண்ட ஒரு உலகம். இந்த உலகத்தை அவர்கள் வளரவும் செழிக்கவும் சிறந்த இடமாக மாற்ற முடியும் என்ற நம்பிக்கையுடன் இந்த தலைவர் பதவியை எங்கள் இரண்டு பேத்திகள் மற்றும் இந்த உலகின் அனைத்து குழந்தைகளுக்காகவும் அர்ப்பணிக்க விரும்புகிறேன். நீங்கள் நம்பிக்கையைப் பற்றி சொன்னது போல், அது பல வழிகளில் வரும்... நம்பிக்கையை பல வழிகளில் விளக்கலாம். உண்மையில் நாம் அனைவரும் ஒன்றுதான்; உலகில் உள்ள மோதல்கள் அரசாங்கங்களால் தொடங்கப் படுகின்றன. மக்கள் ஒருவரை யொருவர் மதித்து பேசினால், உலகில் மோதல்கள் குறைவாக இருக்கும்.*

**உக்ரைன், சிரியா மோதல்கள்:** *ரோட்டரி இன்று உலகிற்கு எவ்வளவு மற்றும் ஏன் தேவைப்படுகிறது என்பதற்கு இதுவே அளவுகோல். மோதல் என்பது ஒற்றுமையின்மையின் பிரதிநிதி, ஆனால் நாம் ஒன்றுபட்ட உலகளாவிய வலையமைப்பைக் கொண்டுள்ளோம்.*

*உலகம் இதுபோன்று ஒருபோதும் பிளவுபட்டு இருந்ததில்லை. நம் நாடுகளில் வேற்றுமை உள்ளது, ஆனால் ரோட்டரியால் மக்களை ஒன்றிணைக்க முடியும், அதனால்தான் ஒரு ஒன்றிணைக்கும் சக்தியாக இருக்கவும், மக்களின் வாழ்கையை மேம்படுத்துவும் இந்தியா போன்று உலகெங்கிலும் உள்ள ரோட்டரியின் வலிமை நமக்குத் தேவை. சற்று கற்பனை செய்யுங்கள், ரோட்டரி இந்தியாவிலோ, எனது நாட்டிலோ அல்லது வேறு எங்கும் இல்லாவிட்டால்... நாம் செய்யும் சமூக நன்மையில் எவ்வளவு பெரிய வெற்றிடம் இருக்கும் என.*

**புதிய உறுப்பினர்களை ஈர்த்தல்:** *ரோட்டரி பற்றிய*

சங்கம் ஒன்றை சென்னையில் முந்தைய நாள் இரவு பட்டயப்படுத்திய அவர், “97 உறுப்பினர்கள் அதில் இணைந்தனர்! இது ஒரு சாதனையாக இருக்கலாம். ஒரு சங்கத்தை பட்டயப்படுத்த 20 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம். ஆனால் இயக்குனர் வெங்கி இந்தியாவில் 40 பேர் கொண்டு பட்டயப்படுத்த விரும்புகிறோம் என்று கூறுகிறார். ஆனால் 97 பட்டய உறுப்பினர்கள் கொண்டிருப்பதும் மற்றும் அவர்கள் அனைவரும் மருத்துவர்களாக இருப்பதும், மற்ற சங்கங்களுக்கு மருத்துவத் திட்டங்களைச் செய்வதற்கான ஆதாரமாக அவர்கள் இருப்பதும் ஆச்சரியமளிக்கிறது. மேலும் நீங்கள் CSR நிதியை சேவைக்காகச் உபயோகிப்பதில் உலகிலேயே முதலாவதாக இருக்கிறீர்கள்.

ஆனால் எப்பொழுதும் போல, நம் அறையில் ஒரு யானை இருக்கிறது, அந்த யானைதான் அரசியல். அது எனக்கு வருத்தமளிக்கிறது, ஏனென்றால் சில அரசியலை நாம் அகற்றினால், இந்தியா இன்னும் பிரகாசித்து ரோட்டரியின் கலங்கரை விளக்கமாக திகழும். அதற்கு என்னிடம் பதில் இருக்கிறது என்று நான் சொல்லப் போவதில்லை. அது உங்கள் உள்ளிருந்து வர வேண்டும். என உள்வரும் தலைவர் மேலும் கூறினார்,

இந்தியாவிலிருந்து RI வாரியத்திற்கு வரும் தேர்தல் தகராறுகள் மற்றும் புகார்களின் எண்ணிக்கை ரோட்டரி உலகின் வேறு எந்தப் பகுதியையும் விட அதிகமாக உள்ளது. இது சில



*மருமகன் க்ரேக், மகள் ரெபெக்கா, ஹெதர், பேத்தி ஐவி, மகள் சாரா மற்றும் கோர்டன்.*



*மக்களின் பார்வையை மாற்றி, நாம் உண்மையில் என்ன செய்கிறோம் என்பதை அவர்களுக்குச் சொல்வது தான் சிறந்த வழி. ரோட்டரியை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல், சங்கங்களின் பாணியை மாற்றுதல் மற்றும் நாம் எப்போது, எவ்வளவு சந்திக்கிறோம் என்பதில் நெகிழ்வுத்தன்மையைக் கொண்டுவருதல். இவை அனைத்தும் ரோட்டரியில் சேருவதை எளிதாக்குகின்றன. ஒரு தகுதிவாய்ந்த ரோட்டேரியராக இருப்பதற்கு உங்கள் பாக்கெட்டில் உள்ளது எவ்வளவு முக்கியமோ அதே போல் உங்கள் இதயத்தில் உள்ளதும் முக்கியம் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்! ரோட்டரி எல்லா இடங்களிலும் அனைவருக்கும் பொருத்தமான பாணியில் கிடைக்க வேண்டும். அது ஒரு ஆடம்பரமான கிளப்பிற்கு 2–3 மணிநேர மதியம் அல்லது இரவு உணவுக்கு சென்றாலும் சரி அல்லது ஒரு சுருக்கமான சந்திப்பு தொடர்ந்து திட்டப் பணிகளை செய்தாலும் சரி. ஏனெனில் ரோட்டரி வேலை பற்றியது, கூட்டத்தை பற்றியது அல்ல.*■

சமயங்களில் இந்தியா பற்றி ஒரு தவறான கண்ணோட்டத்தை ரோட்டரி உலகத்திற்கு காண்பிக்கிறது. ஆனால் இந்தியாவின் மறுப்பக்கத்தை நான் பார்த்திருக்கிறேன். நீங்கள் நிச்சயமாக உலகில் நம்பிக்கையை உருவாக்குகிறீர்கள்'' என மெக்கினலி கூறினார்.

நம்பிக்கை தான் அவரது தலைமைத்துவத்தின் கருப்பொருள், அவர் ஏன் அதைத் தேர்ந்தெடுத்தார் என்பதை காண்போம். பல ஆண்டுகளாக, மிகவும் தாழ்ந்த நிலையில் இருக்கும் மக்களுக்கு ரோட்டரி எவ்வாறு நம்பிக்கை அளிக்கிறது என்பதை நான் கண்டிருக்கிறேன். உதாரணமாக, சுனாமியில் (2004ல்) அனைத்தையும் (அவரது கணவன், குழந்தைகள் மற்றும் அவளுடைய வீடு) இழந்த தாய்லாந்தின் பெண்மணி, அவர் நம்பிக்கை உட்பட எல்லாவற்றையும் இழந்து விட்டதாக என்னிடம் சொன்னார். ஆனால் ரோட்டரி அவருக்கு ஒரு புதிய வீட்டைக் கொடுத்து அவருக்கு நம்பிக்கை அளித்தது. தனது நன்றியை தெரிவிக்க, அந்த பெண்மணி ஒரு சங்கை எனக்கு கொடுத்தார். "அந்த சங்கு 15 ஆண்டுகளாக என் வீட்டில் உள்ளது, அந்த பெண்ணையும் மற்றும் ரோட்டரி அவருக்கு எப்படி நம்பிக்கை கொடுத்தது என்பதையும் எனக்கு நினைவூட்டுகிறது.''

இதே போல், ரோட்டரி எண்ணற்ற மக்களுக்கு நம்பிக்கையை அளித்துள்ளது; அவர் அதை ஆப்பிரிக்காவில் நேரில் கண்டிருக்கிறார்; ருவாண்டாவில் இனப்படுகொலைக்குப் பிறகு அவர் குழந்தை களுடன் பணிபுரிந்த போது, மேலும் மணிலாவில் உள்ள 4 வயது சிறுமிக்கு ரோட்டரி திட்டத்தின் மூலம் இதயம் சரி செய்யப்பட்ட போது. அந்த அறுவை சிகிச்சையை பார்த்துக் கொண்டிருந்த போது அவருடைய தொலைபேசி ஒலித்தது, அதில் அவருடைய 4 வயது பேத்தி சிரித்த முகத்துடன் பள்ளியின் முதல் நாளுக்குத் தயாராக இருக்கும் படம் வந்திருந்தது. ஆபரேஷன் டேபிளில் இருந்த அந்தச் சிறுமியும் என் பேத்தியைப் போலவே பள்ளிக்குச்





**(இடதில்)** *கோர்டன் மற்றும் ஹெதர் மெக்கினலி பேத்தி ஐவியுடன்.*

**(வலதில்)** *மகள் ரெபக்கா, கோர்டன், சாரா, ஐவி மற்றும் ஹெதர்.*









மும்பை பல்கலைக்கழகம் பையோடைவர்சிட்டி பார்க்கில்.



சென்று, கல்வி கற்று, மகிழ்ச்சியாக வாழ முடியும் என்று நம்பிக்கையை ரோட்டரி அளித்ததை கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். மக்கள் நிறையவற்றை இழக்கலாம், ஆனால் நம்பிக்கையை இழக்கும் நிலைக்கு வந்தால், அவர்கள் மிகவும் கீழ்நிலைக்கு வந்து விடுவார்கள். எனவே இந்த கருப்பொருள் வார்த்தைகளை விட பெரியது… இது செயலுக்கான அழைப்பு.''

அவரது ரோட்டரி பயணத்தை பற்றி சற்று பார்போம், மெக்கினலி 1984ஆம் ஆண்டில் ஸ்காட்லாந்தின் RC சவுத் குயின்ஸ்ஃபெரியில் சேர்ந்தார், அவருக்கு அப்போது 26 வயது, ஹெதரை திருமணம் செய்து சில காலமே ஆகியிருந்தது. ''அவரை நான் இசை மூலம் சந்தித்தேன். ஹெதர் ஒரு ஓபரா பாடகர் மற்றும் நாங்கள் எங்கள் பதின்ம வயதின் பிற்பகுதியில் சந்தித்தோம். நாங்கள் இருவரும் பட்டம் பெற்று, பின்னர் 1980இல் திருமணம் செய்துகொண்டோம். தம்பதியினர் எடின்பர்க்கின் புறநகரில் குடியேறினர், அவர்களது தேவாலயத்தின்



தென் அமெரிக்காவில் உள்ள
பெரு நகரத்தில் மச்சு பிச்சு
மலையில் RIPE கோர்டன்
மெக்கினலி.





மூலம் ரோட்டேரியரான ஒரு விவசாயியை சந்தித்தனர். அவர் அவர்களை முதலில் ஒரு சமூக நிகழ்ச்சிக்கும், பின்னர் கார்டனை இரண்டு ரோட்டரி கூட்டங்களுக்கு அழைத்தார். “உறுப்பினராக நான் தயார்படுத்தப்படுகிறேன் என்பதை அறியாமல், அவற்றை நான் ரசித்தேன்!”

அவர் அச்சங்கத்தின் இளைய உறுப்பினர், சில வருடங்கள் அப்படியே இருந்தார்; “இப்போது 39 ஆண்டுகளுக்குப் பிறகு, சங்கத்தின் ஐந்து இளைய உறுப்பினர்களில் நானும் ஒருவராக இருக்கலாம். முழு சங்கத்திற்கும் வயதாகி விட்டது, எனது பகுதியில் ரோட்டரி எதிர்கொள்ளும் பெரிய சவால் இது என்று அவர் கூறுகிறார்.

மற்றவர்களை போலவே நான் ஒரு ரோட்டரி சங்கத்தின் உறுப்பினராக இருந்தேன். அனால் ஏதாவது நிகழ்வு ஒன்று உங்களை ஒரு ரோட்டரியராக மாற்றும்! அவருடைய விஷயத்தில், அவர் இணைந்த ஒரு வருடத்திற்குள், இங்கிலாந்தில் இருந்து PRIP பில் ஹன்ட்லி பேசு வதைக் கேட்டது தான் அந்த நிகழ்வு’. தனது ரோட்டரி பயணத்தைப் பற்றியும், சங்கம், மாவட்டம், மண்டலம் தாண்டி ரோட்டரி என்ன சாதிக்கிறது என்பதைப் பற்றியும் அந்த அற்புதமான பேச்சாளர் பேசினார். இது எதை பற்றியது என்று எனக்கு அன்று புரிந்தது. இது உள்ளூர் அல்லது தேசிய பிரச்சினைகளைப் பற்றியது மட்டுமல்ல. இது உலகம் முழுவதும் ஒன்றுபட்ட, ஒரே மனதுடன், உலகை சிறந்த இடமாக மாற்றுவதற்கு ஒன்றாகச் செயல்படக்கூடிய மக்களின் வலையமைப்பு.உங்கள் கிராமத்தை சிறந்த இடமாக மாற்றுவது சிறந்தது ஆனால் உலகத்தை சிறந்த இடமாக மாற்றும் ஆற்றல் உங்களிடம் இருந்தால் அது எவ்வளவு சிறந்ததாக இருக்கும்!”

இந்த எண்ணங்கள் அந்த இளம் பல் மருத்துவரின் மனதில் ஓடின, மேலும் ரோட்டரி மூலம் அவர் உலகின் பிற பகுதிகளிலும் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று உறுதியாக நம்பினார்.

மெக்கினலி 33 வயதில் தனது சங்கத்தின் தலைவராகவும், 39 வயதில் கவர்னராகவும், 46 வயதில் RIBI (ரோட்டரி இன்டர்நேஷனல் அஃப் கிரேட் பிரிட்டன் அண்ட் அயர்லாந்த்) தலைவராகவும், 49 வயதில் RI இயக்குநராகவும் ஆனார். அவர் 2007–09 வரை அசோக் மகாஜனுடன் இணைந்து RI வாரியத்தில் பணியாற்றினார். பின்னர் எனது வணிக விவகாரங் களை ஒழுங்கமைக்க சிறிது ஓய்வெடுத்தேன். நேர்மையாகச் சொல்ல வேண்டுமென்றால் ரோட்டரியை ஒரு வாழ்க்கைப் பாதையாக நான் ஒருபோதும்



# ஹெதர்-கூற்று

*அவர் கணவர் தலைவராக நியமனம் செய்யப்பட்டிருப்பதால் அவர்களது நேரத்தை அது எடுத்துக்கொள்வது பற்றி அவர் பெருமிதம் கொண்டாரா அல்லது கவலைப்பட்டாரா என்று RIPE மெக்கினலியின் துணைவியார் ஹெதரிடம் நான் கேட்டேன். "அது என்னை ஒருபோதும் கவலையடையச் செய்யவில்லை, ஏனென்றால் எங்கள் குடும்பம் முழுவதுமே வாழ்நாள் முழுவதும் ரோட்டரியில் ஈடுபட்டுள்ளது. எங்கள் மூத்த மகள் பிறப்பதற்கு முன்பிலிருந்தே கார்டன் ரோட்டரியில் இருந்தார். அதனால் அது எனக்கு பிரச்சனை இல்லை," என்றார்.*

*ஆனால் அவர்கள் பேத்திகளை விட்டு விலகி இருக்க வேண்டும் என்பது ஒரு கவலையாக இருந்தது. "இது கொஞ்சம் பிரச்சனையாக இருந்தது, ஆனால் கோவிட் நம் அனைவரையும் மாற்றியமைத்தது, ஏனென்றால் அது நம்மை ஜூம்மிடம் அழைத்து சென்றது. மேலும் கோவிட் சமயத்தில் நாங்கள் எங்கள் பேத்திகளுக்கு படுக்கை நேரத்தில் கதைகளை ஜூம் வழியாக படிப்போம்." அந்த காட்சி ஊடகம் இப்போது பேரக்குழந்தைகளுடன் இன்னும் அதிக நேரத்தை செலவிட அவர்களை அனுமதித்துள்ளது. "இப்போது அவர்கள் எங்களுடன் எப்போதும் தொடர்பில் இருக்கிறார்கள், நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்கள், எங்களுக்கு படங்களை அனுப்ப முடியுமா என்று கேட்கிறார்கள்."*

*கணவரின் சாதனையைப் பற்றி அவர் கண்களில் மினுமினுப்புடன் கூறுகிறார்: நாங்கள் எங்கள் வாழ்நாள் முழுவதும் எல்லாவற்றிலும் ஒன்றாக உழைத்தோம். அது ரோட்டரி அல்லது மற்ற விஷயங்கள் என எதுவாக இருந்தாலும் சரி. அவருடைய சிந்தனை செயல்முறை என்னவென்று எனக்குத் தெரியும், எனது சிந்தனை செயல்முறை என்னவென்று அவருக்குத் தெரியும், எனவே நாங்கள் அதைப் பற்றி விவாதித்தோம், அவர் பெயரை முன்வைக்கும் முன், நீ அதை விரும்பவில்லை என்றால், நான் அதை செய்யமாட்டேன் என்று மிகத் தெளிவாகச் சொன்னார்!".*

*மெக்கினலி தலையிட்டு ஒரு தலைமைப் பதவியை ஏற்கும் போது ரோட்டேரியரின் வாழ்க்கைத் துணை வகிக்கும் முக்கியப் பங்கை வலியுறுத்துகிறார். "நான் இதை முன்பே சொன்னேன், உங்களுக்கு ஒரு துணை இருந்தால் அவருடைய ஆதரவு உங்களுக்குத் தேவை. தலைவராக போகும் ஸ்டெபானிக்கு ஒரு வாழ்க்கைத் துணை இல்லை, இது RI-இன் தலைவராக இருக்க உங்களுக்கு ஒரு துணை கட்டாயம் இல்லை என்று நமக்கு காட்டுகிறது. ஆனால் ரோட்டரியின் எந்த தலைமைத்துவ மட்டத்திலும், அது ஆளுநராக, இயக்குநராக அல்லது தலைவராக என எதுவாக இருந்தாலும் சரி உங்களுக்கு ஒரு வாழ்க்கைத் துணை இருந்தால், அவருடைய ஆதரவு உங்களுக்குத் தேவை என்று நான் நினைக்கிறேன்.*

*ஹெதரின் ஆதரவு அவருக்கு எவ்வளவு முக்கியம்? "அது மிக முக்கியம். அவர் அடிக்கடி சொல்வது போல் நாங்கள் ஒரு குழு ஆனாலும் நாங்கள் எப்போதும் சுதந்திரமாக இருக்கிறோம்; என் வேலை என்னுடைய வேலை அவர் வேலை அவருடைய வேலை. இந்த கட்டத்தில், ஹீதர் ஒரு தெளிவான வெற்றி கூற்றை வழங்கினார். "நாம் ஒருவருக்கொருவர் மற்றவரின் பாக்கெட்டுகளில் வாழவில்லை, ஆனால் நாங்கள் எப்போதும் வீட்டிற்கு ஒரே திரும்பி வருகிறோம்."*



கருதியதில்லை, தேவைப்படும்போது வேலைகளைச் செய்ய நான் எப்போதும் என்னைத் தயார்படுத்திக்கொண்டேன். நான் டொராண்டோ மாநாட்டிற்கும், செயல்பாட்டு மறுஆய்வுக் குழுவிற்குத் தலைமை தாங்கினேன் என்றார்.

அவர் தனது வேலைக்கு சிறிது நேரம் கொடுப்பாரா என்று கேட்டதற்கு, அவர் உறுதியாக இல்லை என்று தலையசைக் கிறார்: "இப்போது முடியாது. இது ஒரு முழு நேர வேலை! முழு நேர பயிற்சியிலிருந்து பின்வாங்குவது என்று நான் ஏற்கனவே முடிவு செய்திருந்தேன்.

அப்படியானால், ஹெதர் இந்த யோசனைக்கு என்ன பதில் கூறினார்? ஹெதர் 20 ஆண்டு களாக ரோட்டேரியராக இருந்து வருகிறார். ஒன்றல்ல, இரண்டு வெவ்வேறு சங்கங்களின் தலைவராக இருக்கிறார், அதனால் அவர் எனக்கு மேல் சாதித்தவர்! என்று மெக்கினலி கூறுகிறார். நாங்கள் எப்போதும் எங்களை ஒரு குழுவாகவே காண்கின்றோம் மற்றும் ஒரு வாய்ப்பு வரும் போது நாங்கள் ஒன்றாக உட்கார்ந்து ஒரு பகுப்பாய்வு செய்கிறோம். இந்த முறையும் எங்கள் நிலையான மாநாட்டில் இதை செய்வதால் என்னால் எதவாது சாதிக்க முடியுமா என்று விவாதித்தோம். என்னால் முடியும் என்று முடிவு செய்தோம், அதனால் தான் இப்போது நாங்கள் இங்கே இருக்கிறோம்!

அந்த தம்பதியருக்கு இரண்டு மகள்கள் உள்ளனர். அவர்கள் "ரோட்டரியில் வளர்ந்தவர்கள்", ஆனால் அவர் கவர்னர், RIBI தலைவர் மற்றும் RI இயக்குனராக

பொறுப்பேற்ற போது அவர்கள் ஒப்பீட்டளவில் சிறியவர்களாக இருந்தனர். “அது அவர்களுக்கு சுலபமாக இருந்திருக்காது. ஆனால் மிகவும் ஆதரவான தாத்தா பாட்டி இருந்ததால், நாங்கள் வெளியே செல்ல வேண்டிய போது அவர்களை கவனித்துக் கொண்டனர். “எங்கள் ஒரு வருத்தம் என்னவென்றால், இந்த தருணத்தை பகிர்ந்துக் கொள்ள எங்கள் பெற்றோர் யாரும் இப்போது உயிருடன் இல்லை”

RI தலைவராக தனது முன்னுரிமைகள் குறித்து, மெக்கினலி தொடர்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். “நீங்கள் ஒரு வருடத்தில் உலகை மாற்றப் போவதில்லை. நான் சங்கத்தலைவர், கவர்னர் மற்றும் இயக்குநராக இருந்த போது இதைப் பற்றி நிறைய பேசியிருக்கிறேன். ஒற்றை வருட மனநிலையிலிருந்து… குறிப்பாக தலைவரின் அகம்பாவத்திலிருந்து நாம் விடுபட வேண்டும். விமான நிலையங்களில் மாலை அணிவித்து வரவேற்பது மகிழ்ச்சியாக இருந்தாலும், அது சிலரது தலையில் ஏறிக்கொள்ள அவர்கள் தங்கள் சொந்த விளம்பரத்தை நம்பத் தொடங்குவதையும் நான் பார்க்கிறேன்.

ஆனால் உண்மை என்ன வென்றால், “நாம் அனைவரும் ரோட்டேரியர்கள், நான் ஒரு வேலையைச் செய்கிறேன்; இந்த ஆண்டு நான் செய்யும் வேலை, நான் ரோட்டரியில்

## ரோட்டரியில் பெண்கள்

*RID 3212-இன் முதன்மைத் திட்டமான “யாதுமானவள்”, தமிழ்நாட்டின் சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களைச் சேர்ந்த பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் ரோட்டரி நியூஸின் ஏப்ரல் கவர் ஸ்டோரியை RIPE கோர்டன் மெக்கினலிக்கு காட்டினேன். “இது அற்புதமானது” என்று மெக்கினலி பதிலளித்தார். “ஆனால் நாம் இப்போது பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது பற்றிய நம் மொழியை மாற்றத் தொடங்க வேண்டும். நான் உங்களுக்கு அதிகாரம் அளிக்கப் போகிறேன் என்று கூறுவது ஆணாதிக்கமாக நினைக்கிறேன். ஏற்கனவே இருக்கும் திறனை வெளிக்கொணர நான் உங்களுக்கு உதவப் போகிறேன் என்று நான் சொல்வேன். பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் என்பதற்கு பதிலாக பெண்களின் அதிகாரம் என்று கூறுவோம். இது வார்த்தைகளில் விளையாடுவது போல் இருக்கலாம், ஆனால் இது ஒரு முக்கியமான வேறுபாடு என்று நான் நினைக்கிறேன், நாங்கள் உங்களுக்கு அதிகாரம் வழங்குகிறோம் என்பதல்ல, பெண்களுக்கு அந்த சக்தி ஏற்கனவே இருக்கிறது. நாங்கள் அதை வெளிக்கொண்டுவர மட்டுமே உதவுகிறோம். பெண்களை நம்மால் உயர்த்த முடிந்தால் எல்லாவற்றிலும் நாம் சாதிக்க முடியும்.*

*DEI மற்றும் அவரது அணியில் இந்தியாவைச் சேர்ந்த ஏழு பெண் ஆளுநர்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது என்று அவர் கூறுகிறார். ஆனால் அடுத்த ஆண்டு, அந்த எண்ணிக்கை ஒன்றுக்கு திரும்புகிறது என்பதை நான் சுட்டிக்காட்டினேன், அதற்கு மெக்கினலி “ஆனால் அது இயல்பாக நடப்பது, அதற்கு காரணம் நாம் கவர்னர்களை தேர்ந்தெடுக்கும் விதம், கடந்தகால கவர்னர்கள் உள்வரும் கவர்னர்களை தேர்வு செய்கிறார்கள், வரலாற்று ரீதியாக கடந்தகால கவர்னர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்களே என்றார். ஆனால் எந்த உரையாடலும் ‘ரோட்டேரியர்கள்’ பற்றியதாக இருக்க வேண்டுமே தவிர ‘பெண் ரோட்டேரியர்கள்’ பற்றியதாக இருக்கக்கூடாது என்று அவர் தெளிவாக கூறுகிறார்; ஏனெனில் அந்த பயன்பாடு “பெண்களை ஒரு துணைப்பிரிவாக மாற்றும். நான் ஒரு ஆண் ரோட்டேரியன் என்று என்றுமே அழைக்கப்பட்டதில்லை. ஆனால் ஹெதர் ஒரு பெண் ரோட்டேரியன் என்று அழைக்கப்படுகிறார். அவர் என்னைப் போலவே சந்தா செலுத்துகிறார், அவர் ரோட்டரிக்காக நிறைய வேலை செய்கிறார். எனவே அவரும் ஒரு ரோட்டேரியர் என்று அறியப்பட வேண்டும்.*

*ஆனால் அவர் ஒப்புக்கொள்கிறார், “ஆனால், நாம் அதைப் பற்றி இன்னும் பேச வேண்டும். நான் கேட்பதெல்லாம், அந்த வேலைக்கு சரியான மற்றும் தகுதி வாய்ந்த நபர்களைப் பெற வேண்டும் என்பதே. அதனால் தான் நான் நீண்ட காலமாக அறிந்த ஜெனிஃபர் (ஜோன்ஸ்) இந்த ஆண்டு தலைவராக இருப்பதிலும், ஸ்டெபானி (உர்ச்சிக்) அடுத்த ஆண்டு தலைவராக இருப்பார் என்பதிலும் நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் பெண்கள் என்பதால் மட்டுமல்ல அந்த வேலைக்கு சிறந்தவர்கள் என்பதால் அவர்கள் அங்கு இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். எந்த பெண்ணாக இருந்தாலும் அந்த வேலையைப் பெற விரும்புவார்கள்.”*





TRF *அறங்காவலர் அஜீஸ் மேமனுடன் பாக்கிஸ்தானில் மெக்கினலி போலியோ சொட்டு மருந்து அளிக்கிறார்.*



சேர்ந்த காரணத்திலிருந்து என்னைப் பிரித்துள்ளது, அது எனது சங்கத்தின் உறுப்பினராக பணியாற்றுவது ஆகும். எனவே இது எனது ஆண்டு என்ற மனநிலையிலிருந்து விடுபட விரும்புகிறேன், இது ரோட்டரியின் ஆண்டுகளில் ஒன்றாகும், மேலும் ரோட்டரி 118 ஆண்டுகளாக உள்ளது, இன்னும் பல ஆண்டுகள் இருக்கும்.

இந்த ஆண்டு அவர் ஊக்கு விக்கும் புதிய முயற்சி மனநலம் பற்றியது. மன ஆரோக்கியத்தைப் பொருத்தவரை இந்த நேரத்தில் உலகம் மிகவும் மோசமான இடத்தில் உள்ளது, குறிப்பாக கோவிட் காரணமாக. நீண்ட காலமாக இது பேசப்படாத விஷயமாக இருக்கிறது. அதைச் சுற்றி ஒரு களங்கம் உள்ளதாக கருதப்படுகிறது. மக்கள் தாங்கள் கவலை அல்லது மனச்சோர்வினால் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்ல விரும்புவதில்லை. இது இன்னும் மோசமாகிவிடும். எனவே நாம் அதை பற்றி வெளிப்படையான உரையாடலை நிகழ்த்தி, அதன் மேல் இருக்கும் களங்கம் மற்றும் தடைகளை அகற்ற வேண்டும். வெவ்வேறு பகுதிகளில் இதன் சவால்கள் மிகவும் வேறுபட்டவை.''

அவரது ஆண்டில் உலகம் போலியோ இல்லாததாக மாறுவதற் கான சாத்தியக்கூறுகள் குறித்து, மெக்கினலி இவ்வாறு கூறுகிறார்: இது எனது ஆண்டு அல்ல; இது ஒரு ரோட்டரி ஆண்டு, ஆனால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. ஆம், ரோட்டரியர்களான நாங்கள் இதைப் பற்றி எப்போதும் சிந்திக்கிறோம். இந்த ஆண்டு போலியோவின் கடைசி நோயாளியைப் பார்ப்போம் என்று நினைக்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால் அது நடக்கும்போது நான் தலைவராக இருப்பது முக்கியமல்ல. அது நடக்கும் என்பது தான் முக்கியம்.''

போலியோவை முடிவுக்கு கொண்டு வந்த பின் அடுத்த பெரிய ரோட்டரி முன்முயற்சியை பற்றி கேட்டதற்கு உள்வரும் தலைவர் சிரித்துக்கொண்டே கூறுகிறார்: போலியோ முடியும் வரை நாங்கள் எதை பற்றியும் யோசிக்க விரும்பவில்லை. சாம்பியா மற்றும் நைஜீரியாவில்- TRF-இன் புதிய ப்ரோக்ராம்ஸ் அஃப் ஸ்கேல்ஸ் திட்டத்தை கண்டு அவர் மிகவும் மகிழ்ச்சியடைகிறார். இது எதிர்காலத்திற்கு ஒரு முன்மாதிரியாக இருக்கலாம். ''ஒரு தனிப்பட்ட கருத்தில், மனநல முன்முயற்சி நீண்ட கால உலகளாவிய திட்டமாக மாறுவதை நான் பார்க்க விரும்புகிறேன். இது ஒரு 12 மாத திட்டமாக இருக்க முடியாது என்று எனக்குத் தெரியும், மேலும் ஸ்டீபனி அதைத் தொடர மிகவும் ஆர்வமாக இருப்பார் என்று என்னால் நம்பிக்கையுடன் சொல்ல முடியும்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத் மற்றும் சிறப்பு ஏற்பாடு.

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

# மனநோய் மருத்துவ வசதிகள் புதுப்பிப்பு

**கிரண் ஜெஹரா**




கிரண் ஜெஹரா

*RIPE கோர்டன் மெக்கினலி மற்றும் ஹெதர் புதுப்பிக்கப்பட்ட வார்டின் முன், DG N நந்தகுமார், PDG J ஸ்ரீதர், சங்கத்தலைவர் ஸ்ரீதர் சங்கத்தலைவர் எமிலி டைடஸ் ஆகியோருடன்.*

சென்னை, கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவ நிலையத்துக்குள் நுழைந்து 800 மீட்டர் தொலைவு செல்லும்போதே அந்த சாலையில் அடர்ந்த உயரமான மரங்கள், செடிகள், பறவைகளின் ஒலிகள், இதமான காற்று, அமைதியான சூழல் மற்றும் அதன் பிரதான கட்டடம் நம்மை வரவேற்கிறது. அவற்றை கடந்து சென்றால், சுமார் 100 மனநோயாளி களுக்கு அடைக்கலம் தரும் 15-வது பிளாக் உள்ளது. பழமையான அந்த கட்டிடம், RID 3232-க்கு உட்பட்ட சென்னை இண்டஸ்டிரியல் சிட்டி ரோட்டரி சங்கத்தின் முன்முயற்சியில் புதுப்பொலிவு பெற்று வருகிறது. இதற்கான மொத்த திட்ட மதிப்பீடு 112,000 டாலர் (ரூ.93.5 லட்சம்). எனினும் முதல் கட்டமாக வார்டு எண் 6, 12,050 டாலர் (ரூ.10.24 லட்சம்) மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

RID A S வெங்கடேஷ் மற்றும் DG நந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் இந்த புதிய பிளாக்கை RIPE கோர்டன் மெக்கினலி திறந்து வைத்தார். மனநல பிரச்னைகளை மிகவும் திறமையாக கையாளவேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். மனநலம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்பது எனது விருப்பமாகும். நமது ரோட்டரி சங்கத்தினர் உள்ளூர் சூழநிலைக்கு ஏற்ப அதன் தேவைகளை கண்டறிந்து அதற்கு ஏற்ப மனநலத் திட்டங்களை செயல்படுத்த முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வார்டு 15-இல் மனச்சிதைவு நோய் (சைக்கோன்பெரினியா), உளச்சோர்வு நோய் (பைபோலார்) மற்றும் ஆளுமைச்சிதைவு நோய் (பர்சனாலிட்டி டிஸ்ஸாடர்) போன்ற கடுமையான மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்திய மனநல மருத்துவ கழகத்தின் இயக்குநர் டாக்டர் M மலையப்பன் கூறுகையில், ஒரு நாளைக்கு 500 நோயாளிகள் இங்கு வருகின்றனர். சமூகத்தில் மனநல பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கான முக்கியத் துவத்தை இதிலிருந்தே நாம் தெரிந்து கொள்ளலாம். எனினும் 15-வது வார்டு உள்பட எங்களின் பல மருத்துவ வசதிகள் காலாவதி யானவை. அவை புதுப்பிக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளன என்று தெரிவித்தார்.

நோயாளிகளுக்கு பாதுகாப்பான, வசதியான மற்றும் அமைதியான சூழலை ஏற்படுத்தித் தருவதே எங்கள் நோக்கமாக இருந்தது என்று PDG மற்றும் சங்க உறுப்பினர் J ஸ்ரீதர் தெரிவித்தார். நோயாளிகள் சிகிச்சை பெற்று நன்கு குணமடைவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் சங்கம் மிகச்சிறந்த பங்களிப்பு செய்துள்ளதாகக் கூறி சங்கத்தின் தலைவர் எமிலி டைட்டஸ் மகிழ்ச்சி தெரிவித்தார்.■




ADVT.

ADMISSIONS 2023-24

# Shri Vaishnav Vidyapeeth Vishwavidyalaya, Indore

**City Office:** Shri Vaishnav Vidya Parisar, 177 Jawahar Marg, South Rajmohalla, **INDORE**-2
**Campus:** Indore-Ujjain State Highway, **INDORE**-453111.
**Mob.:** 9303700163, 9303700164, 9303700165, 9303700166, 9303700168

## YOU HAVE BEEN BRILLIANT IN YOUR EXAMS, NOW BE WISE IN CHOOSING THE UNIVERSITY!

Scholarships for the Meritorious Students | Relief for the Children of COVID-19 Warriors

## EXCELLENT TRACK RECORD

Approved under Section 2(f) of the UGC Act, 1956

↗ MoU with Hanyang University, South Korea ; St. Cloud State University, USA ; University of Science & Technology, Meghalaya for Student/Faculty Exchange and Joint Research. ↗ MoU with TCS for Technical Collaboration. ↗ MoU with NRDC (Ministry of Science & Technology) for transfer of technology to industry. ↗ MoU with NCSSS (National Cyber Safety and Security Standards) for Technical Collaboration. ↗ MoU with Tata Power Ltd. for Technical Collaboration. ↗ Agreement with CISCO Network Academy. ↗ Agreement with Bosch India. ↗ MoU with Microsoft Corporation (India) Pvt. Ltd. for Technical Collaboration. ↗ MoU with IBM for Technical Collaboration. ↗ MoU with Red Hat for Technical Collaboration. ↗ Apple Authorised Training Centre Agreement for Education. ↗ MoU with Mitsubishi Electric India. ↗ MoU with ICT Academy ↗ MoU with Mahatma Gandhi National Council of Rural Education (MGNCRE), Government of India, Ministry of Education. ↗ MoU with Impetus Technology India Pvt. Ltd. for Technical Collaboration. ↗ MoU with Manmade Textiles Research Association (MANTRA) for Technical Collaboration ↗ MoU with ICAR- Indian Institute of Soybean Research ↗ MoU with (TSPL), Mumbai for high quality paramedical education to the students. ↗ Fees Structure is approved by the Government of Madhya Pradesh. ↗ Ranked jointly by Innovation Cell of the Ministry of Education (Government of India) and AICTE in Top 50 Most Preferred Institutions in 2021.

### ENGINEERING AND TECHNOLOGY

**B. Tech.** (4 years)
Agricultural Engineering/Automobile Engineering/ AE (Electric Vehicle Engineering)/ Civil Engineering/Electronics and Computer Science Engineering/Electrical Engineering (Solar Energy-Tata Power)/Electrical & Electronics Engineering/Electrical Engineering/ Electronics and Communication Engineering/ EC (Internet of Things)/ ME (Artificial Intelligence & Machine Learning)/ CE (Artificial Intelligence & Machine Learning)/ ECE (Artificial Intelligence & IoT)/ Electronics and Instrumentation Engineering/ Instrumentation & Control Engineering/ Mechanical Engineering/Mechanical Engineering (Plant Engineering-Tata Power)/ Mechatronics/ Railway Engineering/Robotics and Automation/Electronics (VLSI Design & Technology)

**M. Tech.** (2 years)
Civil (Geotechnical Engineering)/ Civil (Structural Engineering)/Civil (Transportation Engineering)/Civil (Water Resources Engineering)/Digital Communication/ Digital Instrumentation/ Embedded System & VLSI design/Industrial Engineering/ Mechanical (Thermal and Design Engineering)/ Power Electronics/Power System / Renewable Energy/ Virtual Instrumentation/ Construction Technology & Management/ Automation & Robotics

**Diploma Programs** (3 years)
Automobile Engineering /Civil Engineering/ Electrical Engineering /Electronics and Instrumentation Engineering/Electronics Engineering/Mechanical Engineering/ Mechatronics Engineering/ Solar Energy / Integrated Circuit (IC) Manufacturing

**B. Tech.** (4 years)
Computer & Communication Engineering/ Computer Science & Business Systems- (TCS)/ Computer Science Engineering/CSE (Mobile Applications)-Apple (AATCE)/ CSE (Artificial Intelligence - IBM)/ CSE (Big Data and Cloud Engineering-Impetus)/CSE (Data Science-IBM)/ CSE (Enterprise System- red hat)/ CSE (FullStack Development & Blockchain- IBM)/CSE (Information and Cyber Security-NCSSS)/ CSE (Artificial Intelligence and Machine Learning-Microsoft)/ Information Technology/IT (Data Science-IBM)/ IT (FullStack Development & Blockchain-IBM)/ CSE (Internet of Things-IBM)

**M. Tech.** (2 years)
Computer Science Engineering/ Computer Science Engineering (Big Data Analytics)/ Computer Communication Engineering/ Information Security

**Dual Degree Programs**
**B. Tech. + M. Tech.** (4+2 years)
Computer Science Engineering/ Computer Science Engineering (Big Data Analytics)/ Computer Science Engineering (Cloud Computing)/Computer Science Engineering (Cyber Forensic)/Information Communication Technology/ Information Technology.

**B. Tech. + MBA** (4+2 years)
Computer Science Engineering/ Information Technology

**Diploma Program**
**One-Year** Post Graduate Diploma in Computer Applications (PGDCA)
**Six-Months** Diploma in Computer Hardware and Networking (DCHN)

**B. Tech.** (4 years)
Garment & Fashion Technology/ Textile Engineering/ Technical Textiles

**M. Tech.** (2 years)
Textile Engineering/Textile Chemistry

**B. Sc.** (4 years) Fashion Design

**Diploma Program** (3 years)
Textile Engineering

### FORENSIC SCIENCE

**B.Sc. (Hons.)** (4 years)
Digital & Cyber Forensics

**B.Sc.** (3 years)
Forensic Science/ Forensic Psychology

**B.A./ B.Sc.** Criminology

**M.Sc.** (2 years) Forensic Science/ Forensic Psychology/ Cyber Forensics

**M.A./ M.Sc.** (2 years) Criminology

**Dual Degree Program**
**B.Sc.+ M.Sc.** (3+2 years)
Forensic Science/ Forensic Psychology

### ARCHITECTURE

**B.Arch.** (5 years)

**B.Des.** (4 years) Interior Design/ Product Design/Graphics & Animation

**M.Des.** (2 years) Interior Design

**M.Des.** Graphics & Animation

**Dual Degree Program**
**B.Des.+ M.Des.** (4+2 years)
Interior Design/ Product Design/ Graphics & Animation

### PLANNING

**B.Plan** (4 years)

**M.Plan** (2 years) (Urban Planning)

### MANAGEMENT

**MBA** (2 years)
Engineering Management/ Family Business & Entrepreneurship/ International Business/ Media Management/Agri-business/ Business Analytics/Advertising and Public Relations/Tourism/ Rural Management-MGNCRE/ Hospital & Healthcare Management/ Marketing/ Human Resource/ Finance/ Fintech

**BBA (Hons.)** (4 years)
**BBA** (3 years)
**BBA (Fintech)** (3 years)
**BBA (Rural)** (3 years)

**Dual Degree Programs**
**BBA + MBA** (3+2 years)
Marketing/HR/Finance/Operations/ Fintech/Rural Management-MGNCRE

**MBA** (2 years) (Industrial Management)
Open to Engineering Graduates only.

### JOURNALISM AND MASS COMMUNICATION

**M.A.** (2 years)
Journalism and Mass Communication/ Hindi Journalism

**Dual Degree Program**
**B.A. + M.A.** (3+2 years)
Journalism and Mass Communication

### FINE ARTS

**BFA** (4 years)
Painting/ Animation

**MFA** (2 years)
Painting/ Animation

### AGRICULTURE

**B.Sc. (Hons.)** (4 years) Agriculture

**M.Sc.** (2 years)
**Agriculture/ Horticulture**
Genetics and Plant Breeding/ Entomology/ Plant Pathology/ Soil Science & Agricultural Chemistry/ Agronomy/ Horticulture (Fruit Science)/ Horticulture (Vegetable Science)/Agricultural Economics/ Agricultural Extention Education / Live Stock Production & Management

### SCIENCE

**B.Sc.** (3 years)
Physics/ Chemistry/ Maths/ Life Science/ Computer Science/ Biotechnology/ Electronics/ Instrumentation/ Statistics/ Economics

**B.Sc. (Hons.)** (4 years)
Physics/ Chemistry/ Maths/Computer Science/Biotechnology/Electronics/ Instrumentation/Statistics/Economics

**M.Sc.** (2 years)
Physics/ Chemistry/ Maths/ Environmental Science/ Analytical Chemistry/Biotechnolgy

**Dual Degree Program**
**B.Sc. + M.Sc.** (3+2 years)
Physics/ Chemistry/ Maths/ Statistics

### COMPUTER APPLICATIONS

**BCA** (3 years) Big Data Analytics-IBM

**B.Sc.** (3 years) Data Science

**M.Sc.** (2 years) Computer Science

**MCA** (2 years) Banking Technology

**MCA** (2 years)

**Dual Degree Programs**
**BCA + MCA** (3+2 years)
**BCA + MCA** (3+2 years)
Banking Technology

### SOCIAL SCIENCES, HUMANITIES AND ARTS

**B.A.** (3 years)

**B.A. (Hons.)** (4 years)
Psychology/ Economics/ Public Administration/ English Literature/ Sociology/Political Science/ Anthropology/ History/ Hindi Literature/ Sanskrit

**B.S.W.** (3 years)

**M.A./M.Sc.** (2 years)
Psychology/ Applied Psychology/ Public Administration/ Clinical Psychology/ Counselling Psychology/ English Literature/ Sociology/ Economics/ Education/Anthropology/History/ Political Science/Hindi Literature/Sanskrit

**M.S.W.** (2 years)

**Dual Degree Program**
**B.S.W. + M.S.W.** (3+2 years)

**B.Lib. I.Sc. + M.Lib. I.Sc.**

**One- Year Advanced Diploma in French**

### COMMERCE

**B.Com (Hons.)** (4 years)
Banking & Finance/ Entrepreneurship/ Tax Procedure/ Computer Applications

**B.Com** (3 years)
Banking & Finance/ Entrepreneurship/ Tax Procedure/ Computer Applications

**M.Com** (2 years)

**Dual Degree Programs**
**B.Com+ M.Com** (3+2 years)
**B.Com + MBA** (3+2 years)

### LAW

**LL.B (Hons.)** (3 years)

**LL.M** (2 years) Business Law/ Criminal Law

**LL.M** (1 year)
(Business Law, Criminal Law, Human Rights)

**Integrated Programs** (5 years)
**B.A.LL.B (Hons.)**
**B.B.A.LL.B (Hons.)**
**B.Com. LL.B (Hons.)**

### HOME SCIENCE

**M.Sc.** (2 years) Food & Nutrition

**Dual Degree Program**
**B.Sc.+ M.Sc.** (3+2 years) Food & Nutrition

### PARAMEDICAL SCIENCES

**Bachelor of Medical Lab. Technician** (3 years)

**DIPLOMA PROGRAMS** (2 years)
X ray Radiographer Technician/ Medical Lab. Technician/ Cath. Lab. Technician/ Dialysis Technician/ Optometric Refraction/ Optometrist Contact Lens/ Anesthesia Technician/ Yoga/ Naturopathy

**Teaching Assistanceship (TA) of ₹12,400 (Rupees Twelve Thousand Four Hundred Only) for all GATE Qualified Candidates admitted in 02 years full time M.Tech Program, subject to MHRD/UGC/AICTE Guidelines**

**Note: (1) SVET-2023 for Ph.D in all streams will be held on May 28, 2023. (2) Lateral Entry seats are available in B.Tech. (3) SVET (Shri Vaishnav Entrance Test) will be held on May 21, June 4 & 18, July 2 and 16, August 6 and 20, 2023. The seats in various programs will be filled on the basis of prescribed Tests/ SVET-2023.**

### FACULTY OF DOCTORAL STUDIES & RESEARCH

Management/ Physics/ Chemistry/ Maths/ Life Science/ Psychology/ Library Science/ Computer Applications/ Computer Science/ Computer Engineering/ Environmental Science/ Electronics Engineering/ Electrical Engineering/ Mechanical Engineering/ Textile Technology/ Civil Engineering/ IT/ Forensic Science/ English/ Journalism and Mass Communication/ Biotechnology/ Fine Arts/ Agriculture/ Economics/ Political Science/Commerce/ Sociology/ Anthropology/ Public Administration /Design/ Education/ Law / Fashion Design / History

**Toll Free: 1800 233 9111**
**Helpline: 1800 102 9191**

SEPARATE HOSTEL FACILITY FOR BOYS & GIRLS.

Scan me

**For details, visit: www.svvv.edu.in admission@svvv.edu.in**

# பெரிய கனவுகளை காணுங்கள்

**ரஷீதா பகத்**

“பெரிய கனவு காணுங்கள்... பணம் எங்கிருந்து வரும் என்று கவலைப்படாதீர்கள், தோல்வியைப் பற்றி கவலைப்படாதீர்கள். நீங்கள் கனவே காணவில்லை என்றால் தோல்வியடைய மாட்டீர்கள் அது எப்படி நீங்கள் உங்கள் வீட்டை விட்டு வெளியேறவில்லை என்றால் உங்கள் இலக்கை அடைய மாட்டீர்களோ அது போன்றது! உலகின் மிகப்பெரிய தோல்விகளை நீங்கள் பார்க்க விரும்பினால், ஆபிரகாம் லிங்கனின் தோல்விகளை கூகுள் செய்து பாருங்கள். அவர் முயற்சித்த எல்லாவற்றிலும் அவர் தோல்வியுற்றார், இருப்பினும் அவர் வரலாற்றில் மிகவும் வெற்றிகரமான நபர்களில் ஒருவர்.

சமீபத்தில் கொல்கத்தாவில் RIDE அனிருதா ராய் சௌத்ரி ஏற்பாடு செய்த “லக்ஷ்யா” இலக்கை நிர்ணயிக்கும் நிகழ்வில், DGE மற்றும் DGகளை கடந்த RI தலைவர் சேகர் மேத்தா இந்த வார்த்தைகளை கூறி வலியுறுத்தினார்.

DGEகள் அவர்கள் கவர்னர்களாக பதவியேற்ற ஆண்டை நெருங்கும் போது அவர்களின் பயணத்தில் IA மற்றும் GETS ஆகியவை முக்கியமான நிகழ்வுகளாக இருந்திருக்கும், அதேபோல் PDG E K சகாதேவன் தலைமையில் நீங்கள் இப்போது கலந்துகொண்டிருக்கும் “லக்ஷ்யா” இலக்கை நிர்ணயிக்கும் நிகழ்வு, அந்த நிகழ்வுகளை போன்றே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். DG-இன் பயணத்தில் மிக முக்கியமான நிகழ்வுகளில் இதுவும் ஒன்று என்று நான் நம்புகிறேன், என்று மேத்தா கூறினார். “ஜூலை 1 முதல் நீங்கள் அனைவரும் ஒரு ரோலர் கோஸ்டர் சவாரியில் இருப்பீர்கள். இங்கே நீங்கள் உங்கள் வாழ்க்கையின் உச்சங்களையும், அதன் சிலிர்ப்பான மற்றும் உற்சாகமான தருணங்களையும், மற்றும் தாழ்ந்த தருணங்களையும் காண்பீர்கள்.”

வரவிருக்கும் ரோட்டரி ஆண்டின் 366 நாட்கள் (2024 ஒரு லீப் ஆண்டு) உங்கள் வாழ்க்கையின் மிகவும் உற்சாகமான மற்றும் மதிப்புமிக்க நாட்களாக இருக்கும் என்று நான் கூறுவேன். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி உங்கள் மனதுக்கு நிறைவாக சமூக சேவையைச் செய்யுங்கள்.

4, 5, 6 மற்றும் 7 ஆகிய மண்டலங்கள் செய்யும் “அற்புத மான பணியை” உதாரணம் காட்டி கடந்த ஆண்டு இந்த நான்கு மண்டலங்களும் புதிய உறுப்பினர்களைப் பெறுவதில் முன்மாதிரியான பணியை மேற்கொண்டதால் தான் நீண்ட காலத்திற்குப் பிறகு முதல் முறையாக ரோட்டரியின் உறுப்பினர் எண்ணிக்கை குறைந்து வந்தது தடுத்துத் நிறுத்தப்பட்டுள்ளது, என்றார். TRFக்கு கொடுப்பதில் கூட, “நீங்கள் 2வது இடத்தில் இருந்தீர்கள், இப்போது நீங்கள் 3வது இடத்திற்கு சரிய கூடாது.”

பெரிய கனவு காண்பது மட்டுமே அவர்களுக்கு அவர் அளித்த அறிவுரை; “போலியோவை ஒழிப்பதை விட பெரிய கனவு என்ன இருக்க முடியும்? பல




*லஷ்யா நிகழ்வில் (இடமிருந்து) PDG H R அனந்த், நிகழ்ச்சி தலைவர் PDG E K சகாதேவன், PRIP சேகர் மேத்தா, RIDs அனிருதா ராய் சவுத்ரி, T N சுப்ரமணியன் மற்றும் PDG ராஜேந்திர ராய்.*

நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதாக இருந்த ஒரு கனவு. நம் சங்கம் ஐ.நா.வை விட அதிக நாடுகளில் பெரிய தடம் மற்றும் இருப்பைக் கொண்ட ஒரு அமைப்பாகும். ரோட்டரி கவர்னர்களை விட யார் பெரிய கனவு காண முடியும்?

மொத்த சூழலையும் முழுவதாக நோக்கும்படி அவர்களிடம் முறையிட்ட மேத்தா, அடுத்த ஒரு வருடத்தில் நீங்கள் பல லட்சம் பேரின் வாழ்க்கையை மாற்றுவீர்கள். அந்த ஆண்டில், உங்களால் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை செய்யப் படும், பல்லாயிரக்கணக்கான மக்களால் மீண்டும் பார்க்க முடியும், நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு குடிநீர் கிடைக்கும். இது தான் உங்களிடம் உள்ள சக்தி தயவு செய்து இதை கடவுளின் செயலாக நினைத்துச் செய்யுங்கள்.''

அதே போல், அவர்கள் அமைத்துள்ள வசதிகளால் ஆயிரக் கணக்கானோர் டயாலிசிஸ் செய்ய முடியும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த லக்ஷ்யாவிலும் அதற்கு முன் ரோட்டரி இந்தியாவில் தனது நூற்றாண்டை கொண்டாடிய போதும் நிறுவப்பட்ட லட்சிய இலக்குகளால் செயல்படுத்தப்பட்ட பெரிய சேவைத் திட்டங்களை அவர் உதாரணம் காட்டினார். ஒரு லஷ்யா கூட்டத்தில், மேத்தாவின் சொந்த மாவட்டம் (3291) கொல்கத்தாவில் 400 கோடி ரூபாய் செலவில் 500 படுக்கைகள் கொண்ட மருத்து வமனை கட்டுவதாக உறுதியளித்தது, மேலும் அப்போதைய DGE சமீர் ஹரியானி தனது மாவட்டத்தில் மட்டும் ரூ.800 கோடி மதிப்பிலான திட்டங்களை செயல்படுத்த உள்ளதாக உறுதியளித்திருந்தார்.

ஆனால் கோவிட் தொற்றுநோயின் பரவல் அடுத்த ஆண்டில் அந்த உயர்ந்த இலக்குகளை அடைவதற்கு தடையாக இருந்தது. எவ்வாறாயினும், தொற்றுநோய் "இப்போது கடந்ததால், 500 படுக்கைகள் கொண்ட ரூ.400 கோடி செலவிலான மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டியுள்ளோம். 1,000 பழங்குடியினப் பெண்களுக்காக ரூ.300 கோடியில் பள்ளிக்கும் அடிக்கல் நாட்டி யுள்ளோம், அங்கு அவர்களுக்கு இலவச உறைவிடம் மற்றும் கல்வி கிடைக்கும். இந்த திட்டங்கள் அனைத்தும் பெரிய கனவுகளுடன் தொடங்கியது.

ஆனால் அவை அனைத்தை காட்டிலும் பெரியது இந்தியாவை முழு கல்வியறிவு கொண்ட நாடக மாற்ற வேண்டும் என்பதுதான். எல்லாவற்றிற்கும் மேலாக, சுதந்திரம் பெற்ற 75 ஆண்டுகளில் இந்திய அரசாங்காதால் 75 சதவீத கல்வி யறிவு மட்டுமே பெற முடிந்தது. 2027-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை 97 விழுக்காடு கல்வியறிவும், 2030-ஆம் ஆண்டிற்குள் முழுமையான கல்வியறிவு பெற்ற நாடாக மாற்றுவோம் என்று மேத்தா மேலும் கூறினார்.

ஆனால் அவர் லக்ஷ்யா பங்கேற் பாளர்களை எச்சரித்தார், இது வெறும் கனவு காண்பதால் மட்டும் நிகழாது நீங்கள் நிறைய விரிவான திட்டமிடல், கூட்டு முயற்சி மற்றும் கடின உழைப்பை மேற்கொள்ள வேண்டும் அதுதான் ரோட்டரியின் மாயம்.

இந்த லட்சிய இலக்குகளை அடைய, நீங்கள் ரோட்டரிக்காக அல்ல, உங்கள் நாட்டிற்காக உழைக்கிறீர்கள் என்று நினைக்க வேண்டும். எனவே பெரிய திட்டங்களை தீட்டுங்கள்; உங்கள் சங்கத்திற்கு அத்திட்டம் மிகவும் பெரியது என்று நீங்கள் நினைத்தால், 20 பிற சங்கங்கள், மாவட்டங்கள் மற்றும் பிற நாடுகளுடன் கூட்டு சேருங்கள். உங்கள் வருடத்தில் முடிக்க முடியாமல் மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய கனவுகளை எண்ணுங்கள்.

அடையப்பட்ட சில பெரிய இலக்குகளைப் பட்டியலிட்ட மேத்தா, கடந்த ஆண்டு இந்தியா முழுவதும் 125 டயாலிசிஸ் இயந் திரங்களை நிறுவுவது இலக்காக இருந்தது. PDG J ஸ்ரீதர் ஒரு மாவட்டத்தில் இருந்து (3232) மட்டும் 135 டயாலிசிஸ் இயந்திரங்கள் நிறுவியுள்ளார்; DGE ஹிராலால்


K விஸ்வநாதன்

யாதவ் (RID 3291) உதவியுடன் 15 கண் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டன.

மேலும், பெரிய இலக்கு களை நிர்ணயிக்கும் போது அவர்கள் பணத்தைப் பற்றி கவலைப்படக்கூடாது என்றார். RI தலைவராக அவர் 40 நாடுகளுக்குச் சென்று பல நாட்டுத் தலைவர்களுக்கு, குறிப்பாக ஆப்பிரிக்காவில், இதய அறுவை சிகிச்சைக்கு உதவுவதாக உறுதியளித்தார். இந்த வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றுவது என்று அவரிடம் திட்டவட்டமான திட்டம் எதுவும் இல்லை. ஆனால் இதய அறுவை சிகிச்சைக்கான கோரிக்கைகள் வந்தபோது, ராஜேந்திர ராய், ராஜேந்தர் அகர்வால், சந்தீப் அகர்வாலா போன்ற DGகள் மற்றும் PDGகள் இவற்றைச் செய்து முடிப்பதற்கான சந்தர்ப்பத்தில் முன்வந்தனர்.

எனவே, 10 லட்சம் பேருக்கு சுகாதார முகாம் நடத்த வேண்டும், பல ரத்த வங்கிகளை அமைக்க வேண்டும் என்று இன்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். ரோட்டரி நிறுவனம் செய்த அளவுக்கு ரத்த வங்கிகளை இந்தியாவில் வேறு எந்த அமைப்பும் நிறுவியதில்லை. உங்களைச் சுற்றி 100 சதுர கிலோமீட்டரில் ரத்த வங்கி இல்லை என்றால், ஒன்றைப் அமையுங்கள். 50 கி.மீ தொலைவுக்குள் கண் மருத்துவமனை இல்லை என்றால் அதையும் அமையுங்கள். ஒவ்வொரு DG/DGE-க்கும் சில பலம் உள்ளது, ஒருவருக்கொருவர் அந்த பலத்துடன் வேலை செய்யுங்கள். டயாலிசிஸ் இயந்திரங்களை அமைப்பதற்கு ஸ்ரீதரின் உதவியை பெறுங்கள், கண் மருத்துவ மனைகளுக்கு ஹிராலால் யாதவையும், பொது மருத்துவ மனைகளுக்கு PDG சகாதேவனை யும் தொடர்பு கொள்ளுங்கள். அவர் 45 நாட்களில் 70,000 சதுர அடியில் 400 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையை (ஈரோட்டில்) கட்டினார்.

ரோட்டரியில் வரவிருக்கும் கவர்னர்களாக அவர்கள் பெறும் அதிகாரத்தைப் பற்றிய அவரது கடைசி வார்த்தைகள்: RI தலைவராக, நான் 40 நாடுகளுக் குச் சென்றேன், அவற்றில் ஒவ்வொன்றிற்கும் ரோட்டரி கொடுக்க ஏதாவது இருந்தது, அனால் கேட்க எதுவும் இல்லை. இது ஆச்சரியமாக இல்லையா?" ■

# ரோட்டரி புற்றுநோய் மருத்துவமனைக்கு நிதிதிரட்ட மராத்தான்

ரோட்டரி செய்திக் குழு



மராத்தன் நிகழ்வில் திட்டத்தலைவர் PDG Dr B A முருகநாதன் (இடது) மற்றும் DG B இளங்குமரன் (வலது), நடிகை கவுதமி, MLA செல்வராஜ், மேயர் தினேஷ்குமார் மற்றும் திருப்பூர் காவல் ஆணையர் ப்ரவீன்குமார் அபிநாப்பு.

திருப்பூரில் உள்ள ரோட்டரி சங்கங்கள் ஒருங்கிணைந்து திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை மையத்தை உருவாக்க முடிவு செய்துள்ளன. ரூ.90 கோடியிலான இத்திட்டம் PDG Dr பி.ஏ.முருதானந்தன் தலைமையில் தமிழக அரசுடன் இணைந்து செயல் படுத்தப்படும். இத்திட்டத்திற்கு தமிழக அரசு தனது பங்காக ரூ.60 கோடி பங்களிப்பு செய்கிறது. RID 3203 ரூ.30 கோடி பங்களிப்புச் செய்யும்.

இத்திட்டத்துக்கு நிதி திரட்டு வதற்காக RC திருப்பூர் காந்திநகர் சமீபத்தில் நடத்திய மராத்தான் ஓட்டம் மற்றும் நடைப்பயணத்தில் DG பி.இளங்குமரன், முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் மற்றும் மாவட்ட தலைவர்கள் உள்பட 15,000 பேர் கலந்துகொண்டனர். இதன் மூலம் நேரடியாக ரூ.85 லட்சமும், நன்கொடைகள் மூலம் ரூ.1.5 கோடியும் திரட்டப்பட்டது.■

# பிறர்மீது பரிவு காட்டுங்கள்: மதுரையில் மெக்கினலி

ரோட்டரி செய்திக்குழு

மதுரையில் நடைபெற்ற ரோட்டரி தலைமைப்பண்பு மாநாட்டில் RIDகள் 2981, 2982, 3000, 3203, 3212ஐச் சேர்ந்த சுமார் 2,000 ரோட்டரியன்களுக்கு RIPE கோர்டன் மெக்கினலி அவர்களுடன் உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. மெக்கினலி தனக்கு “மிகவும் பிடித்த தலைவர்” ஆன மகாத்மா காந்தி அவர்களிடமிருந்து ஊக்கம் பெற்றுப் பிறர்மீது பரிவையும் தொண்டு எண்ணத்தையும் பிறருடைய தனிப்பட்ட வளர்ச்சிக்கு உறுதியையும் காண்பிக்கும்படி அனைவரையும் கேட்டுக்கொண்டார். வரும் ரோட்டரி ஆண்டில் ரோட்டரி அறக்கட்டளை வழியாக $400 மில்லியன் மதிப்புள்ள சேவைத் திட்டங்கள் நடத்தப்படும், மன நலன் மற்றும் சிறுமிகள், பெண்களுக்கு ஆற்றல் அளிப்பதுடன் தொடர்புடைய சேவைத் திட்டங்களுக்குப் பன்னாட்டுக் கவனம் அளிக்கப்படும் என்று மெக்கினலி அறிவித்தார்.

RID A S வெங்கடேஷ் இந்தியாவில் ரோட்டரியின் வளர்ச்சிக்குப் பெரும் சாத்தியம் உள்ளது என்று சுட்டிக்காட்டினார். சங்கச் செயல்பாடுகளில் சுறுசுறுப்பாகப் பங்கேற்கும்படி உறுப்பினர்களை ஊக்குவித்தார். “உறுப்பினர்களுக்கு ரோட்டரி அனுபவத்தை மேம்படுத்துவதன் மூலம் அவர்கள் விலகுவதைத் தடுக்கலாம், ரோட்டரி சமூகங்களில் தன் நேர்விதத் தாக்கத்தைத் தொடர்ந்து பரப்பலாம்” என்றார் அவர்.

மெக்கினலி அவர்களுடைய இந்தியப் பயணம், இங்கு ரோட்டரி செய்துவரும் மாற்றத்தைக் கொண்டு வருகிற பணியின் அடையாளம் என்றார் PRID C பாஸ்கர்.

மாநாட்டுத் தலைவர் PDG M முருகானந்தம் உள்வரும் தலைவருக்கு ரோட்டரியின் பணி, குறிப்பாக, இந்தப் பகுதியில் உள்ள பங்கேற்கும் மாவட்டங்களின் பணியைப்பற்றிச் சுருக்கமாகத் தெரிவித்தார்.

RID 2981ன் DG V செல்வானந்தன், DGE G செங்குட்டுவன், DGND J லியோனெ; RID 2982ன் DG P சரவணன்,DGE S ராகவன், DGN V சிவக்குமார், DGND சிவசுந்தரம்; 3000ன் DG I ஜெரால்ட், DGE R ஆனந்தஜோதி, DGN R ராஜா கோவிந்தசாமி, DGND J கார்த்திக்; RID 3203ன் DGE டாக்டர் S சுந்தரராஜன் மற்றும் RID 3212ன் DGE R முத்தையா பிள்ளை, அவர்களுடைய மாவட்ட ஆளுநர் குழுக்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பன்னாட்டுத் தலைவரைப் பெருமைப்படுத்தினார்கள்.■

*மதுரையில் RIPE கோர்டன் மெக்கினலி மற்றும் ஹெதர் (இடமிருந்து) DGE முத்தையா பிள்ளை, PDG B ஆறுமுகபாண்டியன், RID A S வெங்கடேஷ், நிகழ்ச்சி தலைவர் PDG M முருகானந்தம், அவர் மனைவி சுமதி, PRID C பாஸ்கர் மற்றும் PDG சின்னதுரை அப்துல்லா ஆகியோருடன்.*





**மேலே:** *ஹெதர், RIPE கோர்டன் மெக்கினலி, PRID அசோக் மகாஜன் மற்றும் RID T N சுப்ரமணியன் ஆதித்யா பிர்லா சமூக முன்முயற்சிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மையத்தின் தலைவி ராஜஸ்ரீ பிர்லாவுடன்.*

**கீழே:** *RIPE மெக்கினலி மற்றும் ஹெதர், PRID மகாஜன், TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா, RIDE சுப்ரமணியன், அவர் மனைவி வித்யா (வலது), DG சந்திப் அகர்வல்லா, அவர் மனைவி மாலினி, மற்றும் PDGகளுடன். DGN சேதன் தேசாய் மற்றும் DGE அருண் பார்கவா இடதில் உள்ளனர்.*







# மும்பையில் ராஜஸ்ரீ பிர்லாவை மெக்கினலி சந்தித்தார்

**ரோட்டரி செய்திக்குழு**



மும்பையில், RIPE கோர்டன் மெக்கினலி மற்றும் அவரது மனைவி ஹெதர் ஆகியோர் RI மாவட்டங்கள் 3141, 3142, 3131, 3132 மற்றும் 3170 ஏற்பாடு செய்த நிகழ்வில் கலந்து கொண்டனர். DGகள், DGEகள். கழக தலைவர்கள் மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியை RIDE T N சுப்பிரமணியன் செயல்படுத்தினார்.

RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி மற்றும் TRF அறங்காவலர் டாக்டர் பரத் பாண்டியா ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினர், மேலும் இந்தியாவில், குறிப்பாக இந்த மாவட்டங்களில் ரோட்டரியின் பணிகள் குறித்து அவருக்கு விளக்கினர்.

கூட்டத்தில் உரையாற்றிய RIPE மெக்கினலி, கூடியிருந்த ரோட்டேரியர்களுக்கு, இன்றைய உலகில் ரோட்டரியின் முக்கியத்துவம் மற்றும் உலகில் நம்பிக்கையை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து விளக்கினார். கடுமையான கஷ்டங்களை எதிர்கொள்பவர்களுக்கு ஆதரவையும் நம்பிக்கையையும் வழங்குவதற்காக உலகெங்கிலும் ரோட்டேரியர்கள் செய்த நல்ல பணிகளின் விவரங்களையும் அவர் வழங்கினார்.

RIPE மெக்கினலி-இன் மும்பை வருகையின் சிறப்பம்சமாக, ஆதித்யா பிர்லா சமூக முன்முயற்சிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மையத்தின் தலைவி ராஜஸ்ரீ பிர்லாவை அவரது அலுவலகத்தில் சந்தித்தார். அந்தச் சமயத்தில் போலியோ ஒழிப்பிற்காக அவரது அறக்கட்டளை ரோட்டரி நிறுவனத்திற்கு தாராளமாக நன்கொடை அளித்ததற்கு RI சார்பாக அவர் நன்றி தெரிவித்தார். உலகில் நம்பிக்கையை ஏற்படுத்தவும், அதை சிறந்த இடமாக மாற்றவும் ரோட்டரியின் முயற்சியில் தனது தொடர்ச்சியான ஆதரவை அளிப்பதாக ராஜஸ்ரீ பிர்லா உறுதியளித்தார்.

PRID அசோக் மகாஜனால் ஏற்பாடு செய்யப்பட்ட தேநீர் கூட்டத்தில், ஹெதர் மெக்கினலி, TRF அறங்காவலர் பாரத் பாண்டியா மற்றும் RIDE T N சுப்ரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். மெக்கினலி மற்றும் ஹெதருக்கு மும்பையில் ஒரு தனிப்பட்ட இரவு விருந்து மகாஜனால் அளிக்கப்பட்டது, மகாஜன் RI வாரியத்தில் மெக்கினலியுடன் பேட்ச்மேட்டாக பணியாற்றியவர். ■

# மருத்துவர்களுக்கான ரோட்டரி சங்கம்

ஜெய்ஸ்ரீ




*RIPE கோர்டன் மெக்கினலி, RC சென்னை ஜெமினி தலைவர் Dr எழிலரசன், DG N நந்தகுமார், RID A S வெங்கடேஷ், PDG ISAK நாசர் மற்றும் DGN மஹாவீர் போத்ரா புதிய சங்க உறுப்பினர்களுடன். PDG பாபுபேரம் மற்றும் புதிய சங்கத்தலைவர் Dr S முத்துகுமார் ஆகியோரும் இடதில் அமர்ந்துள்ளனர்.*

ரோட்டரி மூலம் சமூக சேவை செய்ய விரும்பும் மருத்துவர்கள் நிறைந்திருக்கும் இந்த மாபெரும் கூட்டத்தை பார்க்கும்போது மனதிற்கு இதமாக இருக்கிறது. உங்கள் ஒவ்வொருவருக்கும் மனமார்ந்த நன்றி. உங்கள் வாழ்நாளின் மிகச் சிறந்த அனுபவத்தை நீங்கள் பெற்றிருப்பீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன். மேலும் உலகில் நல்லதைச் செய்வதற்கு ரோட்டரியை ஒரு தளமாக தேர்வு செய்துள்ளதாக நீங்கள் நிச்சயமாக உணருவீர்கள். உறுப்பினர் சேர்க்கை மூலம் நீங்கள் உயரத்தை எட்டியுள்ளீர்கள் என்றார் RIPE கோர்டன் மெக்கினலி. கடந்த ஏப்ரல் மாதம் சென்னை வந்திருந்த அவர், புதிதாக உருவாக்கப்பட்ட சென்னை ஃப்ரட்டர்னிட்டி ரோட்டரி சங்கத்தின் 97 உறுப்பினர்களை வரவேற்றார். RID 3232-க்கு உட்பட்ட சென்னை ஜெமினி ரோட்டரி சங்கத்தின் ஆதரவில் தொடங்கப்பட்ட புதிய சங்கத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் மருத்துவர்கள், மருத்துவமனை உரிமையாளர்கள் அல்லது நிர்வாகிகளாவர். புதிய சங்கத்திற்கான சாசனத்தை சங்கத் தலைவரும், பார்வதி மருத்துவமனையின் தலைவரும், முடநீக்கியல் துறை அறுவைச்சிகிச்சை நிபுணருமான டாக்டர் எஸ்.முத்துகுமாரிடம் மெக்கினலி ஒப்படைத்தார்.

ரோட்டரியில் மருத்துவர்களை ஒருங்கிணைத்ததற்காக மாவட்ட உறுப்பினர் கவுன்சிலர் PDG ISAK நாசரை RID A S வெங்கடேஷ் பாராட்டினார். 2016-ஆம் ஆண்டு வரை ரோட்டரி ஒரே தொழிலில் 10 சதவீதத்திற்கு மேல் உறுப்பினர் களை அனுமதிக்கக்கூடாது என்ற கொள்கையை பின்பற்றி வந்தது. அதன் பிறகு விதிமுறைகள் தளர்த்தப்பட்டன. இப்போது சென்னை ரோட்டரி சங்கம் ஆதரவிலான சென்னை ஆர்கன் டொனேஷன் ரோட்டரி சங்கம் போன்ற காரணம் அடிப்படையிலான பல்வேறு சங்கங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. உறுப்பு தானம் செய்வதே அவர்களின் முதன்மையான நோக்கமாகும் என்று கூறிய அவர், புதிய சங்கத்துக்கு இரண்டு ஆலோசனைகளைக் கூறினார்.

நீங்கள் எந்த வகையான செயல் பாடுகளில் ஈடுபட விரும்புகிறீர்கள், எந்த வகையான உறுப்பினர்களை சேர்க்க விரும்புகிறீர்கள் என்பது பற்றிய விவரங்களுடன் ஒரு ஐந்தாண்டு திட்டத்தை உருவாக்குங்கள். இந்த அணுகுமுறை அடுத்து உள்வரும் தலைவர்கள் தொடர்ந்து செயலாற்ற உதவும். யாரும் ஒரு வருடம் சொந்தக் காரராக இல்லாமல் இருப்பதை உறுதிசெய்யும்.

இரண்டாவது யோசனை அனைத்து உறுப்பினர்களையும் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபடுத்துங்கள். அப்போது தான் அவர்கள் ரோட்டரி மீதான ஆர்வத்தை இழக்காமல் இருப்பார்கள்.

இந்த புதிய ரோட்டரி சங்க கூட்டத்திற்கு சென்றதை நினைவு கூர்ந்த DG நந்தகுமார், புதிய உறுப்பினர்களிடம் ஏன் ரோட்டரியில்

இருக்க விரும்புகிறீர்கள் என்று கேட்டார். வர்த்தகத்தை விரிவுபடுத்துவதற்காக அல்லது தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்காக என்று அவர்கள் கூறுவார்கள் என நான் நினைத்திருந்த நேரத்தில், அவர்களின் பதில் எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அவர்கள், நாங்கள் எல்லோரிடமும் பழக விரும்புகிறோம். மேலும் எங்கள் தொழிலுக்கு அப்பாற்பட்டு சேவை செய்ய விரும்புகிறோம் என்றனர்.

RID 3232வில் மூன்று பிரத்யேக ரோட்டரி சங்கங்கள் உள்ளன. ஒன்று முன்னாள் ரோட்ராக்டர்களை உறுப்பினர்களாகக் கொண்டது. மற்றொன்று முன்னாள் வட்ட மேஜையாளர்கள் கொண்டது. ஐந்து ரோட்டரி சங்கங்கள் ரோட்டேரியன்களின் குழந்தைகளுக்கானது. சென்னையில் மட்டும் 9,000 மருத்துவர்கள் இருக்கின்றனர். ஆனால், இங்கு 100 மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர் என்று கூறிய நந்தகுமார், அதிக அளவில் மருத்துவர்கள் ரோட்டரியில் சேர முன்வர வேண்டும் என்று வலியுறுத்தினார்.

RIPE-இடமிருந்து பட்டய சாசனத்தை பெற்றுக் கொண்ட சங்கத்தின் சாசனத் தலைவர் டாக்டர் முத்துகுமார், நாங்கள் அனைவரும் நமது சமூகத்தினரிடம் நம்பிக்கையை உருவாக்க விரும்புகிறோம். அனைவருக்கும் குறைந்த செலவில் மருத்துவ வசதி ஏற்படுத்தித் தருவதே எங்களின் நோக்கமாகும். உங்களது மருத்துவத் தேவைகளுக்கும், உங்கள் பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தவும் நீங்கள் எங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். எங்களுக்கு இப்போது நேரம் உள்ளது. நாங்கள் கூண்டுகளிலிருந்து வெளியே வந்து வெளி உலகத்தை பார்க்க விரும்புகிறோம். எங்களது வாழ்க்கையையும் தொழிலையும் அர்த்தமுள்ளதாக்க விரும்புகிறோம். சமீபத்தில் ரோட்டரி கூட்டங்களில் தொடர்ந்து கலந்து கொண்ட நிலையில் இதை நான் உணர்ந்து கொண்டேன். சமூகத்திற்கு எங்களது சேவை தேவைப்படுகிறது என்றார்.

சென்னை ஜெமினி ரோட்டரி சங்கம், முன்னதாக கடந்த பிப்ரவரியில் சென்னை மைத்ரேயி என்னும் 30 உறுப்பினர்கள் கொண்ட அனைத்து மகளிர் ரோட்டரி சங்கத்தை உருவாக்கியது குறிப்பிடத்தக்கது.■

Rotary PEOPLE OF ACTION

# பள்ளி மாணவர்களுக்கு ரேஷன் தொகுப்புகள்

ரோட்டரி செய்திக் குழு

மும்பை, வில்லே பார்லேயில் உள்ள ஜமுனாபாய் நர்ஸி பள்ளியின் 11-ஆம் வகுப்பு மாணவர்கள் நிதி திரட்டும் தளமான Fueladream.com மூலம் மூன்றே வாரங்களில் ரூ.57 லட்சம் நிதி திரட்டியுள்ளனர். இந்த நிதியின் ஒரு பகுதி, மலாட் அருகே உள்ள மால்வானி குடிசைப் பகுதிகளில் படிக்கும் மாணவர்களின் குடும்பத்தினருக்கு ரேஷன் பொருள்கள் வாங்குவதற்கு பயன்படுத்தப்பட்டது.

இங்கு படிக்கும் மாணவர்கள் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்கிறார் குஸும் சாகர்வாலா. இவர் RID 3141-க்கு உட்பட்ட மும்பை பிரேவ்ஹார்ட்ஸ் ரோட்டரி சங்கத்தின் தலைவர். இந்த ஆண்டு சங்கம் 15 கிலோ அரிசி, கோதுமை, து.பருப்பு, கொண்ட கடலை, அவல் பாசிபருப்பு, ராஜ்மா, கடலை எண்ணெய், சர்க்கரை, மற்றும் ரவை அடங்கிய ரேஷன் தொகுப்புகளை சேரிப் பகுதியில் வசிக்கும் குடும்பத்தினருக்கு மாதம் ஒரு முறை வீதம் ஓராண்டுக்கு வழங்க தீர்மானித்துள்ளது. இந்த திட்டத்திற்கு இரண்டாவது கட்டமாக ஜமுனாபாய் பள்ளி மாணவர்கள் ஆதரவு அளித்துள்ளனர்.

RCC மால்வானி பிரேவ்ஹார்ட் உறுப்பினர்கள் உதவியுடன் ரேஷன் தொகுப்புகள் மாணவர்களின் பெற்றோர்களுக்கு விநியோகிக்கப் பட்டது. உணவுப் பொருள்கள் அடங்கிய தொகுப்புகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் குழந்தைகள் ஆரோக்கியமாக வளர உதவும். அவர்கள் பள்ளிக்கு வருவதை பாதியில் கைவிடாமல் தொடர்ந்து பள்ளிக்கு வருவதையும் உறுதி செய்ய முடியும் என்றார் சாகர்வாலா.■




*மும்பை அருகே மல்வானி குடியிருப்பில் ஒரு குடும்பத்திற்கு ரேஷன் பொருட்கள் RC மும்பை ப்ரேவ் ஹார்ட்ஸ் வழங்குகிறது.*

# அன்பினால் மட்டுமே நம்பிக்கையை விதைக்க முடியும்: மெக்கினலி

V முத்துக்குமரன்

நமது உலகை மனிதாபிமானம் கொண்ட இடமாக மாற்ற ஒவ்வொரு ரோட்டேரியரும் தங்கள் சமூகத்தில் அன்பு செயல்களால் ஒளிரச் செய்து உலகில் உள்ள இருளை விரட்ட பாடுபட வேண்டும் என்று RID 3053, 3054 மற்றும் 3060-ஐச் சேர்ந்த 25-க்கும் மேற்பட்ட ரோட்டேரியர்களுடன் அகமதாபாத்தில் நடந்த இரவு உணவு கூட்டத்தில் RIPE கோர்டன் மெக்கினலி கூறினார். "அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் பிரமாண்டமான முன்னேற்றம் காணப் பட்டாலும், போர்கள், பயங்கரவாதம் மற்றும் வன்முறைகளால் சிதைந் துள்ள உலகில் நம்பிக்கையை உருவாக்க தொழிற்சாலைகள், நிறுவனங்கள், போர்டு ரூம்கள், அரசியல் மற்றும் சமூகங்கள் முழுவதிலும் அன்பை உருவாக்க வேண்டும் என கூறினார்.

ரோட்டேரியர்கள் தாங்கள் சேவை செய்யும் காரணங்களில் வெற்றியாளர்களாக மாறுவதற்கான முக்கியமான பொறுப்பு அவர்களுக்கு உண்டு, மேலும் "கருணைச் செயல்கள் மன அழுத்தத்தைக் குறைக்கின்றன, மனச்சோர்வு மற்றும் பிற மன நோய்களைத் தடுக்கின்றன என நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்" என அவர் கூறினார். "ரோட்டரி விழுமியங்கள் உலகில் நம்பிக்கையை அளிக்கும் மற்றும் எதிர்கால சந்ததி நம் சேவைத் திட்டங்களுக்காக நம்மைத் திரும்பிப் பார்க்கும் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன்." ரோட்டேரியர்கள் தங்கள் பணியில் பெருமை கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அவர் தனது தலைமைத்துவ கவனத்தை முன்வைத்து, "குழுப்பணி மற்றும் தொடர்ச்சி; சமாதானத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளை விரிவுபடுத்துதல்; மற்றும் மனநலப் பிரச்சினைகள் ஆகிய மூன்று முக்கியமான பகுதிகள் ரோட்டரியை முன்னோக்கி கொண்டு சென்று உலகில் நம்பிக்கையை உருவாக்கும்". "கடந்த காலத்தில் ரோட்டரியை வழிநடத்திய ஜாம்பவான்களின் வழியில் தான் நடப்பேன்" என்று அவர் மீண்டும் வலியுறுத்தினார். "சென்னை, மதுரை, கொல்கத்தா, மும்பை, நாக்பூர் மற்றும் அகமதாபாத் ஆகிய இடங்களில் ஏழு நாள் சுற்றுப்பயணத்திற்குப் பிறகு, நம்பிக்கையை உருவாக்க என்னுடன் இணைந்து பணியாற்றும்

**இடமிருந்து:** DGE *ஆஷா வேணுகோபால்,* DGN *ராஜிந்தர் குரானா,* RC *நாக்பூர் நார்த் தலைவர் ஜோதிகா கபூர்,* RIDEs *அனிருதா ராய் சௌத்ரி மற்றும்* T N *சுப்ரமணியன்,* DG *ஆனந்த் ஜுன்ஜுனுவாலா, மோனிகா, ஹெதர் மற்றும்* RIPE *கோர்டன் மெக்கினலி.*






**இடமிருந்து:** *பாவ்னா ரத்தோட், RC அகமதாபாத் க்ரேட்டர் துணை தலைவர் ப்ரஃபுல் ஷா, RIDE சுப்ரமணியன், ஹெதர், RIPE மெக்கினலி, மஞ்சு மாளவியா, சங்க செயலாளர் விபின் காய், அருப் சின்ஹா மற்றும் DGE மேஹுல் ரத்தோட் இன்டராக்டர்களுடன்.*

இந்திய ரோட்டரிய ஜாம்பவான்களின் வழிகளிலும் நடப்பேன் என்பதை உணர்கிறேன்.

### அமைதி, ஒரு பலவீனமான கட்டுமானம்

முன்னதாக, நாக்பூரில் நடைபெற்ற தி கிராண்ட் கோர்டன் ஷோ என்ற தலைப்பில் RID 3030ல் உள்ள 50 சங்கங்களைச் சேர்ந்த 300 ரோட்டேரியர்களிடையே உரையாற்றிய அவர், உக்ரைன், ஏமன், சிரியா, ஆப்கானிஸ்தான் மற்றும் சூடான் ஆகிய நாடுகளில் நடைபெறும் போர்களினால் ஏற்படுகிற அழிவு மற்றும் துன்பம் உலகம் முழுவதும் ஆழமாக உணரப் படுகிறது. அமைதி என்பது மிகவும் பலவீனமான கட்டமைப்பு என்பதை இது நிரூபிக்கிறது மற்றும் அறிவியல் முன்னேற்றம் இருந்த போதிலும், உறவுமுறை ஆட்சி, இனம், மதம் போன்ற கூறுகள் செழிப்பாக வளர்கின்றன. அமைதி மற்றும் சச்சரவுக்கான தீர்வு ரோட்டரியின் அடிப்படை மூலக்கூறுகள் ஆகும். ஆனால் உலகம் பூசல்களால் சிக்கித் தவிக்கிறது, மேலும் ரோட்டேரியர்களாகிய நாம் அன்பைப் பரப்புவதன் மூலம் மனிதநேயம் செழிப்பதை உறுதி செய்யவேண்டும், இதனால் போர் மற்றும் பயங்கர வாதத்தின் அட்டூழியங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து நம் குழந்தைகள் சிறந்த வாழ்க்கை வாழ வழிவகுக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

அன்பு மனித வாழ்வில் மையம் கொள்ளும் போது, “எந்தக் குழந்தையும் பசியுடன் படுக்கைக்குச் செல்லாது. நாம் ஒருவரையொருவர் ஒரு பெரிய குடும்பமாக நடத்துவோம், எல்லாவற்றிற்கும் மேலாக, உலகில் அமைதி இருக்கும். ஆனால் ரோட்டேரியர்களுக்குள் அமைதி இல்லை என்றால் ரோட்டரி அமைதியைக் கட்டியெழுப்ப முடியாது, தொற்றுநோய்க்குப் பிறகு பலரின் தனிப்பட்ட நல்வாழ்வு சவால் செய்யப்படுவதை நாம் காண்கிறோம். சமூக கூட்டாண்மை வேரோடு பிடுங்கப்பட்டது, மேலும் நம் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் கோவிட் சீர்குலைவு காரணமாக அவர்களின் திறன்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. தன் தலைமையின் முன்முயற்சியாக ஆரோக்கிய திட்டங்களை எடுத்துக் கொண்டதாக அவர் கூறினார், ரோட்டரி சங்கங்கள் தங்கள் சமூகங்களுக்கு ஒரு மனநல சுகாதார அமைப்பை உருவாக்க வேண்டும், இதனை செயல் படுத்த நாம் பல தடுப்பு மற்றும் தலையீட்டு கவனிப்புகளை வைத்திருக்க வேண்டும். நாம் உலகிற்கு சேவை செய்வதற்கு மட்டுமல்ல, நம் உறுப்பினர்களின் நலன்கள் மற்றும் நல்வாழ்வைக் கவனித்துக் கொள்வதற்கும் அறியப்படுகிறோம்” என்றார். அமெரிக்காவின் ஓஹியோ ஸ்டேட் யுனிவர்சிட்டியின் சமீபத்திய ஆய்வில், கருணை செயல்கள் “மனச்சோர்வுக்கு எதிராக செயல்படுகின்றன மற்றும் மக்களின் மனநிலையை உயர்த்துகின்றன” என்பதைக் காட்டுகிறது.

நாக்பூரில் நடந்த ஒரு நிகழ்ச்சியின் போது, RIDE T N சுப்ரமணியன் மற்றும் அனிருதா ராய் சௌத்ரி ஆகியோர் ரோட்டரியில் தங்கள் பயணத்தை நினைவு கூர்ந்தனர். தங்கள் மண்டலங்களில் உள்ள நல்ல மற்றும் கெட்ட கூறுகள் பற்றி பேசினர்; பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்க கொள்கையை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம், மற்றும் இதனால் பெண்களுக்கு உயர் பதவிகளை வகிக்க அதிக வாய்ப்புகள் உருவாகுவதை பற்றி பேசினர்.

தற்போது உலகளாவிய ரோட்டேரியர்களில் 23 சதவீதம் பேர் பெண்கள் என்றும், மெக்கினலியிக்கு காண்பிக்கப்படும் நாக்பூரில் உள்ள அனைத்து திட்டங்களிலும் பெண்கள் முன்னணியில் உள்ளனர். அவர்கள் எவ்வளவு உறுதியுடன் இருக்கிறார்கள்



RIPE *மெக்கினலி மற்றும் ஹெதர்* RYE *மாணவர்களுடன். உடன்* RIPEs *அனிருதா ராய்சௌத்ரி மற்றும்* T N *சுப்ரமணியன் ஆகியோரும் உள்ளனர்.*

என்பதை இது காட்டுகிறது என்றும் சவுத்ரி கூறினார். ரோட்டரி அரசியல் நாட்டிற்கு கெட்ட பெயரை ஏற்படுத்தினால், இந்தியாவில் உள்ள மூத்த ரோட்டரி தலைமையை குற்றம் சொல்ல வேண்டும். ஆனால் ரோட்டேரியர்கள் தங்கள் மனதில் இருப்பதை தைரியமாக பேச வேண்டும் மற்றும் தங்கள் கருத்துக்களை முன்வைக்க முடியும்'' என்றார் சுப்ரமணியன். இந்தியாவில் உள்ள ரோட்டரியை மற்ற நாடுகளில் உள்ளவற்றுடன் ஒப்பிட முடியாது, ஏனெனில் இந்திய ரோட்டேரியர்கள் ஒவ்வொரு ஆண்டும் அற்புதமான சேவை திட்டங்களைச் செய்கிறார்கள் என்று சவுத்ரி கூறினார்.

RID 3030-இன் சங்கங்கள் ரோட்டரியின் ஏழு கவனம் செலுத்தும் பகுதிகளில் தேவை அடிப்படையிலான திட்டங்களைச் செய்து வருகின்றன என்று DG ஆனந்த் ஜுன்ஜுனுவாலா கூறினார். ‟மாற்றுத்திறன் குழந்தைகளுக்காக ஒரு பள்ளியை நடத்துவதைத் தவிர, நாங்கள் பல்வேறு பள்ளிகளில் கணினி ஆய்வகங்கள், கழிப்பறைகளை அமைத்துள்ளோம் மற்றும் ஹாப்பி ஸ்கூல் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம்.'' இரண்டு கண் மருத்துவமனைகள், இரண்டு நடமாடும் கண் மருத்துவமனைகள், ஏழு டயாலிசிஸ் மையங்கள், 3,000 கண்புரை அறுவை சிகிச்சைகள் செய்ய மூன்று உலகளாவிய மானியங்கள், மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைக் கண்டறிய ஒரு மேமோகிராபி பேருந்து ஆகியவை அவர்களின் திட்டங்களில் சில. சிங்கர் நிறுவனம் மற்றும் ஐசிஐசிஐ அறக்கட்டளையுடன் இணைந்து 2500 பேருக்கு பயிற்சி அளிக்க 20 திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டன.

அடுத்த ஆண்டு (RIDs 3055 மற்றும் 3056 என) பிரிக்கப்பட உள்ள RID 3054 அகமதாபாத்திற்குச் வந்ததற்காக RIPEக்கு நன்றி தெரிவித்த DG பல்வந்த் சிங் சிரானா ‟25 உறுப்பினர்களுடன் RC ஜெய்ப்பூர் டிரான்ஸை நாங்கள் பட்டயப்படுத்த உள்ளோம். இது திருநங்கைகளுக்கான பிரத்யேக சங்கம். இதன் மூலம் DEI கொள்கையை கடைபிடிக் கிறோம்''என்றார். ஒரு தோல் வங்கி (GG: 75,000) RC ஜெய்ப்பூர் மிட் டவுன் மூலம் அமைக்கப்பட்டது; மற்றும் 50,000 உலகளாவிய மானியம் மூலம் RC ஜெய்ப்பூர் ரவுண்ட்டவுன் ராஜஸ்தான் மருத்துவ மனையில் டயாலிசிஸ் மையத்தை அமைத்துள்ளது.

ஒவ்வொரு உறுப்பினரும் TRF-இன் ஆண்டு நிதிக்கு குறைந்த பட்சம் $25 நன்கொடையாக வழங்குமாறு கேட்டுக் கொள்ளப் படுவார்கள் என்று RID 3055-இன் பட்டய கவர்னர் DGE மெகுல் ரத்தோட் கூறினார். குஜராத்தில் ஒரு தாலுகாவிற்கு குறைந்தபட்சம் ஒரு சங்கம் இருப்பதையும், மற்றும் முதியோர் இல்லம் மற்றும் பள்ளியை தத்தெடுப்பதில் கவனம் செலுத்தி அகமதாபாத்தில் 7–8 சங்கங்கள் பட்டயப்படுத்தப்படுவதையும் அவர் உறுதி செய்வதாக கூறினார். தற்போதுள்ள நான்கு வாகனங்களுடன் மேலும் பத்து சவக்கிடங்கு வேன்கள் சேர்க்கப்படும் என்று RID 3056 DGE நிர்மல் குனாவத் தெரிவித்தார்.

கண் மருத்துவமனை, நவ்சாரி; ரோட்டரி பள்ளி, தொண்டைச்சா; சூரத்தில் குடிநீர் மற்றும் வடிகால் வசதி; பெண்கள் அதிகாரமளிக்கும் மையம், ஷ்ராஃப் எஸ் ஆர் ரோட்டரி இன்ஸ்டிடியூட் ஆஃப் கெமிக்கல் டெக்னாலஜி மற்றும் அங்கலேஷ்வரில் உள்ள ரத்த வங்கி; ராஜ்கோட்டில் நீரிழிவு பராமரிப்பு மையம் மற்றும் தோல் வங்கி; வாபியில் உள்ள ஹரியா எல்ஜி ரோட்டரி மருத்துவமனை; மற்றும் சுரேந்திரநகர், சூரத், ஜெட்பூர் மற்றும் துலே ஆகிய இடங்களில் டயாலிசி ஸ் மையங்கள்; மற்றும் மேமோகிராபி மற்றும் வாய் புற்றுநோய் கண்டறிதல் வேன்கள் போன்ற RID 3060 மாவட்டத்தின் முக்கிய திட்டங்களை DGE நிஹிர் தேவ் பட்டியலிட்டார்.

RC அகமதாபாத் மெட்ரோ பெஹ்ராம்புரா முனிசிபல் குஜராத்தி பள்ளியில் ஒரு ஹாப்பி பள்ளியையும் (ரூ.30 லட்சம்) மற்றும் ஐந்து நாள் முகாமில் (ரூ.22 லட்சம்) 300 மாற்றுத்திறனாளிகளுக்கு ஜெய்ப்பூர் செயற்கை கால் விநியோகித்ததையும் காட்சிப்படுத்தியது.

### இண்டராக்டர்களுக்கான RIDE-இன் உதவிக்குறிப்புகள்

இண்டராக்ட் சங்க ஆலோசகர் Rtn மஞ்சு மாளவியா தலைமையில், அகமதாபாத்தில் உள்ள ஜெபார் பள்ளியின் ஆறு பேர் கொண்ட இண்டராக்டர் குழு, அவர்களின் திட்டங்கள் மற்றும் முன் முயற்சிகள் குறித்து மெக்கினலிக்கு விளக்கினர். ‟இது ஒன்பது மாதங்கள் பழமையான சங்கம் ஆகும், அவர்கள் அனாதை இல்லங்களுக்கு அத்தியாவசிய பொருட்களை

நன்கொடையாக வழங்குகிறார்கள், ஆதரவற்ற குழந்தைகளுக்கு வார இறுதிகளில் கற்பிக்கிறார்கள், மேலும் போரினால் பாதிக்கப்பட்ட உக்ரைன், சூடான் மற்றும் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட துருக்கி மற்றும் சிரியா குழந்தைகளுக்கு பயனளிக்கும் திட்டங்களுக்காக 40,000 ரூபாய் திரட்டியுள்ளனர் என RC அகமதாபாத் கிரேட்டரின் இண்டராக்ட் தலைவர் அருப் சின்ஹா கூறினார்.

மாணவர்களுடன் உரையாடும் போது, RIDE சுப்பிரமணியன் அவர்களை ரோட்டரி இளைஞர் பரிமாற்ற திட்டத்தில் பங்கேற்க வலியுறுத்தினார். "அவர்களின் RYE காலத்தில் பள்ளியில் இழந்த ஒரு வருடம் உலகளாவிய வெளிப் பாட்டால் ஈடுசெய்யப்படும். தேவைப்பட்டால், வெளிநாட்டில் உள்ள YE திட்டங்களுக்கு உங்களை அனுமதிப்பது பற்றி உங்கள் பெற்றோரிடம் பேச நான் தயாராக இருக்கிறேன் என்றார்.

**நாக்பூரில் திட்டங்கள் அணிவகுப்பு**

ரூ.25 லட்சம் செலவில் மூன்றாண்டு மனநலத்திட்டம் ஐந்து ஆங்கில வழிப்பள்ளிகளில் RC நாக்பூரை சேர்ந்த Dr நீட்டா அகர்வால் தலைமையில் செயல் படுத்தப்படுகிறது. சங்கம் அதன் முதல் இரண்டு கட்டங்களில் 2,280 மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பயனடைந்த உலகளாவிய மானியத் திட்டத்திற்காக அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள RC நேப்பல்ஸ் உடன் கூட்டு சேர்ந்தது. RC நாக்பூரின் தலைவர் நிலுஃபர் ராணா கூறுகையில், சங்கம் திர்புடே காலேஜ் ஆஃப் சோஷியல் ஒர்க் மற்றும் இரண்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒரு ஆரோக்கிய திட்டத்திற்காக இணைந்துள்ளது. மூன்றாவது கட்டத்தில், பயிற்சியாளர் ரோவினா பிலிப்ஸ் 3,000 மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு மன அழுத்தத்திலிருந்து விடுபடுங்கள் என்ற தலைப்பில் 10 மாதங்களுக்கு பயிலரங்குகளை நடத்த உள்ளார். சிறுநீரக நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை அளிப்பதற்காக சுவாமி விவேகானந்த் மருத்துவ மிஷன் மருத்துவமனைக்கு (SVMMH) $21,146 CSR மானியம் மூலம் லேசர் அமைப்பு வழங்கப்பட்டது" என்று அவர் கூறினார்.

மகாவீர் இன்டர்நேஷனல் டிரஸ்ட் உடன் இணைந்து RC நாக்பூர் நார்த், ப்ராஜெக்ட் சஹைதாவின் கீழ் 115 மாற்றுத்திறனாளிகளுக்கு ஜெய்ப்பூர் பாதத்தை விநியோகித்தது. "ஒரு மொபைல் பணிநிலையம் அளவீடுகளை எடுக்கவும், தனிப் பயனாக்கப்பட்ட ஜெய்ப்பூர் உறுப்புகளை பயனாளிகளுக்கு வழங்கவும் சுற்றி செல்கிறது. எங்கள் சொந்த உற்பத்தி அலகு அமைப்பதற்கான உலகளாவிய மானியம் பரிசீலனையில் உள்ளது என்று RC நாக்பூர் வடக்கு தலைவர் ஜோதிகா கபூர் கூறினார்.

பல மருத்துவ திட்டங்கள் RC நாக்பூர் இஷான்யாவினால் மெக்கினலிக்கு காட்சிப்படுத்தப் பட்டது. SVMMH OT உபகரணங்கள் (ரூ.30 லட்சம்); RST புற்றுநோய் மருத்துவமனையில் மேமோகிராம் இயந்திரங்கள் (ரூ.30 லட்சம்); மாத்ரு சேவா சங்க மருத்துவமனையில் (MSSH) ரூ.30 லட்சத்தில் நோயியல் ஆய்வகம்;



RIPE *மெக்கினலி ஒருவருக்கு ஜெய்ப்பூர் பாதம் அளிக்கிறார்.*

CIIMS மருத்துவமனைக்கு அறுவை சிகிச்சை நியூரோ மைக்ரோஸ்கோப் (ரூ.1.85 கோடி); மற்றும் MSSH-இல் குழந்தை அறுவை சிகிச்சை அரங்கம் (ரூ.35 லட்சம்) – அனைத்தும் உலகளாவிய மானியங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டது. “ஏப்ரல் 25 வரை, புதிய அறுவை சிகிச்சை பிரிவில் 25 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன” என்று சங்க செயலாளர் மனிஷா ரதி கூறினார். உலகளாவிய மானியம் அல்லாத திட்டங்களில், இஷான்யா சங்கம் இரண்டு டயாலிசிஸ் இயந்திரங்களையும் (ரூ.12.5 லட்சம்) மற்றும் கண்புரை உபகரணமான ஆப்தால்மிக் ஃபேகோஎமல்சி ஃபையரையும் (ரூ.15 லட்சம்) SVMMH-க்கு வழங்கியது; பார்வையற்றோர் பள்ளிக்கு 50 டெஸ்க் பெஞ்சுகள் மற்றும் 250 வெள்ளை கோல்கள்; நாக்பூர் முனிசிபல் கார்ப்பரேஷன் மற்றும் பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ் நிதியில் 60 பொது கழிப்பறைகள் சங்கங்கள் மூலம் பராமரிக்கபடுகிறது.

400 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்த கோவிட் ஐசியூ (GG:ரூ.40 லட்சம்) RC நாக்பூர் விஷன் மூலம் SVMMH-இல் கார்டியாக் ICU-வாக மாற்றப்பட்டது. சங்கத்தலைவர் மற்றும் கண் அறுவைசிகிச்சை நிபுணர் ஷிவானி சுலே கூறுகையில், “சாந்த் கோவிந்திரம் சாஹிப் மருத்துவ மனையில் மூன்று இயந்திரங்கள், RO அலகுகள் மற்றும் 6KV சோலார் பேனல் (ரூ.30 லட்சம்) கொண்ட ஹீமோடையாலிசிஸ் மையம் அமைக்கப்பட்டுள்ளது. 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைக்கு உயிரி மருத்துவக் கழிவுகளை அகற்றும் பிரிவை நன்கொடையாக வழங்குவதற்காக ரூ.30 லட்சம் மதிப்பிலான உலகளாவிய மானியத்திற்கு சங்கம் விண்ணப்பித்துள்ளது.■

---

Rotary PEOPLE OF ACTION

# டொன்டைச்சா பகுதியில் அறுவைச்சிகிச்சை முகாம்

**ரோட்டரி செய்திக்குழு**

இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் RC டொன்டைச்சா, RID 3060, நடத்திய சிறப்பு முகாமில் 125க்கும் மேற்பட்டோருக்குப் பல சிறு நோய்களுக்கான அறுவைச் சிகிச்சை வழங்கப்பட்டது. “நாங்கள் முந்தைய 35 ஆண்டுகளாக இந்த முகாமை நடத்திவருகிறோம், இலவச சேவைகளைப் பெற மக்கள் இதை ஆவலுடன் எதிர் பார்க்கிறார்கள், ஒவ்வோர் ஆண்டும், இந்தப் பகுதியின் புகழ் பெற்ற அறுவைச்சிகிச்சை வல்லுனர்கள் இந்த முகாமில் பங்கேற்கிறார்கள்” என்கிறார் சங்கத் தலைவர் டாக்டர் பிரஃபுல் டுகாட்.



முகாமுக்குமுன், தொடக்க மருத்துவ முகாம் ஒன்று நடத்தப் பட்டது, சிறு, நடுத்தர லிபோமாஸ், நீர்க்கட்டிகள், கார்ன் போன்ற வற்றால் அவதிப்படும் மக்கள் அடையாளம் காணப்பட்டார்கள். முகாமின் போது எட்டு அறுவைச் சிகிச்சை வல்லுனர்கள் அறுவைச் சிகிச்சைகளை நடத்தினார்கள். அறுவைச்சிகிச்சைக்குப் பிந்தைய கட்டுகள், தையல் நீக்குதல், மருந்துகள் என மொத்தச் செலவையும் இந்தச் சங்கம் ஏற்றுக்கொண்டது.

இந்த முகாமுக்கு வந்த DG ஸ்ரீகாந்த் இந்தானி முகாமின் வெற்றிக்கென இந்தச் சங்கம் எடுத்த முயற்சிகளையும், சங்க உறுப்பினர்கள் டாக்டர் B L ஜெயின், டாக்டர் ஓம்பிரகாஷ் அகர்வால் இருவருடைய தீவிரத் திட்டமிடலையும் பாராட்டினார்.■

# புனேயில் முதியவர்களுக்கான நடை மற்றும் ஓட்ட நிகழ்வு

ரோட்டரி செய்திக்குழு

முதியோர் நலத்தை கருத்தில் கொண்டும், அவர்கள் உடல் ஆரோக்கியத்துடன் வாழவும் அவர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் RID 3131-க்கு உட்பட்ட RC புனே பிரைடு சிறப்பு நடை மற்றும் ஓட்ட நிகழ்வை நடத்தியது. கின்னஸ் சாதனையாளர் ஆசிஷ் கஸோடேகர் நிறுவிய சிம்பிள் ஸ்டெப்ஸ் சேவை அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்ட இந்த நிகழ்வுக்கு “ஏஜ்லெஸ் வொண்டர்ஸ்” என பெயரிடப்பட்டிருந்தது. அனைத்து வயதினரைச் சேர்ந்தவர்களிடமும் ஓட்டப் பயிற்சியை மேம்படுத்துவதுதான் அவரின் நோக்கமாகும்.

புனே பல்கலைக்கழகத்தில் மிகவும் பிரபலமான பாலிவுட் இசைக்கு ஏற்ப ஜும்பா நடனம் மற்றும் புத்துணர்வு பயிற்சியுடன் நிகழ்ச்சி தொடங்கியது. நகைச் சுவையாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் உள்பட 500-க்கும் மேலானவர்கள் கலந்து கொண்டனர். இதில் பங்கேற்பவர்களுக்கு கட்டணமும் விதிக்கப்பட்டது.




**மேலே:** *கின்னஸ் சாதனையாளர் ஆஷிஷ் கஸோடேகர் (இடமிருந்து 3வது) அவர்களுடன் சில பங்கேற்பாளர்கள்.*

**கீழே:** *நிகழ்ச்சியில் DG அனில் பர்மர், அவர் மனைவி ஹேமா, RC புனே ப்ரைட் தலைவர் உஜ்வால் கேலே (வலது), முன்னாள் தலைவர் சுபோத் மல்பானி (இடது) மற்றும் DGND சந்தோஷ் மராதே.*




மாவட்ட ஆளுநர் அனில் பார்மரின் மனைவி டாக்டர் ஹேமா, புனேயின் இரும்பு மனிதர் என அழைக்கப்படும் தாசரத் ஜாதவ் முதல் 10 கி.மீ. ஓட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தனர். அடுத்த கட்டமாக 5 கி.மீ. ஓட்டம் மற்றும் இறுதியாக 3 கி.மீ. ஓட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் பதக்கம் வழங்கப் பட்டது. பதக்கங்களைப் பெற்ற மூத்த குடிமக்களின் முகத்தில் காணப்பட்ட மகிழ்ச்சி, நிகழ்வின் குறிக்கோளை நாங்கள் அடைந்து விட்டோம் என்பதை காட்டியது. ஆம்... இதை எங்களாலும் செய்ய முடியும் என்று முதியோர்களை உணரவைப்பதுதான் எங்கள் நோக்கமாகும் என்று புனே பிரைடு ரோட்டரி சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சுதிர் பாபட் கூறினார்.■

விளம்பரம்

# District 3110



**Prachi & Pawan Agarwal**
District Governor, RID 3110

## 1st Directed Gift of Year 2022 - 23


Rtn Rajiv Mittal of RC Aligarh has contributed USD 31,500 (Rs 25,83,000) to establish a "Directed Gift". By his generous contribution, he has become Major Donor (Level 2). Many congratulations to Rtn Rajiv Mittal for his magnanimous support to TRF. This is the 1st Directed Gift of this Rotary year, and 3rd all time Directed Gift of District 3110.

**Major Donor (Level 2)**
by creating
**2nd ever Term Gift of our District**




## CSR Project of Sidharth Papers Limited

District 3110 is thankful to M/S Sidharth Papers (P) Ltd. for contributing USD 21,052 (Rs 17,47,369) for a CSR Project which aims for "Establishment of Computer Labs in Four Schools". This is the 12th CSR project by our District in the current year. The Managing Director, Rtn Sushil Bansal, who is a member of RC Kashipur, and his spouse Mrs Anita Bansal have become "Major Donor (Level 1)" by this generous contribution to TRF.



## Endowment Fund of RC Kanpur West

Rotary Club of Kanpur West has become the 2nd club of District 3110 to establish an Endowment Fund in the current Rotary year. In fact, this is the 2nd all time Endowment Fund of our District. The club made a Pooled Endowment of USD 25,000 in which 2 Rotarians have contributed USD 5,000 each, 1 Rotarian has contributed USD 3,000 and 12 Rotarians have contributed USD 1,000 each.

## Approval of 7th Global Grant Projects in Current Year

## Approval of 8th Global Grant Projects in Current Year



PDG Devendra Kumar Agarwal
ARRFC

PDG Sharat Chandra
DRFC

Rtn. Vinay Krishna
Chair, District Grants Committee

Congratulations!

**RC ALIGARH FRIENDS**
**for approval of 7th Global Grant this year**

The Grant aims to provide a mobile dental and ophthalmic van to extend screening & treatment services

Total Cost: USD 52,500



Congratulations

**RC ALIGARH PEARL**
**for approval of 8th Global Grant this year**

Total Cost: USD 39,623

The Grant aims to provide **Pentacam Eye Scanner for comprehensive diagnostic purposes**



## USA Visit of PDG Sharat Chandra, RC (2023-26)








## Big Achievements in Membership Growth



DGN Neerav Nimesh Agarwal
District Menbership Chair

*Congratulations*

**Our District has maintained TOP POSITION in membership in Zone 6**

**1st Position** (in % Growth) **10.3 %**

&

**2nd Position** (in Absolute Nos.) **372**

**Our membership has reached 3983, slightly short of magical figure of 4000**

**Let us continue our efforts to strengthen our membership**




**1st** time ever **District 3110** has crossed membership of 4000

## Distribution of Baby Warmers















*RC கல்கத்தா ப்ரஸிடென்சி உறுப்பினர்கள் ஆஷா குப்தா மற்றும் ப்ரியன்கா குப்தா ஃபேஷன் கண்காட்சியில் திருநபர்களுடன்.*

Rotary PEOPLE OF ACTION

# ஆடை வடிவமைப்புச் சாதனையாளர்களான திருநபர்கள்

ஜெய்ஸ்ரீ

தையல் கலையைக் கற்றுக் கொண்டு, ஃபேஷன் வடிவமைப்பாளர்களாகப் புதிய பயணத்தைத் தொடங்கியுள்ள நான்கு திருநபர்களுடைய ஊக்கமளிக்கும் கதையைக் கேளுங்கள். அதற்கு RC கல்கத்தா பிரசிடென்சி எப்படி உதவியது என்று தெரிந்துகொள்ளுங்கள்.

இரண்டு ஆண்டுகளுக்குமுன், ரஞ்சிதா சின்ஹா என்ற திருநங்கை 10 திருநபர்களை இந்த சங்கத்துக்கு அறிமுகப்படுத்தினார், அவர்களுக்குத் தையல் பயிற்சி அளித்து வாழ்வாதாரத்தை உருவாக்கும்படி கேட்டுக்கொண்டார். “இதற்கென நாங்கள் வாரம் இருமுறை



*ஃபேஷன் கண்காட்சியில் திருநபர் மாதிரியாளர்கள்.*

வகுப்புகளை நடத்துவதற்கு ஓர் ஆசிரியரை நியமித்தோம், அரசு மையம் ஒன்றுக்கு நான்கு தையல் இயந்திரங்கள், துணைப் பொருட்களை வழங்கினோம். பயிற்சி பெறத் தேவையான பொருட்களைக் கீதா'ஸ் சர்க்கிள் என்ற ஆடைக் கடை வழங்கியது'' என்றார் சங்கத் தலைவர் ரினா மல்பானி.

அடிப்படை வகுப்புகள் நிறைவடைந்த பிறகு, இந்தச் சங்கம் ஃபேஷன் வடிவமைப்பு வல்லுனர் தீபன்விதா அவர்களை இங்கு அழைத்தது. அவர் இவர்களில் நான்கு பேருக்குப் பயிற்சி அளித்து வடிவமைப்பாளர்களாக ஆக்கினார்.

''மாணவர்களுடைய முன்னேற்றத்தைக் கண்டு ஊக்கம் பெற்ற நாங்கள், கடந்த டிசம்பர் மாதத்தில், சிவபெருமான் மற்றும் பார்வதி ஆகிய இந்துக் கடவுள்களுடைய இணைந்த வடிவமாகிய 'அர்தநாரீசுவரர்' என்ற கருப்பொருளுடன் ஃபேஷன் கண்காட்சி ஒன்றை நடத்தினோம். இந்தக் கருப்பொருளுக்கு ஏற்ற ஆடைகளை வடிவமைக்கும்படி எங்கள் மாணவர்களை ஊக்குவித்தோம்'' என்கிறார் ரினா. இந்த ஆடைகள் ஒரு மாதத்தில் தயாராகின, இவர்களுடைய பணிக்கு இந்தச் சங்கம் உதவித் தொகை வழங்கியது.

ரஞ்சிதா தன்னுடைய Instagram பக்கத்தின் வழியாகத் திருநபர் மாதிரியாளர்கள், ஒப்பனைக் கலைஞர்கள், புகைப்படக் கலைஞர்கள், நடனம் அமைப்போரை இந்த நிகழ்ச்சிக்கு அழைத்தார். நிகழ்ச்சிக்கு ஆதரவாளர்களும் சேர்ந்தார்கள். கொல்கத்தாவில் உள்ள ICCR மையத்தில் நிகழ்ச்சி நடத்த தீர்மானிக்கப்பட்டது. மாதிரியாளர்கள் பல மணி நேரம் நடனம், அழகு நடையில் பயிற்சி பெற்றார்கள், ஒத்திகை பார்த்தார்கள், பின்னர் சிறப்பான காட்சி ஒன்றை நடத்திப் பாராட்டுகளைப் பெற்றார்கள்.

இந்த ஃபேஷன் நிகழ்ச்சியில் பங்கேற்ற விருந்தினர்களில் சிலர், DG அஜோய் குமார் லா, இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் இயக்குநர் பிரணாப் குமார் சர்மா, திரைப்படக் கலைஞர்கள் அனந்திதா சப்திகாரி, ஹிஜ்ரா குரு பந்தனா நாயக் மற்றும் நடனக் கலைஞர் அலோகா நந்தா.

திருநபர்களில் ஒருவர் இப்போது இந்த ஆடைக் கடையில் பணியாற்றுகிறார். மற்ற மூவரும் வேறு இடங்களில் வேலை செய்கிறார்கள். இந்தத் திட்டத்தைக் காட்சிப்படுத்துவதற்கு இந்தச் சங்கம் மாவட்டக் கருத்தரங்கில் தையல் அரங்கம் ஒன்றை அமைத்தது. அங்கு, இந்தத் திட்டத்தில் பயிற்சி பெற்ற திருநம்பி ஒருவருடைய படைப்புகள் நன்கு விற்றன என்கிறார் திட்ட ஒருங்கிணைப்பாளர் சங்கீதா ஜெயின். ''அரங்கில் அவருக்கு முகமூடிகள், துண்டுகள் மற்றும் கைக் குட்டைகளுக்கான ஆர்டர்கள் கிடைத்தன.''

ஆடை வடிவமைப் பாளர்களாகிய இந்தத் திருநபர்களுடைய எதிர் காலம் பாதுகாப்பாகவும் ஒளிமயமாகவும் இருப்பதை எண்ணி ரினா மகிழ்கிறார். ''இப்போது அவர்களிடம் ஒரு திறன் உள்ளது, அது அவர்களுக்குப் பொருளாதாரப் பாது காப்பை வழங்கும். இதனால் அவர்களுடைய தன்னம்பிக்கை பல மடங்கு மேம்பட்டிருப்பதை எங்களால் காண இயலுகிறது.''

இந்தச் சங்கம் சில திருநபர்களுக்கு CPR பயிற்சியும் அளித்துள்ளது. இதன் மூலம், நெருக்கடி நேரத்தில் இவர்கள் முதலுதவி வழங்கி உதவலாம். 50 உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சங்கம், சங்கீதா இதன் தலைவராகப் பொறுப்பேற்கவுள்ள அடுத்த ஆண்டிலும் திருநபர்கள் நலன் தொடர்பான திட்டங்களை நடத்தத் தீர்மானித்துள்ளது.■



Rotary PEOPLE OF ACTION

# சத்தீஸ்கர் கிராமத்தில் ஒரு மருத்துவ முகாம்

**கிரண் ஜெஹ்ரா**

RC ராய்கர் ராயல், RID 3261 ஏற்பாடு செய்திருந்த மருத்துவ முகாமில், சத்தீஸ்கரின் தாரைமால் கிராமத்திலிருந்து சிகிச்சை பெற்று வந்தவர்களில் ஸ்ரீதேவி (36) சிறுநீர் தொற்று நோயால் அவதிப்பட்டு வந்தார். அவளது துயரத்திற்கான காரணத்தை அறியாத அவர் “வேதனை தரும் வலியால் அடிக்கடி தரையில் உருண்டு கொண்டிருப்பேன். நான் அந்த வலியை ஒரு வருடத்திற்கும் மேலாக



*மருத்துவ முகாமில் பரிசோதனைகள்.*




DG *ஷஷாங்க் ரஸ்தோகி (இடமிருந்து 2வது) தண்ணீர் குளிரூட்டி ஒன்றை துவக்கி வைக்கிறார்.*

சகித்துக் கொண்டிருந்தேன் என்று கூறுகிறார். முகாமில் இருந்த மகப்பேறு மருத்துவ நிபுணரும், சங்க உறுப்பினரான Dr மணீஷ் பெரிவாலின் மனைவியுமான Dr மதுலிகா பெரிவால் அவரது வேதனையைக் கண்டு அவருக்கு உதவினார்.

கிராமத்தில் உள்ள பெண்களின் நல்வாழ்வில் தான் கொண்ட அக்கறை காரணமாக, Dr மதுலிகா முகாமில் இருந்த பெண்களுக்கு பாதுகாப்பான பாலியல் நடைமுறைகள், மாதவிடாய் சுகாதார மேலாண்மை மற்றும் கழிப்பறை சுகாதாரம் குறித்து ஆலோசனை களை வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இந்திய மருத்துவ சங்கம் மற்றும் NR ட்ராமா மருத்துவ மனையுடன் இணைந்து, சங்கம் தனது இரண்டாவது மெகா ஆரோக்கிய முகாமை சத்தீஸ்கரின் கிராமப்புறங்களில் ஏற்பாடு செய்தது.

இந்த முகாமை கிராம சர்பாஞ்ச் குமாரி லக்ஷ்மி பகத் துவக்கி வைத்தார் மற்றும் 600க்கும் மேற்பட்ட கிராம மக்கள் முகாமில் கலந்து கொண்டனர். அதில் இரத்த அழுத்தம், சர்க்கரை, காது-மூக்கு-தொண்டை, எலும்பியல், பல் மற்றும் பெண்ணோயியல் உட்பட பலவிதமான நோய் களுக்கு அவர்களை பரிசோதித்தனர்.

இந்த முகாமை ஏற்பாடு செய்ததற்காக சங்கத்திற்கு சர்பாஞ்ச் தனது நன்றியைத் தெரிவித்தார். அணுக முடியும் என்பதை இது உறுதி செய்கிறது என்று கூறினார். மேலும் சங்கம் இதே போன்ற முகாமை தாரைமாலுக்கு அருகிலுள்ள மற்றொரு கிராமத்தில் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

DG ஷஷாங்க் ரஸ்தோகி முன்னிலையில், சங்கம் அதன் தற்போதைய திட்டமான ஜல் மிஷன் யோஜனாவின் ஒரு பகுதியாக நகரின் நான்கு இடங்களில் தண்ணீர் குளிரூட்டிகளை நிறுவியது.■

# RI தெற்காசிய அலுவலகத்தின் செய்தி

**Rotary.org வழியாகச் செய்யப்படும் ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா) பங்களிப்புகளுக்கான வழிகாட்டுதல்கள்**

➢ மாற்று ID உருவாக்கத்தைத் தவிர்க்கவும், உங்கள் சங்கத்தின்கீழ் உங்கள் பங்களிப்புக்குச் சரியான நேரத்தில் அங்கீகாரம் பெறவும், *My Rotary* உள்நுழைவைப் பயன்படுத்துங்கள். அல்லது, இணையப் பங்களிப்பு வழங்கும் போது, உங்களுடைய பதிவு செய்த மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்துங்கள்.

➢ சமர்ப்பிக்குமுன், உங்கள் PAN மீண்டும் சரிபாருங்கள்.

➢ குடும்ப அறக்கட்டளை/நிறுவனத்திலிருந்து பங்களிப்புகளைச் செய்யும் போது, RI தெற்கு ஆசிய அலுவலகத்துக்குக் காசோலை/வங்கி வரைவோலை அனுப்புங்கள். *My Rotary* வழியாக இந்தப் பங்களிப்புகளைச் செய்யவேண்டாம்.

**Dynamic Virtual Account**

அக்டோபர் 2022ல், ஆண்டு நிதி அல்லது போலியோ ப்ளஸ்ஸுக்கு இந்தியக் கொடையாளர்கள் பங்களிப்பதற்கென 'Dynamic Virtual Account' என்ற புதிய வழியை RISAO அறிமுகப்படுத்தியது. கொடையாளர்கள் தங்கள் சொந்த வங்கிக் கணக்கின் வழியாக, இணையம் இல்லாமல் NEFT/RTGS பணம்செலுத்தல்களை நிகழ்த்த உதவுகிறது. திரும்பத் திரும்ப நன்கொடைய அளிக்கவும் இதைப் பயன்படுத்தலாம். மேலும் தகவல்களுக்கு, இந்த இணையத் தளத்தைப் பாருங்கள்: *http://www.highroadsolution.com/fileuploader2/files/dynamicvirtualaccount.pdf*

**அறக்கட்டளை அங்கீகாரங்கள்**

கொடையாளர் ஒவ்வொருவருக்கும் நீங்கள் "நன்றி" சொல்ல TRFன் பல்வேறு அங்கீகாரங்கள் உதவுகின்றன. தனி நபர் மற்றும் சங்க அங்கீகாரங் களின் பல வடிவங்களைப்பற்றி, Rotary.orgல் உள்ள கொடையாளர் அங்கீகார இணையப் பக்கத்தில் *https://www.rotary.org/en/donate/recognition* தெரிந்து கொள்ளுங்கள்.

**மாவட்ட அறக்கட்டளைப் பொறுப்புகளை நியமியுங்கள்**

2023–24ன் நிதி திரட்டல் இலக்குகளை எட்ட, சரியான குழுவைப் பணியமர்த்துங்கள். நிதி திரட்டல், ஆண்டு நிதி மற்றும் போலியோப்ளஸ் துணைக் குழுக்களுக்கு உங்கள் மாவட்டத் தலைவர்களை, நன்கொடை நிறுவல்/மிகப் பெரிய பரிசுகள், CSR மற்றும் மாவட்டப் பால் ஹாரிஸ் சமூக ஒருங்கிணைப்பாளரை நியமியுங்கள், அவர்களைப்பற்றி RIக்குத் தெரிவியுங்கள். இதன் மூலம், அவர்களுடைய முயற்சிகளில் உதவக்கூடிய அறிக்கைகள், தகவல்கள் அவர்களுக்குக் கிடைக்கும்.■

# நாக்பூர் மூத்த குடிமக்களின் மகிழ்ச்சிப் பயணம்

ரோட்டரி செய்திக் குழு

நாக்பூர்முழுவதும் உள்ள முதியோர் இல்லங்களில் வசிக்கும் மூத்த குடிமக்களிடையில் நேர்விதத் தாக்கத்தை உண்டாக்கும் நோக்கத் துடன், முஸ்கான்: கொடுத்தலின் மகிழ்ச்சி என்ற நெஞ்சைத் தொடும் திட்டத்தைச் சமீபத்தில் நடத்தியது RC நாக்பூர் ஈஷான்யா, RID 3030. இந்த முன்னெடுப்பின் கீழ், இந்த மூத்த குடிமக்கள் மகிழ்ச்சிப் பயணம் சென்றார்கள்.

இதற்கெனச் சங்க உறுப்பினர்கள் முதியோர் இல்லங்களைப்பற்றிய தகவல்களைத் திரட்டினார்கள், ஒரு நாள் பயணத்துக்கு வரக்கூடிய முதியோர்களை அடையாளம் கண்டார்கள். இதன்படி, 10 முதியோர் இல்லங்களைச் சேர்ந்த 150 முதியோர்கள் தெலன்கேதி அனுமான் ஆலய மைதானத்துக்குப் பேருந்துகளில் அழைத்துச் செல்லப் பட்டார்கள். இவர்களைக் கவனித்துக் கொள்கிற 30 பேரும் இவர்களுடன் வந்தார்கள்.

இவர்கள் அங்கு வந்ததும், 50 ரோட்டரியன்களைக் கொண்ட ஒரு குழு இவர்களுக்குச் சந்தனப் பொட்டு வைத்துப் பாடல்களைப் பாடி வரவேற்றது. தேநீர், பிஸ்கட்கள்,





வாழைப்பழங்களுடன் காலை உணவு வழங்கப்பட்டது. பின்னர் எல்லாரும் கோயிலுக்குச் சென்று திரும்பினார்கள். மகிழ்ச்சியைப் பரப்புவதற்கென, அந்தாக்ஷரி போன்ற விளையாட்டுகளுக்கும் இந்தச் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

பின்னர் ரோட்டரியன்கள் இவர்களுக்குச் சிறப்பான சைவ உணவை வழங்கினார்கள், ஐஸ் கிரீம், இனிப்புகளும் வழங்கப்பட்டன. மதிய நேரம் பொழுதுபோக்குச் செயல்பாடுகளால் நிறைந்திருந்தது. மாயாஜால நிகழ்ச்சி, பூக்களைக் கொண்டு ஹோலி கொண்டாட்டம், சங்க உறுப்பினர்களுடன் நடனம் என்று மூத்த குடிமக்கள் மகிழ்ச்சியுடன் நேரம் செலவிட்டார்கள்.■





*ரோட்டேரியன்கள் முதியோர்களை மகிழ்விக்க ஒரு புராண நாடகம் நடத்துகின்றனர்.*

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## ஒட்டப்பாலம் மருத்துவமனைக்கு டயாலிசிஸ் இயந்திரங்கள்



*DG ராஜ்மோகன் மற்றும் மீரா நாயர் டயாலிசிஸ் மையத்தை துவக்கி வைக்கின்றனர்.*

RC டிஜுவானா ஒயெஸ்டெ, RID 4100, மெக்சிகோ, TRF உடன் இணைந்து, கேரளத்தில் பாலக்காட்டில் இருக்கும் ஒட்டப்பாலம் P K தாஸ் மருத்துவமனைக்கு 4 டயாலிசிஸ் இயந்திரங்களை (ரூ.26 லட்சம்) வழங்கியது RC ஒட்டப்பாலம், RID 3201.■

## காக்கிநாடாவில் இரத்த சேகரிப்பு வேன்



*PDG SVS ராவ் மற்றும் KV ராவ் (காக்கிநாடா சீ போர்ட் நிறுவனர்), இரத்த சேகரிப்பு வாகனத்தை துவக்கி வைக்கின்றனர்.*

RID 3020-க்கு உட்பட்ட காக்கிநாடா கோல்டன் ஜுப்ளி ரோட்டரி சங்கம், சமீபத்தில் ரூ.28 லட்சம் மதிப்பிலான இரத்த சேகரிப்பு வேன் ஒன்றை காக்கிநாடா ரோட்டரி இரத்த வங்கியிடம் வழங்கியது. காக்கிநாடா சீ போர்ட் நிறுவனம் இத்திட்டத்தின் பங்குதாரராக இருந்தது.■

## பெண்கள் பள்ளியில் சுகாதார வளாகம்




*DG I ஜெரால்டு, DGN ராஜா கோவிந்தசாமி, DGE ஆனந்தஜோதி, PDGs S கோபால், AL சொக்கலிங்கம் மற்றும் DRFC RVN கண்ணன் முன்னிலையில் திட்டத்தை துவக்கி வைக்கிறார்.*

அறந்தாங்கி அரசு பெண்கள் மேனிலைப் பள்ளியில் ரூ.23.17 லட்சம் மதிப்பிலான இரண்டு தளங்கள் கொண்ட சுகாதார வளாகத்தை DG I ஜெரால்டு தொடங்கிவைத்தார். சர்வதேச மானிய உதவியிலான இந்த திட்டத்தை அறந்தாங்கி ரோட்டரி சங்கம், RID 3000-த்துக்கு உட்பட திருச்சிராப்பள்ளி கோட்டை ரோட்டரி சங்கம், மலேசியாவின் (RID 3300) பந்தர் சங்கை பெதானி ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து செயல்படுத்தியது. இங்கு 10 கைகழுவும் நிலையங்கள், 8 கழிப்பறைகள் மற்றும் 21 சிறுநீர் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.■

## சோனிபட்டில் வலி நிவாரண முகாம்




*வலி நிவாரண முகாமில் பயனாளி ஒருவர்.*

RID 3012-க்கு உட்பட்ட சோனிபட் ஆர்டன்ட் ரோட்டரி சங்கம் நகரில் உள்ள ஏழைமக்களுக்காக மாதாந்திர அடிப்படையில் வலி நிவாரணம் மற்றும் மேலாண்மை முகாமை நடத்தி வருகிறது. இ-பிளஸ் கிளினிக், முடநீக்கியல் மருத்துவர்கள், வலிநிவாரண நிபுணர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சியுடன் இந்த முகாம் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் இந்த வலி நிவாரண முகாம் மூலம் சராசரியாக 120 பேர் பயனடைந்து வருவதாக சங்கத்தின் தலைவர் அஷு நாக்பால் தெரிவித்தார்.■

ADVT.

# IIS (deemed to be UNIVERSITY) JAIPUR

www.iisuniv.ac.in



**Bhavika Thanvi**

B.A. (Hons.)-Psychology, 2020 Batch

UPSC CIVIL SERVICES 2022

**Rank - 100**

## ADMISSIONS

**2023-24 OPEN FOR**

UG / PG / Ph.D. / D.Litt. / D.Sc. & PROFESSIONAL PROGRAMMES

Gurkul Marg, SFS, Mansarovar, Jaipur
Rajasthan-302020 (INDIA)
0141 2400160/161, 2397906/07

PSYCHOMETRIC TESTING AVAILABLE FOR VOCATIONAL AND CAREER COUNSELLING

https://icfia.org/iisu/psychometrictest

COLLEGE OF PHYSIOTHERAPY & ALLIED HEALTH SCIENCES (CO-EDUCATIONAL)
@ Sitapura Campus

- BPT
- MPT
- Ph.D.

PREPARATORY CLASSES ALONG WITH UG/PG PROGRAMMES

- Civil Services
- NET
- USCMA

FOR COUNSELLING AND ANY QUERIES, CONTACT AT

**9358819994**
ARTS & SOCIAL SCIENCES

**9358819995**
SCIENCE

**9358819996**
COMMERCE & MANAGEMENT

**8949322320**
PHYSIOTHERAPY

or mail at : admissions@iisuniv.ac.in


TOLL FREE NO.

**1800 180 7750**

# நைல் நதியால்
# ஆசீர்வதிக்கப்பட்ட எகிப்து

ரஷீதா பகத்





நைல் பல்லத்தாக்கில் ஹாட் ஏர் பலூன் சவாரி.

எகிப்து மற்றும் நைல் நதியைக் குறிப்பிட்டால், முதலில் நினைவுக்கு வருவது பிரமிடுகள், ஆனால் இரண்டாவதாக நினைவுக்கு வருவது, குறிப்பாக நைல் நதியில் ஒரு பெரிய தெப்பம் செல்வதை நீங்கள் நினைக்கும் போது, அதன் அமைதியான நீரில் ஒரு அழகரசி மிதப்பார்.


அதனால், கிளியோபாட்ராவைப் பற்றிய பல புராணக்கதைகளைக் கேட்கும் நம்பிக்கையில் நான் எகிப்துக்குச் சென்றேன், ஆனால் எங்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. கெய்ரோ அருங் காட்சியகங்களிலோ, லக்சர் அல்லது கெய்ரோவில் உள்ள கைவினைப்பொருள் கடை களிலோ ராம்ஸ்சிஸ் II-ன் மனைவி அழகான எகிப்திய ராணி நெஃபெர்டிட்டியை தான் நீங்கள் அதிகம் பார்ப்பீர்கள். கிளியோபாட்ராவை விட, பண்டைய எகிப்தின் சின்னமாக ராணி நெஃபெர்டிட்டி கருதப்படுகிறார். அகெனாடனின் மனைவி நெஃபெர்டிட்டி (கிமு 1367–1350) எகிப்தின் பாரம்பரிய பலதெய்வ மதத்தை ஏகத்துவ மதமாக மாற்றி, சூரியக் கடவுளான அட்டனை வழிபட செய்ததில் முக்கிய பங்கு வகித்தார். புகழ்பெற்ற மன்னர் துட்டன்காமுனின் மாற்றாந்தாயும் ஆவார். அவரைப் பற்றி படிக்கும் போது, இந்த தகவலை நான் கண்டேன்: “இப்போது பெர்லினில் உள்ள நெஃபெர்டிட்டியின் நேர்த் தியான உருவச்சிலை-மிகவும் பிரபலமான பழங்கால சிற்பங்களில் ஒன்றாகும்.”

காந்தங்கள், பாட்டில் திறப்பான்கள், சாவி சங்கிலிகள், மோதிரங்கள் மற்றும் காதணிகள் போன்ற சுற்றுலாப் பயணிகள் வீட்டிற்கு கொண்டு செல்லும் அனைத்து கைவினை மற்றும் நினைவுப் பொருட்களிலும் ராணி நெஃபெர்டிட்டி முக்கிய இடத்தைப் பிடித்துள்ளார்!

நாங்கள் நான்கு நாள் நைல் கப்பல் பயணத்தை மேற்கொள்ள











*ஃபாரோவின் கல்லறையில் வண்ண ஓவியங்கள்.*






திட்டமிட்டிருந்தோம். கப்பலில் ஏறுவதற்கு, கெய்ரோவிலிருந்து அஸ்வானுக்கு அதிகாலை விமானத்தில் செல்ல வேண்டி யிருந்தது, அங்கிருந்து அபு சிம்பெல் கோயிலுக்கு முதலில் சென்றோம், மதியம் அஸ்வானில் இருந்து கப்பல் ஏறினோம்.

### நைல்: எகிப்தின் பசுமையான உயிர்நாடி

ஆல்ப்ஸ் மலை சுவிட்சர்லாந் திற்கும், கடல் பிரிட்டனுக்கும் எவ்வளவு முக்கியமோ அதுபோல எகிப்துக்கு நைல் நதி முக்கியம் என்று கூறப்படுகிறது. அது அந்நாட்டின் பொருளாதாரத்தை வடிவமைத்து அதன் அரசியல் கட்டமைப்பை தீர்மானித்தது. ஆப்பிரிக்காவின் மிக நீளமான நதியான அது 6,650 கிமீ நீளம்-11 நாடுகளில் பாய்கிறது. இரண்டு பெரிய நீரோடைகள் ஒன்றிணைந்து அதை உருவாக்குகின்றன- எத்தியோப் பியாவில் நீல நைல் மற்றும் உகாண்டாவில் வெள்ளை நைல்.

அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாகரிகங்களை வளர்த்து வரும், அந்த பரந்து விரிந்த பாலைவன நிலத்தின் நடுவில் பாயும் இந்த பெரிய, நீளமான சோலையை நீங்கள் மனத்திரையில் கற்பனை செய்யவேண்டும். பண்டைய எகிப்து, நைல் நதியின் பரிசு என்று அறியப்பட்டது; அது இல்லையெனில் அந்த நிலம் தரிசாக இருந்திருக்கும்; அதனின் ஆசீர்வாதத்தால், பாரோக்கள் அச்சகாப்தத்தின் பணக்கார நாடுகளில் ஒன்றை ஆட்சி செய்தனர். எகிப்தியர்கள் மழைக்காக ஒருபோதும் வானத்தைப் பார்க்க வேண்டியதில்லை; நைல் நதி எப்போதும் அந்நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்தது. ஒவ்வொரு கோடையிலும், அதன் தாராளமான நீர் குறையும் போது, அது தன் பயிர்களுக்கு ஏற்ற வளமான மற்றும் செழுமையான கருப்பு மண்ணை விட்டுச் சென்றது. ஆனால் அடிக்கடி பேரழிவு தரும் வெள்ளமும் அங்கே ஏற்படும்.







*மன்னர்கள் பல்லத்தாக்கில் ஒரு ஃபாரோவின் கல்லறை.*

### பாறையில் வெட்டப்பட்ட அபு சிம்பெல் கோவில்

சுமார் 3 மணி நேர பயணத்திற்குப் பிறகு (சுமார் 230 கிமீ) சூடானின் எல்லைக்கு அருகில் உள்ள அபு சிம்பெல் கிராமத்தில் இரண்டு பாறையில் வெட்டப்பட்ட கோயில்களைக் கொண்ட ஒரு பிரமிக்க வைக்கும் வரலாற்று தளத்தை அடைந்தோம். கி.மு. 13-ஆம் நூற்றாண்டில் இரண்டாம் ராம்ஸ்சிஸ் ஆட்சியின் போது ஒரு மலையிலிருந்து செதுக்கப் பட்ட இந்த இடத்தில் புகழ் பெற்ற எகிப்திய பாரோவின் பிரமாண்ட மான உருவங்கள் உங்களை


வரவேற்கின்றன. இரண்டாம் ராம்ஸ்சிஸின் சிலைகள் மேல் மற்றும் கீழ் எகிப்தைக் குறிக்கும் கிரீடம் அணிந்திருப்பதைக் காட்டுகிறது, அதே பாறையில் அவரது மனைவி நெஃபெர்டிட்டி மற்றும் குழந்தைகள் சிறிய உருவங்களில் செதுக்கப் பட்டிருந்தனர்.

இரண்டாம் ராம்ஸ்சிஸின் 66 ஆண்டுகால ஆட்சியானது எகிப்தை அதிகாரம் மற்றும் புகழின் உச்சத்திற்கு கொண்டு சென்றது. மற்ற எந்த பாரோவையும் விட அதிகமான நினைவுச்சி ன்னங்கள் மற்றும் சிலைகள்-மற்றும் அதிகமான குழந்தைகளை உருவாக்கியது அவர்தான்.

அபு சிம்பெல் பாரோவின் மிகவும் லட்சியமான கட்டுமானத் திட்டங்களில் ஒன்றாகும். மேலும் இரண்டு கோயில்களில், பெரிய கோயில் இரண்டாம் ராம்ஸ்சிஸிக்கும், சிறிய கோயில் நெஃபெர்டிட்டி மகாராணிக்கும் அர்ப்பணிக்கப்பட்டது. சுமார் 20 ஆண்டுகள் நீடித்த இந்த மிகப்பெரிய கட்டுமானம் கி.மு.1244 முடிக்கப்பட்டது. காலப் போக்கில், பெரிய கோவிலின் பெரும்பகுதியும், இரண்டாம் ராம்ஸ்சிஸ் உருவமும் மணல் திட்டினால் மூடப்பட்டன. உங்களால் கற்பனை செய்ய முடிகிறாதா, இந்த அழகிய கலைக்கூடம் 1813-ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை மறக்கப்பட்டது என்பதை. சுவிஸ் ஆராய்ச்சியாளர் ஜோஹன் லுட்விக் பர்கார்ட் என்பவர் சிறிய கோவிலையும், பிரதான கோவிலின் மேல் உறையையும் கண்டுபிடித்தார். பல முயற்சிகளுக்குப் பிறகு இந்தக் கோவில்கள் மணலில் இருந்து மீட்கப்பட்டன, இருப்பினும் இரண்டாம் ராம்ஸ்சிஸின் மிகப்பெரிய சிலைகளில் ஒன்று நிரந்தரமாக சேதமடைந்து போனது.

### ஒரு மிகப்பெரிய இடமாற்றம்


ஆனால் உலகின் மிகப்பெரிய அணைக்கட்டுகளில் ஒன்றான அஸ்வான் உயர் அணை அஸ்வானில் நைல் நதியின் குறுக்கே 1960 மற்றும் 1970க்கு இடையில் கட்டப்பட்டபோது,



நைல் நதியின் உயரும் நீர் அபு சிம்பெல் நினைவுச் சின்னங்களை அச்சுறுத்தியது, அவை தண்ணீரில் மூழ்கத் தொடங்கியது. பண்டைய நாகரிகத்தின் இந்த விலைமதிப்பற்ற அதிசயங்களை காப்பாற்ற ஒரு சர்வதேச பிரச்சாரம் மூலம் நிதி சேகரிக்கத் தொடங்கியது.

வரலாற்றுப் பொக்கிஷங்களைச் பாதுகாக்க உலக நாடுகள் எவ்வாறு ஒன்றுகூடின என்பதே ஒரு அதிசயம். 1964-ஆம் ஆண்டில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், பொறியாளர்கள் மற்றும் திறமையான கனரக உபகரண ஆபரேட்டர்கள் அடங்கிய பன்னாட்டுக் குழு ஒன்று யுனெஸ்கோ பதாகையின் கீழ் இணைந்து பணியாற்றி சுமார் $40மில்லியன் (இன்றைய மதிப்பில் சுமார் $348 மில்லியன்) செலவில் இந்த நினைவுச்சின்னங்களை இடமாற்றம் செய்தது.

அந்த நான்கு ஆண்டுகளில், தொல்பொருள் பொறியியலின் மிகப்பெரிய சவால்களில் ஒன்றாக, முழு தளமும் கவனமாக, ஒவ்வொன்றும் 20 முதல் 30 டன்கள் வரை பெரிய தொகுதிகளாக வெட்டப்பட்டு, ஆற்றிலிருந்து 200 மீட்டர் தொலைவிலும் 65 மீட்டர் உயரத்திலும் உள்ள புதிய இடத்தில் மீண்டும் இணைக்கப்பட்டது.


*அபு சிம்பெல் கிராமத்தில் அரசர் ராம்ஸ்சிஸ் II-ன் கோவில்.*

ஏற்கனவே தண்ணீரில் மூழ்கியிருந்த சில கட்டமைப்புகள் மீட்கப்பட்டன, இந்த அசாதாரண முயற்சியால் மட்டுமே நம்மை போன்ற பார்வையாளர்கள் அங்கு சென்று கி.மு.1244-இல் கட்டப்பட்ட அந்த அற்புதமான அழகைப் பாராட்ட முடிகிறது.

எகிப்து போன்ற பழங்கால நாகரிகங்களுக்குச் செல்வது, அதன் செழுமையான வரலாற்றுச் செல்வம் மற்றும் அழகுடன், 21-ஆம் நூற்றாண்டின் நெட்டி சன்களுக்கு, ஆழ்ந்த மனத்தாழ்மை உணர்வை வழங்குகிறது, மேலும் நாம் ஒரு மிகப் பெரிய தொழில்நுட்ப சகாப்தத்தில் வாழ்கிறோம் என்ற நம்பிக்கையில் வேரூன்றிய நமது ஆணவத்தைப் போக்க உதவுகிறது.

மாலையில் நாங்கள் எங்கள் சிறிய, ஆனால் மிகவும் வசதியான கப்பலில் ஏறினோம், அது அடுத்த நாள் லக்சர் மற்றும் மன்னர்கள் பள்ளத்தாக்குக்கு எங்களை அழைத்துச் சென்றது.

### ஒரு அற்புதமான கல்லறை

மன்னர்கள் பள்ளத்தாக்கு (Valley of this Kings) அதன் அழகிய பொறிக்கப்பட்ட மற்றும் வர்ணம் பூசப்பட்ட அரச கல்லறைகளுக்கு பிரபலமானது. எகிப்திய மன்னர்களும் அரச குடும்பத்தாரும் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையை உறுதியாக நம்பினர். எனவே அவர்கள் இறுதியாக ஓய்வெடுக்கும் இடங்களை அழகாக அலங்கரித்தனர். அடுத்த உலகில் ஒரு மனிதருக்குத் தேவையான அனைத்தையும் கொண்டு... செல்வம், பொக்கிஷங்கள், நேர்த்தியான ஆடைகள், நகைகள், உணவு மற்றும் பானங்கள் ஆகியவற்றால்... நிரப்பப்பட்டன. வலிமைமிக்க பாரோக்கள், அவர்களின் ராணிகள் மற்றும் எகிப்தின் பிற அரச குடும்பங்களுக்கு உலகின் மிக அற்புதமான கல்லறை உருவாக்க சிறந்த இடம் நைல் நதிக்கரையை தவிர வேறு இருக்கமுடியுமா?

எனவே புதிய எகிப்து ராஜ்ஜியத்தின் (கிமு 1500–1070) ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக மன்னர்கள், ராணிகள் மற்றும் பிரபுக்கள் இந்த பள்ளத்தாக்கில் புதைக்கப்பட்டனர். அவர்களின் உடல்கள் பதப்படுத்தப்பட்டன. யுனெஸ்கோவால் உலக பாரம்பரிய தளம் அங்கிகாரம் அளிக்கப்பட அந்த இடம் கி.மு.16 முதல் 11-ம் நூற்றாண்டு வரை, மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்ட, ஆனால் இரகசிய கல்லறைகள் ராஜ்யத்தின் மிகவும் சக்திவாய்ந்த ஆண்கள் மற்றும் பெண்களுக்காக உருவாக்கப்பட்டன. இந்த கல்லறைகளின் நுழைவாயில் "கல்லறை கொள்ளையர்களை" தடுக்க இரகசிய கதவுகளால் மறைக்கப்பட்டது, ஏனெனில் பாரோக்கள் மற்றும் பிற அரச குடும்பங்கள் ஏராளமான தங்கம் மற்றும் பிற பொக்கிஷங்களுடன் புதைக்கப்பட்டனர், இது இறப்பிற்கு பிந்தைய வாழ்க் கையில் அவர்களுக்கு உதவும் என்று அவர்கள் நம்பினர். இந்த சகாப்தத்திற்கு முன்பு, பல அரச கல்லறைகள் அழிக்கப்பட்டு, அவற்றின் மதிப்புமிக்க பொருட்களுக்காக கொள்ளையடிக்கப்பட்டன.ஒரு கணக்கின்படி, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் இதுவரை 63 கல்லறைகளைக் கண்டு பிடித்துள்ளனர், மேலும் பலவற்றைக் கண்டுபிடிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த அற்புதமாக செதுக்கப் பட்ட மற்றும் அலங்கரிக்கப்பட்ட கல்லறைகளில் ஆட்சியாளர்கள் அடக்கம் செய்யப்பட, அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அரசரின் கல்லறைக்கு அருகில் சிறிய பாறையில் வெட்டப்பட்ட அறை களில் புதைக்கப்பட்டனர்.

இந்த கல்லறைகள் உங்கள் சுவாசத்தை பறிக்கும், சுவர்கள் செதுக்கல்களால் அலங்கரிக்கப்பட்டு, அழகான வண்ணங்களில் வரையப்பட்டுள்ளன. யூகிக்கத்தக்க வகையில், சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள பாரோக்கள், கடவுள்கள் மற்றும் தெய்வங்களின் வர்ணம் பூசப்பட்ட காட்சிகள்,





அப்போது தான் உண்மை யான மாயம் ஒன்று நடந்தது, கம்பீரமான சூரியன் இளஞ் சிவப்பு மற்றும் பின்னர் சிவப்பு வானத்தின் வழியாகத் தோன்றத் தொடங்கியது, அதன் அற்புதமான ஒளியில் எங்களின் கீழே உள்ள முழு பரப்பையும் ஒளிரச் செய்து, அந்நிலத்தின் அற்புதமான காட்சி யை எங்களுக்கு அளித்தது. இந்த உற்சாகமான மற்றும் மறக்க முடியாத அனுபவத்திடம் நாங்கள் சரணடைந்தோம். என்ன நடந்தது என அறிவதற்கு முன்பே, 45 நிமிடங்கள் முடிய, நாங்கள் சலசலப்பு ஏதும் இல்லாமல் மென்மையாக மற்றும் சீராக தரையிறங்கினோம்!


பின்னர் எங்கள் கப்பலில் ஒரு ஆடம்பரமான காலை உணவுக்கு திரும்பினோம், வழக்கம் போல,

அவர்களுக்கு அடுத்த வாழ்க்கைக்கு வழிகாட்டும் வகையில் சுவர் களில் மறைகுறியாக்கப்பட்ட ஹைரோகிளிஃபிக் வாசகங்களுடன் உள்ளன.


மம்மிஃபிகேஷன் செயல் முறை அவர்களின் உடலை அடுத்த பிறவியில் சரியாக விழித்தெழுவதற்கு தயார்படுத்தும் என்று நம்பப்பட்டது.

**ஒரு உற்சாகமான பலூன் சவாரி**

எகிப்துடனான எங்கள் காதல் மற்றொரு அதிகாலை சாகசத்தின் மூலம் தொடர்ந்தது-அது பரந்த, பசுமையான நைல் பள்ளத்தாக்கு மற்றும் மன்னர்கள் பள்ளத்தாக்கு மீது ஒரு ஹாட் ஏர் பலூன் சவாரி. கூடைக்கு கீழே உள்ள அறையில் நெருப்பு எரிய, பலூன் மூலம் விரைவில் மேலே தூக்கி செல்லப்பட்டோம். விரைவில் நாங்கள் வானத்தில் மிதந்து, குளிர்ந்த மற்றும் புத்துணர்ச்சியான காற்றை சுவாசி த்தோம். பரந்து விரிந்த நைல் பள்ளத்தாக்கு, எங்களுக்கு கீழே உள்ள ஆற்றின் பிரகாசிக்கும் நீர் மற்றும் வயல்களை அதன் வளமான நீர் மூலம் பசுமையாக்கியதை கண்டு ரசித்தோம்.



*ஒரு கல்லறையின் சுவற்றில் ஹைரோகிளிஃபிக் உரை.*



*டெய்ர் - எல் - பஹரியில் ராணி ஹட்ஷெப்சூட் கோவில்.*



எங்கள் குழுவில் உள்ள தனித்த சைவ உணவு உண்பவரின் கோரிக்கைக்கு அதிக முன்னுரிமை கொடுக்கப்பட்டது, மேலும் சர்வதேச ரோட்டரி நிகழ்வுகளில் நடப்பது போல, (இந்திய) சைவ உணவு சுவையாக இருக்க, இங்கும் அதற்கு அதிக வரவேற்பு இருந்தது!

லக்சரில் உள்ள மற்றொரு அற்புதமான நினைவுச் சின்னம் 18வது வம்சத்தின் ராணி ஹட்ஷெப்சூட் என்பவரால் கட்டப்பட்ட ஹட்ஷெப்சூட் கோவில் ஆகும். எகிப்திய வரலாற்றில் மிகவும் செழிப்பான கட்டிடக் கலைஞர்களில் ஒருவரான அவர், எகிப்தின் மிக நீண்டகாலம் ஆட்சி செய்த பெண் பாரோவாக இருந்தார். மேலும் சுவாரசியமாக, தலைமைத்துவம் என வரும்போது அது ஒரு ஆணின் உலகமாக இருந்ததால், ஆண் ஆடைகளை அணிவதன் மூலம் தனது உருவத்தை ஆணாக சித்தரிக்க மிகவும் நனவான முயற்சிகளை எடுத்துள்ளார்.

எகிப்தில் பார்க்கவும் சிந்திக்கவும் நிறைய இருக்கிறது, பாரோக்களின் நிலம் மற்றும் பழமையான நாகரிகத்தின் மையத்தை முழுமையாக கண்ட திருப்தியுடன் நாடு திரும்புவதற்கு 10 நாள் பயணம் கூட போதுமானதாக இல்லை.

உலகை சுற்றி திரிபவர்களுக்கு ஒரு மனமார்ந்த அறிவுரை - உங்களால் முடிந்த வரை பயணம் செய்யுங்கள் குறைந்த பட்ஜெட்டில் கூட நீங்கள் பயணியுங்கள் அனால் நீங்கள் இளமையாக இருக்க வேண்டும்.ஏனெனில், எகிப்து போன்ற ஒரு நாட்டில், பார்க்க நிறைய இருக்கிறது, மற்றும் நீண்ட தூரம் நடக்க வேண்டும், அந்த நாட்டை உண்மையில் அனுபவிக்க உடற்பயிற்சி முதன்மையானது.

படங்கள் ரஷீதா பகத்

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

(முற்றும்)






# District Wise TRF Contribution as on March 2023

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| **India** | | | | | |
| 2981 | 46,674 | 566 | 0 | 1,184 | 48,424 |
| 2982 | 40,000 | 5,775 | 8,561 | 75,739 | 130,075 |
| 3000 | 62,183 | 5,863 | 0 | 100 | 68,146 |
| 3011 | 78,793 | 15,508 | 27,127 | 492,090 | 613,517 |
| 3012 | 18,642 | 776 | 75,335 | 369,330 | 464,082 |
| 3020 | 143,947 | 21,524 | 52,591 | 2,155 | 220,217 |
| 3030 | 111,150 | 22,693 | 10,000 | 2,791 | 146,635 |
| 3040 | 24,282 | 2,262 | 0 | 110,053 | 136,597 |
| 3053 | 64,826 | 2,736 | 10,000 | 40,757 | 118,319 |
| 3054 | 20,680 | 856 | 8,434 | 35,114 | 65,085 |
| 3060 | 126,225 | 5,101 | 3,000 | 161,833 | 296,158 |
| 3070 | 102,718 | 2,725 | 51,495 | 11,347 | 168,286 |
| 3080 | 37,209 | 9,558 | 0 | 80,262 | 127,029 |
| 3090 | 14,211 | 0 | 6,253 | 0 | 20,463 |
| 3100 | 84,820 | 500 | 25,012 | 8,960 | 119,293 |
| 3110 | 60,332 | 454 | 24,304 | 823,935 | 909,026 |
| 3120 | 35,302 | 411 | 0 | 0 | 35,713 |
| 3131 | 463,132 | 12,290 | 118,436 | 1,387,834 | 1,981,691 |
| 3132 | 48,223 | 7,794 | 50,000 | 5,602 | 111,619 |
| 3141 | 898,863 | 42,106 | 138,499 | 2,796,008 | 3,875,476 |
| 3142 | 293,070 | 5,007 | 56,535 | 278,455 | 633,068 |
| 3150 | 110,488 | 34,757 | 162,103 | 66,102 | 373,451 |
| 3160 | 28,810 | 3,453 | 0 | 3,675 | 35,938 |
| 3170 | 257,130 | 40,962 | 21,506 | 54,236 | 373,834 |
| 3181 | 126,731 | 2,076 | 25 | 4,306 | 133,138 |
| 3182 | 86,995 | 4,423 | 0 | 11,260 | 102,678 |
| 3190 | 185,081 | 14,311 | 108,411 | 381,523 | 689,327 |
| 3201 | 219,680 | 39,917 | 66,036 | 813,899 | 1,139,532 |
| 3203 | 50,989 | 18,016 | 9,293 | 76,209 | 154,507 |
| 3204 | 17,628 | 1,903 | 0 | 17,167 | 36,698 |
| 3211 | 177,294 | 7,165 | 25,000 | 6,729 | 216,188 |
| 3212 | 316,159 | 157,267 | 329 | 81,306 | 555,061 |
| 3231 | 65,784 | 23,880 | 32,278 | 15,044 | 136,986 |
| 3232 | 125,939 | 75,617 | 102,253 | 738,186 | 1,041,995 |
| 3240 | 133,240 | 19,577 | 1,000 | 3,850 | 157,667 |
| 3250 | 25,319 | 315 | 0 | 40,486 | 66,121 |
| 3261 | 31,124 | 917 | 0 | 5,277 | 37,317 |
| 3262 | 53,921 | 464 | 700 | 34,165 | 89,249 |
| 3291 | 96,234 | 2,786 | 65,371 | 12,346 | 176,736 |
| **India Total** | **4,883,826** | **612,313** | **1,259,887** | **9,049,314** | **15,805,340** |
| 3220 **Sri Lanka** | 76,102 | 14,631 | 5,500 | 1,420 | 97,653 |
| 3271 **Pakistan** | 132 | 25,715 | 0 | 1,500 | 27,347 |
| 3272 **Pakistan** | 6,555 | 12,687 | 0 | 6,000 | 25,242 |
| 3281 **Bangladesh** | 68,206 | 5,814 | 24,125 | 186,745 | 284,890 |
| 3282 **Bangladesh** | 49,191 | 6,701 | 2,000 | 10,320 | 68,212 |
| 3292 **Nepal** | 190,358 | 20,766 | 94,167 | 74,114 | 379,404 |
| **South Asia Total** | **5,274,370** | **698,627** | **1,385,679** | **9,329,413** | **16,688,088** |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office

# தொழுநோய் சிகிச்சைக்கு ஆதரவு தரும் தில்லி ரோட்டரி சங்கங்கள்

ஜெய்ஸ்ரீ

கடந்த நான்கு ஆண்டுகளாக RC தில்லி சௌத், RID 3011, RC புதுதில்லி, RC தில்லி சௌத் எண்ட், லெப்ரா சொசைட்டியின் இந்திய பிரிவு, கருவிகள் தயாரிப்பு நிறுவனமான அய்மில் (AIMIL) மற்றும் அசெட்ஸ் கேர் அண்ட் ரீ கன்ஸ்ட்ரக்ஷன் என்டர்பிரைஸ் (ACRE) ஆகியவை இணைந்து தொழுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் தில்லி மற்றும் தேசிய தலைநகர் வலையப் பகுதியில் உள்ள 40 தொழுநோயாளிகள் காலனிகளில் 33-இல் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக எங்கள் சங்க உறுப்பினர் PDG மற்றும் INPPC தலைவர் தீபக் கபூருக்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்று RCDS-இன் முன்னாள் தலைவர் பிரதீப் பாஹ்ரி கூறினார்.

கடந்த 2019-ஆம் ஆண்டு விடுமுறையை கழிக்க கபூர் இங்கிலாந்துக்கு சென்றபோது, லண்டன் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த நயன் படேலை சந்தித்தார். அப்போது அவர், தொழுநோய் நிவாரண சங்கத்தின் பணிகளில் தமக்கு ஈடுபாடு இருப்பதை தெரிவித்துள்ளார். மேலும் கபூரை அதன் தலைமை செயல் இயக்குநருக்கு அறிமுகப்படுத்தினார். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வரை நாங்கள் தொழுநோய் என்பது கடந்த காலங்களில் இருந்த ஒரு நோய். அது பரவும் ஒரு வகையான நோய் என்பது எங்களுக்குத் தெரியாது. எனவே கபூர் திரும்பிவந்து இந்த விவரங்களைச் சொன்னபோது நாங்கள் அதிர்ச்சி அடைந்தோம்.

2005-ஆம் ஆண்டில் இந்தியா தொழுநோயை ஒரு பொது சுகாதார பிரச்னையாக கருதி அதை ஒழித்து விட்டது என்ற எண்ணத்தில் நாங்கள் இருந்தபோது உலகளாவிய மொத்த புதிய தொழுநோயாளிகளில் 60 சதவீதம் இந்தியாவில் இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் (WHO) தெரிவித்தது எங்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது என்றார் அப்போது RCDS தலைவராக இருந்த பாஹ்ரி. 2019ஆம் ஆண்டு அக்டோபரில் தொழுநோய் கட்டுப்பாட்டுக்கான ரோட்டரி சங்கங்களின் கூட்டணி ஏற்படுத்தப்பட்டு அதன் தலைமைச் செயல் இயக்குநராக பாஹ்ரியும், PDG கபூர் அதன் தலைவராகவும் நியமிக்கப்பட்டனர்.

விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மருத்துவத்துறையினருக்கு பயிற்சி அளித்தல், நோயாளிகளை கண்டறிதல், தொழுநோயை கட்டுப்படுத்த மருத்துவ வசதி அளித்தல் ஆகியவற்றில் கவனம்




*ACRE-ன் பவன் திவாரி மற்றும் RC டெல்லி சவுத் முன்னாள் தலைவர் ப்ரதீப் பாஹ்ரி ஒரு தொழுநோயாளிக்கு மூன்று சக்கர வண்டி அளிக்கிறார்.*

செலுத்தும் நான்கு அம்ச உத்தியை கூட்டணி வகுத்தது. தொழுநோய் பற்றி மக்களிடம் உள்ள எண்ணத்தை அகற்றவும், தொழுநோய் சிகிச்சையை மேம்படுத்தவும், நோயாளிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதையும் இந்த திட்டம் நோக்கமாக கொண்டுள்ளது என்றார் RCDS தலைவர் லலித் சாஹ்னே.

பாஹ்ரி மேலும் கூறுகையில், இன்று தொழுநோயாளிகள் நோய் அறிதல் மற்றும் அதற்கான சிகிச்சைக்காக மட்டும் போராடவில்லை, ஒரு கண்ணியமான வாழ்க்கைக்காகவும் அவர்கள் போராடி வருகின்றனர். அவர்களில் பெரும்பாலோர் இந்தியாவில் உள்ள 750 தொழுநோயாளிகள் காலனிகளில் ஒதுக்கப்பட்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர். தில்லியில் இதுபோல் 40 காலனிகள் உள்ளன.



*RCDS தலைவர் லலித் சாஹ்னி மற்றும் ரீட்டா பஸின் சுயபாதுகாப்பு கருவிகளை வழங்குகின்றனர்.*

இந்திய அரசின் தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் ஆதரவுடன் எங்கள் கூட்டணி மருத்துவத் துறையினருக்கு நோயை கண்டறிய பயிற்சி அளித்துள்ளது. மேலும் பிஸியோதெரபி சிகிச்சை, நோயாளிகளுக்கு கட்டுபோடுதல் மற்றும் சிகிச்சைக்குப் பின்னான கவனிப்பு ஆகியவற்றையும் வழங்குகிறது. அல்சர் சிகிச்சைக்கான நடமாடும் கிளினிக் மற்றும் தொழுநோயாளிகளுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட காலணிகள் மற்றும் சுயதேவைக்கான பொருள்கள் அடங்கிய தொகுப்புகள் வழங்கப்படுகின்றன. மேலும் பொது இடங்கள், குடியிருப்புகளுக்குச் சென்று தொழுநோயாளிகளுக்கு மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காளிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இந்த காலனிகளில் உள்ள தொழுநோயாளிகளுக்கு மருத்துவச் சேவை வழங்குவதற்காக லண்டன் ஸ்டாராட்போர்டு ரோட்டரி சங்கத்தை சர்வதேச கூட்டாளராக்க் கொண்டு இந்த கூட்டணி ரூ.78 லட்சத்தை சர்வதேச மானியமாக பெற்றது. இத்திட்டத்துக்கு நிதி சேர்க்க தொழுநோய் கட்டுப்பாட்டு அறக்கட்டளையும் ஏற்படுத்தப்பட்டது.

இரண்டு காலனிகளில் பேட்டரியில் இயங்கும் சூரியசக்தி மின்நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. சமீபத்தில் பரீதாபாத் அருகே தாஹிர்பூரில் உள்ள அன்னை தெரசா தொழுநோயாளிகள் காலனியில் ரூ.15 லட்சம் மதிப்பில் சூரியசக்தி மின்நிலையம் அமைக்கப்பட்டது. இதற்கான தொகையை ACRE நிறுவனம் வழங்கியுள்ளது.



*தாஹிர்பூரில் உள்ள அன்னை தெரஸா இல்லத்தில் சூரியசக்தி மின்நிலையம் சங்கம் அளித்துள்ளது.*

மேலும் தாஹிர்பூரில் உள்ள தொழுநோய் சிகிச்சை மருத்துவமனையில் தொழிற்பயிற்சி அளிக்கவும், AIMIL அறுவைச் சிகிச்சை அளிக்கவும் ஆதரவு அளிக்க முன்வந்துள்ளது என்றார் பாஹ்ரி.

தில்லி அரசின் இந்திரா காந்தி மருத்துவமனையில் ரோட்டரி-லெப்ரா ஆலோசனை மையம் விரைவில் நிறுவப்படும். தொழுநோய் கட்டுப்பாட்டு திட்டம் என்பது 14 ஆண்டு கால திட்டமாகும். இந்த முன்னோடி திட்டம் விரைவில் இந்தியாவின் இதர பகுதிகளிலும் செயல்படுத்தப்படும் என்கிறார் பாஹ்ரி.■

# சமூக உணர்வை வெளிக்கொண்டுவாருங்கள்

ப்ரீத்தி மெஹ்ரா

பசுமையாக்கத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளும்போது அதை சுற்றியிருப்பவர்களுக்கும், அதன் பின்னர் சமூகத்திற்கும் தெரியப்படுத்துங்கள். அப்போது தான் நீங்கள் தொடங்கிய நல்ல நடைமுறைகளுக்கு பன்மடங்கு பலன் கிடைக்கும். உண்மையில் உங்களை சுற்றியுள்ளவர்களிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் போது உங்கள் சமூகம், காலனி மற்றும் உங்கள் நகரத்தில் பிரதிபலிப்பதை கண்டு திருப்பியடைய முடியும்.

சுற்றுச்சூழலை பாதுகாப்பது என்று வரும்போது சமூகப் பணிகளுக்கு ஈடானது எதுவும் இல்லை. இதற்கான முதல்படி பசுமையை நீங்கள் வசிக்கும் பகுதியில் உங்கள் நண்பர்களிடம் அதை கொண்டு செல்வதுதான். பின்னர் இணைந்து செயல் படுவதுடன் அதில் மற்றவர்களையும் ஈடுபடுத்தலாம். அதிக நண்பர்களை உருவாக்குவதுடன் நீங்கள் இதன் ஒரு பகுதியாக இருந்து பல குடும்பங்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

நீங்கள் ஒரு நீர்நிலைக்கு அருகில் வசிக்கிறீர்கள் என்றால், நீங்களும் மற்றவர்களும் சேர்ந்து அதை தூய்மைப்படுத்தலாம். இந்தியாவில் உள்ள பெரும்பாலான ஏரிகள், ஆறுகள் மற்றும் நீரோடைகளில் பிளாஸ்டிக், வகைப்படுத்தப்பட்ட கழிவுகள் மற்றும் சிகரெட் துண்டுகள் உள்ளிட்ட குப்பைகளால் நிறைந்துள்ளன. அக்கம் பக்கத்தில் உள்ள குழந்தைகளை விடுமுறை நாளில் பெரியவர்களின் உதவியுடன் அந்தப் பகுதியை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுத்துங்கள். அப்போதுதான் நல்ல காற்றை சுவாசிக்க முடியும். நீர்நிலைகள் அருகே குப்பைத் தொட்டிகளை நிறுவ நிதி சேகரிக்கவும் அவர்கள் உதவக்கூடும்.

இதே பணியை கடற்கரையிலோ அல்லது மலைப்பகுதியிலோ செய்யலாம். பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றாவிட்டால் அவை 400 ஆண்டுகள் தங்கி பிரச்னைகளை ஏற்படுத்தி உலகில் சுற்றுச்சூழலை பாதிக்கும். தில்லியில் எங்கள் காலனி பகுதியில் உள்ள நகராட்சிப் பூங்காவை மாதம் இருமுறை சுத்தம் செய்ய குழு உள்ளது. இது பலமாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

மறுசுழற்சி என்பது மற்றொரு முக்கியமான நடவடிக்கையாகும். சமூக முயற்சியால்தான் இதை செயல்படுத்த முடியும். உங்களின் பசுமைக்குழு ஒரு குறிப்பிட்ட நாளை தேர்ந்தெடுத்து ஒவ்வொருவரும் தங்களுக்கு தேவையில்லாத வீட்டுப் பொருள்களை கொண்டுவரச் செய்யலாம். நீங்கள் வேண்டாம் என நினைக்கும் ஒரு பூந்தொட்டி இன்னொருவருக்கு தேவைப்படலாம். குழந்தைகளுக்காக வாங்கிய தள்ளு வண்டியோ அல்லது இடத்தை அடைத்துக் கொண்டிருக்கும் கட்டிலோ உங்களுக்கு தேவைப்படாமல் இருக்கலாம். ஆனால். மற்றொருவருக்கு அது தேவையாக இருக்கலாம். இதே போல பழைய ஹாட்பேக், புத்தகங்கள், அலமாரிகள், பிரின்டர்கள் இவை



தேவைப்படாமல் இருக்கலாம். இவற்றையெல்லாம் மற்றவர்களுக்கு இலவசமாக கொடுக்கலாம் அல்லது ஒரு சிறுதொகைக்கு விற்கலாம். இவை பொருள்களை குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சிக்கு உதவும்.

நாட்டில் மின்சார வாகனங்கள் வந்து பெரும வரவேற்பை பெற்றுள்ள நிலையில், தற்போது பயன்பாட்டில் உள்ள வாகனங்களின் ஆயுட்காலம் முடிவடைய உள்ள நிலையில் மின்சார வாகனங்கள் பயன் பாட்டுக்கு மாறலாம். காலனியில் உள்ள அனைவரும் சேர்ந்து மின்சார வாகனங்களுக்கான பேட்டரி நிலையத்தை பொதுவாக ஏற்படுத்தலாம். மேலும் அந்த வாகனங்களை நிறுத்த பொதுவான இடத்தை தேர்ந்தெடுக்கலாம். இதன் மூலம் செலவு சிக்கனமாவதுடன் பசுமையை காக்க முடியும். இது புதிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு உணர்வை குடியிருப்பாளர்களிடம் ஏற்படுத்தும்.



போக்குவரத்து தொடர்புடைய சமூக நடவடிக்கை என்னவென்றால் கார் போன்ற வாகனங்களை வைத்திருப்பவர்கள் ஒரு அட்டவணையை உருவாக்கி காலனியில் உள்ள மக்களை தங்கள் காரில் அழைத்துச் செல்லலாம். ஒவ்வொருவரும் ஒரு நாள் தங்கள் காரை பயன்படுத்துவதன் மூலம் எரிபொருள் மிச்சமாவதுடன், கார்களிலிருந்து வெளிவரும் கண் எரிச்சல் புகை வெளியாவதும் குறைக்கப்படும். இதன் மூலம் நகரில் மாசுபடுதல் குறையும்.

நீங்கள் அடுக்குமாடி குடியிருப்பு களில் வசிப்பவர்களாக இருந்தால், பொதுவான மொட்டைமாடி இருந்தால் சமுதாய சமையலறை நோக்கிலான தோட்டத்தை உருவாக்கலாம். காய்கறி, கீரைகளை நாமே பயிரிட்டு பயன்பெறலாம். ஆனால், இதற்கு நாம் நமது ஓய்வு நேரத்தை செலவிட வேண்டும். ஒரு நிபுணரின் உதவியுடன் இவற்றை தொடங்கினால் இவை ஒன்றும் கடினமான காரியமல்ல. கீரைகள், கொத்தமல்லி, கருவேப்பிலை போன்றவற்றையும் வெண்டை, கத்தரி போன்ற காய்கறிகளையும் நாமே பயிரிட்டால் அந்த அடுக்கு மாடி குடியிருப்பில் உள்ள அனைவரும் பயன்படுத்தலாம். செலவு கட்டுபடியாக வேண்டும் என்று கருதினால் அதை குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். சமூதாயத் தோட்டத்துக்கு தேவையான கூட்டு உரங்களையும் நாம் தயாரிக்கலாம்.

மரங்களை நடுவது போன்ற ஒரு நல்ல செயல் இருக்க முடியாது. அதை நீங்கள் குடியிருக்கும் பகுதியிலேயோ அல்லது வெளியில் உள்ள காலியான பகுதியிலோ செய்யலாம். மரங்களை நடுவதால் நமக்கு தூய்மையான காற்று கிடைக்கிறது. மரங்கள் நிழல் தருகிறது. உங்கள் சொத்துக்களின் மதிப்பை உயர்த்துகிறது. உங்கள் சமூகத்தில் ஒவ்வொருவரின் பிறந்த நாளின் போது ஒரு மரத்தை நடலாம். அல்லது திருமணம், பிற நிகழ்வுகளின் போதும் மரத்தை நடலாம். பழங்குடியினர் சிலர் இந்த முறையை பின்பற்றி வருகிறார்கள். இதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதுடன் நமது வாழ்க்கையும் வளமாகும்.

ஒவ்வொரு காலனியிலும் சமுதாய அடிப்படையில் சூரியசக்தி மின்பலகைகளை நிறுவி அதன் மூலம் கிடைக்கும் மின்சாரத்தை குடியிருப்பவர்கள் பயன்படுத்தலாம். இதனால், மின்சார கட்டணத்தை கணிசமாக குறைக்கலாம். இதில் ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒரு முறை முதலீடு செய்தால் போதும். நீண்டகால நோக்கில் இது லாபம் தரக்கூடியதாகும்.

இவை தவிர வீடுகளுக்குள்ளும், பொதுவான இடங்களிலும் LED பல்புகளை பயன்படுத்துவதன் மூலம் உங்கள் மின்கட்டணத்தை குறைக்க முடியும். மேலும் சுற்றுச்சூழலிலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இன்று கடைகளில் விற்கப்படும் LED பல்புகள் தரமானவை மட்டுமல்ல, அதிக மின்னாற்றல் கொண்டவை. வழக்கமான ஒளிரும் விளக்குகளைவிட குறைந்த மின்சாரமே இதற்கு செலவாகும். மேலும் பழங்கால பல்புகளைவிட இவை நீடித்து உழைக்கக் கூடியவை. இவை சற்று விலை அதிகம் என்றாலும் நீண்டகால கண்ணோட்டத்தில் இதற்காகும் செலவு குறைவு தான். சூரிய வெளிச்சம் அதிகம் உள்ள பகுதிகளில் நீங்கள் வசிப்பவர்களாக இருந்தால். சூரியசக்தியில் இயங்கும் LED விளக்குகளை தேர்வு செய்து பயன்படுத்தலாம்.

சேமிப்பை தவிர, அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட்டு குழந்தைகளுக்கும், மூத்த குடிமக்களுக்கும் பாதுகாப்பான பசுமையான இடங்களை உருவாக்கினால் அதுவே உங்களை வளப்படுத்தும். நீங்கள் அவர்களுக்கு அளிக்கும் பரிசாகும்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

# Subscribe NOW!




## for Rotary News Print Version & e- Version For the Rotary year 2023 – 2024

**Annual Subscription (India)**

| Print version | e-Version |
|---|---|
| ₹480/- | ₹420/- |

Print version ☐ e- Version ☐

| | English | Hindi | Tamil |
|---|---|---|---|
| No. of Copies | | | |

For every new member the pro-rata is ₹40 a month.

Payments can be made online at

**HDFC Bank, Montieth Road, Egmore, Chennai.**
**Rotary News Trust**
**SB A/c No 50100213133460**
**IFSC: HDFC0003820**

Email us the UTR Number, Club Name, President/ Secretary's name, Amount and Date of Transfer.

Please attach the TYPED list of individual members with their complete address, PIN code, Mobile number and e-mail ID. Intimate language preference (English/Hindi/ Tamil) against each member's name.

Rotary Club of ........................................ RI District ....................

Name of the President/Secretary ........................................

Address ........................................

........................................

........................................

City .................... State .................... PIN ☐☐☐☐☐☐

STD Code .................... Phone: Off. .................... Res. ....................

Mobile .................... E-mail ....................

Cheque/DD No. .................... Dated .................... for Rs. ....................

Drawn on ........................................

in favour of "**ROTARY NEWS TRUST**" is enclosed.

Date: President/Secretary

Mail this form to:

Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008.
Tamil Nadu, India. Ph: 044 4214 5666, e-mail: rotarynews@rosaonline.org

# சந்தா விதிமுறைகள்

1. சந்தா ரோட்டரி ஆண்டுக்கானது (ஜூலை முதல் ஜூன் வரை).
2. ஒவ்வொரு ரோட்டரியனும் ஒரு ரோட்டரி இதழுக்குக் கண்டிப்பாகச் சந்தா செலுத்தவேண்டும்.
3. முழு ஆண்டுக்கான சந்தாவைப் பரிந்துரைக்கப் பட்ட படிவத்தில் ஜூலை மாதத்தில் அனுப்ப வேண்டும்
4. ஜூலைக்குப் பிறகு சேர்கிறவர்கள் மீதமுள்ள ரோட்டரி ஆண்டுக்கு அச்சு இதழ் ஓர் இதழுக்கு ரூ.40 மற்றும் மின் இதழ் ஓர் இதழுக்கு ரூ.35 என்ற விலையில் பணம் செலுத்தலாம்.
5. ரோட்டரி செய்திகளுடன் சங்கத்துக்கு உள்ள சந்தாக் கணக்கு தொடர்ந்து செயல்படும் கணக்காகும். அது ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாத முடிவில் முடிவடைவதில்லை.
6. அனைத்து உறுப்பினர்களுடைய பெயர்கள், அவர்களுடைய முழு அஞ்சல் முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், மொபைல் எண், மின்னஞ்சல் ID ஆகியவற்றைப் படிவம் மற்றும் DD அல்லது காசோலையுடன் அனுப்பவேண்டும். GPAY அல்லது இணைய வங்கிச் சேவை வழியாகவும் செய்யலாம். நீங்கள் இணையத்தில் பணம் செலுத்தும்போது, UTR எண், உங்கள் சங்கத்தின் பெயர், செலுத்திய தொகையை உடனடியாக வாட்ஸாப் (9840078074) அல்லது மின்னஞ்சல் (*rotarynews@rosaonline.org*) மூலம் எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். இதைச் செய்யாவிட்டால், உங்கள் பணம் செலுத்தல் எங்கள் கணக்குகளில் தோன்றாது; உங்கள் சங்கம் செலுத்தவேண்டிய தொகை நிலுவையில் உள்ளது என்று காண்பிக்கப்படும்.
7. உங்கள் உறுப்பினர்களுடைய அஞ்சல் முகவரி, தொடர்புத் தகவல்களை ஒவ்வோர் ஆண்டும் எங்களுக்கு நேரடியாகத் தெரிவியுங்கள். RI உறுப்பினர் தகவல்களை எங்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை.
8. உறுப்பினர்கள் தங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பும் சந்தாதாரர்கள் பட்டியலில் தங்கள் பெயர்கள் சேர்க்கப்பட்டிருப்பதை உறுதி செய்யவேண்டும். நீங்கள் பணம் செலுத்திவிட்டீர்கள், ஆனால், உங்கள் பெயரை உங்கள் சங்கம் எங்களுக்கு அனுப்பவில்லை என்றால், உங்களுக்கு இதழின் பிரதி கிடைக்காது அல்லது உங்கள் சங்கம் சந்தாவை மின் இதழுக்கு சேர்த்துள்ளதா என்று உறுதிபடுத்திக்கொள்ளுங்கள்.
9. உறுப்பினர் நிலையில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிச் சங்கங்கள் உடனடியாக எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும்.
10. எங்களிடம் உள்ள பட்டியலின்படி நாங்கள் அனுப்பும் இதழ்களின் எண்ணிக்கைக்கு சங்கங்கள் பணம் செலுத்த வேண்டும்.
11. சங்கங்கள் செலுத்தாத தொகைகள் அந்த சங்கங் களுக்கு நிலுவைத் தொகையாகக் காண்பிக்கப்படும். அதன் பிறகு பெறப்படும் தொகையாவும் முந்தைய நிலுவைத் தொகைகளுக்கு சரி செய்யப்படும்.
12. சங்கங்கள் எங்களுடன் பகிர்ந்துகொள்ளும் பட்டியலை நாங்கள் அவ்வப்போது RIன் தரவுகளுடன் சரி பார்க்கிறோம். விடுபட்ட சந்தாதாரர்களைக் கண்டறிகிறோம்.
13. உறுப்பினர் ஒருவர் ஒரு மாதத்துக்கு இதழைப் பெறாவிட்டால் எங்களுக்கு அதை உடனடியாகத் தெரிவியுங்கள்.
14. சில பகுதிகளில் தபால் வழங்கல் பிரச்சனைகள் இருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், சங்கங்கள் பிரதிகளை மொத்தமாகப் பெறத் தேர்ந்தெடுக்கலாம். அதற்குக் கூடுதல் கட்டணங்கள் பொருந்தும்.

## இப்போது, சந்தா செலுத்தாத சங்கங்கள் RIஆல் நீக்கப்படும்

ஜூலை 1, 2022 முதல், ரோட்டரி பத்திரிக்கையை சந்தா செலுத்தி வாங்காத ரோட்டரி சங்கங்களை RI வாரியம் நீக்கம் செய்யும் என அதன் ரோட்டரி கொள்கை கோட்பாட்டில் சேர்த்துள்ளது. இணங்காத சங்கங்கள் குறித்த காலாண்டு அறிக்கை, அந்தந்த மாவட்ட ஆளுனர்களுக்கு தெரிவித்த பிறகு, எங்கள் அலுவலகம் மூலம் RIக்கு அனுப்பப்படுகிறது. இந்த சங்கங்களுக்கு **90 நாள் அவகாசம்** வழங்கப்படும், அதன் பிறகு சந்தா செலுத்தாத சங்கம் RIஆல் இடைநீக்கம் செய்யப்படும்.

180 நாட்களுக்கு இடைநிறுத்தப் பட்ட மற்றும் இணங்காத சங்கங் களை,ரோட்டரி நியூஸ், RIக்கு தெரிவித்த பிறகு, "போர்டு அதன் விருப்பப்படி இந்த சங்கங்களை நீக்கம் செய்யலாம்" என்று ஒரு நினைவூட்டல் கடிதத்தை அனுப்பும்.

சங்கத்தலைவர்களே, தயவு செய்து உங்கள் உறுப்பினர்களை ரோட்டரி நியூஸ்-ன் சந்தா செலுத்தி இந்தியாவில் ரோட்டரி செயல்பாடு களின் முழு விவரத்தையும் பெற செய்யுங்கள். உங்கள் PETS/GETS பாடத்திட்டத்தில் கட்டாய சந்தா பற்றிய தகவலைச் சேர்க்க RI பரிந்துரை செய்துள்ளது.

இசை & மெல்லிசை


# மாயாஜால இசை ஜாம்பவான் S D பர்மன்!

S R மது

நடிகர் தேவ் ஆனந்த், 1963-இல் தமது சிறந்த படைப்பான “கைடு” படத் தயாரிப்பில் பிஸியாக இருந்தார். இசையமைப்பாளர் S D பர்மன், அந்த படத்தின் 10 பாடல்களுக்கும் இசையமைக்க ஒப்புக் கொண்டிருந்தார். ஒரு பாடலுக்கு இசையமைத்த நிலையில் அவர் உடல்நலம் குன்றியிருந்தார். வேறு இசையமைப்பாளரை போட தேவ் ஆனந்த் மறுத்துவிட்டார். நீங்கள் குணமாகி வரும் வரை காத்திருக்கிறேன் என்றார். அதற்கு S D பர்மன், நான் இல்லையென்றால் என்ன செய்வீர்கள் என்று கேட்டார். அப்படியானால் ஒரே ஒரு பாடலுடன் படத்தை ரிலீஸ் செய்துவிடுவேன் என்று தேவ் ஆனந்த் பதிலடி கொடுத்தார்.


S D பர்மன் விரைவிலேயே குணமடைந்து, அனைத்து பாடலுக்கும் இசையமைத்தார். அவை சிறப்பான வரவேற்பை பெற்றது. 30 உயர்நிலை பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள், பாடகர்களிடம் அவுட்லுக் பத்திரிகை கருத்துக் கணிப்பு நடத்தியபோது அந்த படம் பாலிவுட் வரலாற்றில் சிறந்த இசைப்படைப்பாக தேர்வுசெய்யப்பட்டது.

கைடு படம் திரைநட்சத்திரங் களால் மின்னியது. ஆஜ் பிர் ஜீனே கி தமன்னா ஹை வஹிதா ரஹ்ம்மான் நடிக்க லதா பாடிய பாடல், காத்தா ரஹே மேரா தில் (தேவ் ஆனந்த்-வஹிதா நடிக்க, லதா, கிஷோர் குமார் பாடிய காதல் பாட்டு, பியா து சே நைனை லகே ரே (நடனப்பாடல்), ஆரம்ப காட்சி களுக்காக வஹான் கௌன் ஹை தேரா என்னும் S D பர்மன் பாடிய பின்னணிப் பாடல்.



S D பர்மன் மீது தேவ் ஆனந்த் வைத்திருந்த நம்பிக்கை வெறித்தனமானது. ஆரம்பத்தில் நவ்கேதன் பிலிம்ஸ் (தேவ் ஆனந்த் மற்றும் அவரது சகோதரர் சேடன் ஆனந்துக்கு சொந்தமானது) தயாரிப்புக்காக அவர் இசையமைத்ததை என்னால் மறக்க முடியாது என்றார் தேவ் ஆனந்த். நவகேதன் பிலிம்ஸ் படநிறுவனம் தயாரித்த 14 படங்களுக்கு S D பர்மன் இசையமைத் துள்ளார். பாஸி, டாக்ஸி டிரைவர், நவ் தோ கியாரா, காலாபாணி, காலா பஸார், கைடு, ஜுவல் தீஃப், தேரே மேரே சப்னே, பிரேம் புஜாரி இவை எல்லாமே மறக்கமுடியாத படங்கள், மறக்கமுடியாத பாடல்களைக் கொண்ட பொக்கிஷங்கள்.

ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் (1935–1975) S D பர்மன், 100-க்கும் மேலான



SD பர்மன் மனைவி மீரா மற்றும் மகன் RD பர்மன் ஆகியோருடன்.

ஹிந்தி, பெங்காலி படங்களுக்கு இசை அமைத்துள்ளார். மேலும் சில அற்புதமான பாடல்களை அவரே பாடியுள்ளார். திரைத்துறையில் அவரது நீண்டகால வாழ்க்கை குறிப்பிடத்தக்கது. சில இசையமைப்பாளர்கள் அதிர்ஷ்டம் இல்லாத அல்லது காலமாற்றங்கள் காரணமாக நீண்டகாலம் பணியாற்ற முடியவில்லை. ஆனால், பர்மன் இறுதிக்காலம் வரை பிஸியாகவே இருந்தார். கீதா தத், ஆஷா, கிஷோர், மன்னாடே, ஹேமந்த் குமார் உள்ளிட்ட பாடகர்களின் முன்னேற்றத்துக்கு காரணமாக இருந்தார் பர்மன்.

இசையமைப்பாளர் SD பர்மனின் சிறப்பு என்னவென்றால் அவரது இசை இளமையாகவும், எப்போதுவேண்டுமானாலும் கேட்கும் வகையிலும், மக்களின் நம்பிக்கையை பிரதிபலிக்கும் வகையிலும் இருந்தது. இவைதான் தேவ் ஆனந்தை கவர்வதற்கு முக்கிய காரணமாகும். 1971-ஆம் ஆண்டில் 65 வயதில் பர்மன், ஷர்மிலி படத்துக்காக சாயே ஆதி ராத் பாடலுக்கு இசையமைத்தார். அதே நேரத்தில் அவரது மகன் RD பர்மன் அமர் பிரேம் படத்துக்காக ரெய்னா பீடி ஜாயே பாடலுக்கு இசையமத்து ரசிகர்களின் மனதை கவர்ந்தார். அப்பாவும் மகனும் போட்டியாளர்களாகி விடுவார்களோ என்ற நிலை இருந்தது.

அவர் இசையமைத்த பாடல்களில் இனிமையும் எளிமையும் இருந்தது. என் வீட்டு வேலைக்காரன்கூட முணுமுணுக்கும் வகையில் இசையமைக்க வேண்டும் என்பதுதான் எனது விருப்பம் என்று பர்மன் அடிக்கடி கூறுவார். சாமானியர்கள் விரும்பி கேட்கும் அளவுக்கு அவரது இசையமைப்பு இருந்தது. மக்களின் நாடித்துடிப்பை அறிந்து அவர்களது உள்ளுணர்வைத் தூண்டும் வகையில் பர்மன் இசையமைத்ததில் ஆச்சரியம் ஏதும் இல்லை.

பாலிவுட் பாடல்களின் இளவரசராக பர்மன் இருந்தார். இளம் வயதில் அவர் பெங்காலின் ஊரகப் பகுதிகளையே சுற்றிவந்தார். அவர் அப்போதிலிருந்தே நாட்டுப்புற பாடல்களை சேகரித்து அதற்கு ஏற்ப டியூன்கள் அமைத்து தொகுப்பாக சேகரித்து வந்தார். அவர் பின்னாளில் இசையமைப்பாளராக உருவானதும் அவை கை கொடுத்தது. எனக்குத் தெரிந்து ஏராளமான டியூன்களுடன் திரையுலகில் நுழைந்தவர்கள் SD பர்மனைத் தவிர வேறு எவரும் இல்லை என்று தேவ் ஆனந்த் குறிப்பிட்டுள்ளார்.

அவரது இசைமழையில் நனையாதவர்களே இல்லை என்று SD பர்மன், அவரது இசை உலகமும் புத்தகத்தை எழுதிய காகேஷ் பர்மன் கூறுகிறார்

எல்லாவற்றையும்விட அவரது இசையில் தனித்தன்மை இருந்தது.



ஆஷா போஸ்லேயுடன்.


ஒரு பாடலுக்கு இசையமைத்த பின் அந்த பாடலை அவர் காலை முதல் இரவு வரை தானே அதை பாடி பார்த்து ரசிப்பார். அதன் பின்னர்தான் அதை வெளியிடுவார் என்கிறார் மன்னாடே.

**இதோ அவரது படைப்புகளில் சில:**
மேரா சுந்தர் சப்னா பீட் கயா- கீதா தத், 1947; தோ பாய். தட்பீர் சே பிக்டி ஹுய் தட்பீட் பனா லே- கீதா தத் பாடியது. படம் பாஸி. 1952; தண்டி ஹவாயென்- லதா, நவ்ஜ்வான், 1950. யே ராத் யே சாந்தினி பிர் கஹான்- ஜால், 1952; ஜீவன் கே ஸ்பர் மெய்ன் ராஹி- கிஷோர், முனிம்ஜி, 1954; யே துனியா அகர் மில் பி ஜாயே - முகமது ரஃபி, பியாஸா, 1957.

சாந்த் பிர் நிக்லா- லதா, பேயிங் கெஸ்ட், 1957; இக் லட்கி பீகி பாகி ஸி- கிஷோர், சல்தி கா நாம் காடி, 1958; வக்த் நே கியா- கீதா தத், காகஸ் கே பூல், 1959; மேரே ஸப்னோன்கி ராணி- கிஷோர், ஆராதனா, 1969; சபல் ஹோகி தேரி ஆராதனா - S D பர்மன், ஆராதனா, 1969; தேரே மேரே மில் கி யே ரெய்னா - லதாவும் கிஷோரும் அபிமான் படத்தில் (1971) இணைந்து பாடிய பாடல்.


**தொழில் வாழ்க்கை**
S D பர்மன், 1906ஆம் ஆண்டு இப்போது வங்கதேசத்தில் உள்ள கோமில்லாவில் பிறந்தார். நான்கு மகன்கள், ஐந்து மகள்கள் கொண்ட குடும்பத்தில் இளையவர். அவரது தந்தை திரிபுரா அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது தாயார் மணிப்பூர் இளவரசியாக இருந்தார். சில ஆண்டுகளிலேயே அரச குடும்பத்துடன் இருந்த உறவை பர்மன் துண்டித்துக் கொண்டார். பார்வையற்ற பாடகர் கே.சி.டே, சாரங்கி மாஸ்டர் கலிஃபா பாதல் கான் மற்றும் சாரோட் மாஸ்டர் உஸ்தாத் அலாவுதீன் கான் உள்ளிட்ட பலரை குருவாக ஏற்று முறைப்படி இசை கற்றுக்கொண்டார்.

கொல்கத்தாவில் அகில இந்திய வானொலியில் ஒரு பாடகராகராகவும், பெங்காலி படங்களில் பாடகராகவும், இசையமைப்பாளராகவும் வாழ்க்கையைத் தொடங்கினார்.


*மகன் RD பர்மனுடன்.*


*தேவ் ஆனந்துடன்.*


*கிஷோர்குமாருடன்.*


*நௌஷதுடன், SD பர்மன், ஜெய்கிஷன் மற்றும் மதன் மோகன்.*

1944-ஆம் ஆண்டு மும்பைக்கு குடிபெயர்ந்தார். 1947-இல் பிலிமிஸ்தானுக்காக அவர் இசையமைத்த தோ பாய் படம் வெளிவந்தது அவருக்கு கிடைத்த முதல் வெற்றியாகும். அந்த படத்தில் வரும் கீதா ராய் பாடிய மேரா சுந்தர் சப்னா பீட் கயா என்னும் பாடல் ஹிட்டானது. 1975-ஆம் ஆண்டு இறக்கும் வரை பர்மன் பாலிவுட்டின் மிகச் சிறந்த பெரும்பாலான மறக்கமுடியாத பாடல்களுக்கு இசையமைத் திருந்தார். தேவ் ஆன்ந்த் தவிர குருதத்துக்காகவும் அவர் பல பாடல்களுக்கு இசையமைத்தார். பியாஸா (1957) மற்றும் காகஸ் கி பூல் (1959) இரண்டும் அவரது சிறந்த இசையமைப்புக்கு எடுத்துக் காட்டான திரைப்படங்கள். சல் தி கா நாம் காடி (1958) படத்தில் இவரது இசையமைப்பில் கிஷோர் குமார் பாடிய பாடல் ரசிகர்கள் வட்டாரத்தில் பெரும் புயலை கிளப்பியது. 1959-இல் விமல் ராயின் சுஜாதா படம் வெளியானது. இதில் காலி கதா சாயீ (ஆஷா), ஜல்தே ஹை ஜிஸ்கே லீயே (தல்த் மஹ்மூத்) மற்றும் நான்ஹி காலி சோனி சாலி (கீதா தத்) ஆகிய பாடல்கள் பர்மன் மெல்லிசையில் மறக்க முடியாதவையாக அமைந்திருந்தன.

1960-களிலும் ஹிந்தி திரையுலகை பர்மன் கலக்கினார். பாந்தினி (ஆப் கே பரஸ் பெஹஜ் பையா கோ பாபுல்- ஆஷா, 1963), கைடு (1965), ஜூவல் தீஃப் (1967) மற்றும் பல படங்களை குறிப்பிடலாம்.

உடல்நலம் சரியில்லாத நேரத்திலும், 1970-களில் ஷர்மிலி (1971) மற்றும் அபிமான் (1973) ஆகிய படங்களுக்கு அவர் இசையமைத்திருந்தார். ஆனால், கோமா நிலையை அடைந்த அவர், 1975-ஆம் ஆண்டு 69 வயதில் காலமானார்.

### பர்மனும் கிஷோர்குமாரும்

பர்மன், கிஷோர் குமாரை மிகவும் விரும்பினார். இருவருமே விசித்திரமானவர்கள். அவர்களது உறவை நம்மால் மதிப்பிட முடியாது. ஒருநாள் போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலையில் பர்மனின் காரும் கிஷோர் குமார் காரும் எதிரெதிரே வந்தன. பர்மன், கிஷோரிடம் ஒரு பாடலின் டியூன் குறித்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். பின்னால் வந்த கார்களின் டிரைவர்கள் ஹாரன் அடித்துப் பார்த்தார்கள். அவர்களின் செய்கைக்கு டிரைவர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஆனாலும், அந்த பாடலுக்கான டியூனை வெற்றிகரமாக முடிக்கும் வரை பர்மன் அந்த இடத்தை விட்டு நகரவே இல்லை.

மற்றொரு சந்தர்ப்பத்தில் காரில் சென்று கொண்டிருந்த பர்மன், போக்குவரத்து சிக்னல் இருக்கும் இடத்தில் கிஷோர் குமாரை பார்த்ததும், தனது காரிலிருந்து இறங்கி அவரின் காரில் ஏறிக்கொண்டார். பின்னர் டிரைவரிடம் நகருக்கு வெளியே காரை ஓட்டிச் செல்லுமாறு கூறினார். உடனே கிஷோர்



*இடதிலிருந்து: பிமல் ராய், தலத் மஹ்மூத், முகமது ரஃபி, SD பர்மன் தேவ்தாஸ் பட ஒளிப்பதிவில்.*

# நீங்காத நினைவுகள்



லதா மங்கேஷ்கருடன்.

1951-ஆம் ஆண்டு வெளியான பாஸி படத்தின் வெற்றிக்குப் பிறகு S D பர்மன் படு பிஸியாக இருந்தார். ஆண்டுக்கு மூன்று திரைப்படங்களுக்கு மட்டுமே இசையமைப்பது என்று முடிவு செய்தார். தனது படத்துக்கு S D பர்மன் தான் இசையமைக்க வேண்டும் என்பதில் குறியாக இருந்த ஒரு தயாரிப்பாளர் ஒரு சூட்கேஸ் நிறைய கரன்சி நோட்டுகளுடன் அவரை அணுகினார். பர்மன் அவரிடம், நீங்கள் எனக்கு எவ்வளவு வேண்டுமானாலும் பணம் தர முன்வரலாம். ஆனால், எனது பதில் முடியாது என்பதுதான் என்று கூறிவிட்டார். பாவம் தயாரிப்பாளர் மனமுடைந்து வெளியேறினார். இதை நேரில் பார்த்த ஒருவர், பர்மன் பணத்தைவிட புத்திசாலியா என்று கேட்டார். அதற்கு பர்மன், கிணற்றில் நிறைய தண்ணீர் இருந்தாலும், தேவையான அளவுதான் எடுக்க வேண்டும். இல்லையெனில் கிணறு வறண்டுவிடும். இது இசைக்கும் பொருந்தும் இல்லையா என்றார்.

1946-ஆம் ஆண்டு அவர், அகர்தலாவில் ஒரு படகில் பயணம் செய்தார். படகோட்டி, S D பர்மனின் பெங்காலி பாடல் ஒன்றை பாடினார். இந்த பாடலை உருவாக்கியவர் படகில் வரும் S Dபர்மன் தான் என தெரிந்தவுடன் அவரது காலில் விழுந்து வணங்கினார்.


லதாவின் இனிமையான குரலுக்கு இணையானது எதுவும் இல்லை என்று பர்மன் ஒரு முறை கூறினார். பர்மனுக்காக லதா 130 தனிப்பாடல்களை பாடியுள்ளார். கீதா தத் 44 பாடல்களையும், முகமது ரஃபி 45 பாடல்களையும், கிஷோர் 52 பாடல்களையும், ஆஷா 75 பாடல்களையும் பாடியுள்ளனர். 1958-இல் மிஸ் இந்தியா படத்தில் ஒரு பாடலை பதிவு செய்வது தொடர்பாக லதாவுக்கும் பர்மனுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதனால் 1962 வரை இருவரும் சேர்ந்து பணியாற்றவில்லை. இந்த மோதலில் பயனடைந்தவர் ஆஷா போஸ்லேதான். பின்னர் மீண்டும் பர்மனும் லதாவும் ஒன்று சேர்ந்ததும் லதாவே அவரின் பாடகராக இருந்தார்.

பெங்காலிகள் S D பர்மனை ஒரு பாடகராவே பார்த்திருந்தனர். அதனால் பெங்காலி படங்களுக்கு அவர் இசையமைத்திருந்தாலும் பெரும் வெற்றியைப் பெறவில்லை. அதற்கு காரணம் ரசிகர்கள் அவர் பாடிய பாடல்களை மட்டுமே விரும்பி ரசித்தனர்.

S D பர்மன், வெள்ளை குர்தாக்களையே அணிந்து கொள்வார். அவர் பான் (பீடா) சுவைப்பதில் ஆர்வம் உள்ளவர். தன்னிடம் இருக்கும் பான் பீடாவை அவர் எவருடனும் பகிர்ந்து கொள்ளமாட்டார். எப்போதாவது லதாவின் பாடல் பதிவு சூப்பராக அமைந்துவிட்டால் அவருடன் பான் பீடாவை பகிர்ந்து கொள்வதுண்டு. அவர் ஒரு சிறந்த கால்பந்து ரசிகர். ஈஸ்ட் பெங்கால் அணியின் தீவிர ரசிகர்.



முகமது ரஃபியுடன்.



V பல்சரா, புபிந்தர் சிங் மற்றும் கிஷோர் குமாருடன்.

குமார், தாதா நான் பாடல் ஒலிப்பதிவுக்குச் செல்கிறேன். என்னை விட்டுவிடுங்கள் என்றார். அதற்கு பர்மன், பாடல் ஒலிப்பதிவை ஒத்தி வைத்துவிடு. இப்போது பருவ நிலை நன்றாக உள்ளது. இயற்கையை ரசிப்போம் என்றார். அவர்கள் நகருக்கு வெளியே ஒரு புல்வெளியை அடைந்தனர். உடனே பர்மன் கீழே இறங்கி பாட்டு பாடி, ஆட்டம் போட தொடங்கி விட்டார். கிஷோரையும் உடன் அழைத்தார்.

1975-ஆம் ஆண்டில் பர்மன் உடல்நலம் இல்லாமால் இருந்தார். Dr அவரை மருத்துவ மனையில் சேர்த்து சிகிச்சை அளிக்க விரும்பினார். ஆனால், அவர் மறுத்துவிட்டார். மிலி படத்துக்காக கிஷோர் பாடல் பதிவு இருப்பதாக கூறினார். அப்போது கிஷோருக்கு தொண்டை குரல் கரகரப்பாக இருந்தது. உடனே கிஷோரிடம், நீ மருத்துவமனைக்குச் சென்று தொண்டைக்கு சிகிச்சை செய்து கொள். நீ குணமாகி திரும்பி வரும் சமயத்தில் நானும் உடல்நிலை சரியாகி பாடலை பதிவு செய்யத் தயாராகிவிடுவேன் என்றார்.

ஆனால், பர்மன் மருத்துவ மனையிலிருந்து வீடு திரும்பவே இல்லை. மருத்துவ மனையிலேயே கிஷோர், மிலி படத்துக்கான பாடல் பதிவை போட்டுக்காட்டி அதற்கு பர்மனிடம் ஒப்புதல் பெற்றார். ஆனால், அடுத்த சில நாட்களில் அவர் காலமானார்.

பர்மன், தனது அரசு மரபை துறந்திருக்கலாம். ஆனால், புதிய இசை மரபை உருவாக்கி உலகெங்கிலும் உள்ள இசை ரசிகர்களின் நெஞ்சத்தில் நிறைந்திருக்கிறார்.



கீதா தத், குரு தத் மற்றும் RD பர்மனுடன்.

எழுத்தாளர்
மூத்த பத்திரிகையாளர்
மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப்
மெட்ராஸ் சவுத் உறுப்பினர்



# புதிய உலகங்களைக் கண்டறிதல்

**சந்தியா ராவ்**

*புத்தகங்கள் உங்களை உங்கள் ஓய்வு நேரத்தில், உங்கள் மகிழ்ச்சிக்காக எங்கு வேண்டுமானாலும் அழைத்துச் செல்லும். பஸ் அல்லது ரயிலைப் பிடிக்கவோ அல்லது விமானத்தில் ஏறவோ தேவையில்லை!*


"புனைகதை என்ற பொய்யின் மூலம் நாம் உண்மையைச் சொல்கிறோம்" என்ற பிரெஞ்சு தத்துவஞானி, எழுத்தாளர், நாடக ஆசிரியர் ஆல்பர்ட் காமுவின் வார்த்தைகள் நம்மை சிந்திக்க தூண்டுகிறது. யோசித்துப் பாருங்கள். வாசகர்கள் தாங்கள் என்ன படிக்கிறோம், ஏன் படிக்கிறோம், எப்படி படிக்கிறோம் என்றும் அதை தொடர்ந்து வரும் எண்ணங்களை பற்றியும் அடிக்கடி சிந்திப்பார்கள். நன்கு அறியப்பட்டவர்கள், வாசிப்பு மற்றும் நூலகங்கள் குறித்து கருத்து தெரிவித்துள்ளனர். தி மார்ஜினேலியனில் ஒரு கட்டுரையில், மரியா போபோவா எழுதுகிறார்:

நான் சமீபத்தில் வாங்கிய இரண்டு புத்தகங்கள், முற்றிலும் வித்தியாசமான உலகங்களை எனக்குக் காண்பிப்பதாக உறுதியளித்தன. முதலாவது ஒரு புனைகதை படைப்பு, இது வாஷிங்டன் DC-ல் உள்ள ஒரு புத்தகக் கடையில் இருந்தது. ஒரு நாள் கனெக்டிகட் அவென்யூவில் வாகனம் ஓட்டும் போது, மிருகக் காட்சிசாலைக்கு செல்லும் வழியில், பச்சை முகப்புக்கு எதிராக Politics and Prose என்ற பெயரைக் கவனித்தேன், மேலும் அதைப் படம் எடுத்திருந்தேன். சில நாட்களுக்குப் பிறகு, நாங்கள் அங்கு நிறுத்த வாய்ப்பு கிடைத்தது சாரா நோவிக்கின் 'ட்ரூ பிஸ்' என்ற புத்தகத்தை வாங்கினேன்.

காது கேளாதோருக்கான உறைவிடப் பள்ளியில் ஒரு ஆசிரியருக்கும் அவரது மாணவர்களுக்கும் ஒரு வருடத்தில் நடக்கும் காதல், அரசியல் மற்றும் குடும்ப மாற்றங்களைத் தொடர்கிறது இந்த நாவல் என்று கூறப்பட்டிருந்தது.

நான் இப்போது தான் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்திருக்கிறேன். இது ஒரு வகுப்பறையில் ஒரு சிறுமி தனது காதில் கூர்மையான பென்சிலால் குத்துவதைப் பற்றிய விளக்கத்துடன் தொடங்குகிறது. குழந்தைகள் அந்த திசைதிருப்பலை வரவேற்கும் அதே வேளையில், ஆசிரியர்கள் குழந்தையின் 'குடும்பச் சூழல்' குறித்து அதிக அக்கறை காட்டுகின்றனர். "பிப்ரவரி அவளை அழைத்துச் செல்ல வந்த அவள் தந்தையிடம் விளக்கினாள்: உண்மையில், அவள் சிறிது கூட வருத்தமாக இல்லை, நேர அட்டவணைகள், அவள் மேசைக்கு மேலே உடைந்த விளக்கின் சலசலப்பு, தரையில் உலோக நாற்காலிகளின் கீறல்கள் ஆகியவற்றைக் கேட்டு வெறுத்து விட்டதாக கூறினாள்.

புத்தகத்தை வாங்கிய மறுநாள், நானும் என் கணவரும் நியூ ஜெர்சிக்கு ஒரு பயணத்தை மேற்கொண்டோம், அங்கு ஒரு மாலை ஒரு கூட்டத்தில், எனது உறவினர் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு இளம் பெண்ணைச் சந்திக்க என்னை அழைத்துச் சென்றார். அவர் அதற்கு மேல் எதுவும் சொல்லவில்லை, நாங்கள் சந்தித்த போது, அந்த பெண்ணும் அவர் கூறியது போலவே பிரகாசமானவராக தோன்றினார்: அவரிடம் ஏதோ ஒன்று இருந்தது. பிறகு தான் அவர் செவித் திறன் குறை பாடுள்ளவர் என்றும், தன் சவால்களை தைரியத்துடனும் கருணையுடனும் எதிர்கொள்கிறார் என்ற உண்மையைப் பகிர்ந்து கொண்டார். அந்த தற்செயலால் தாக்கப்பட்ட நான் ட்ரூ பிஸ்ஸை வாங்கியதை குறிப்பிட்டேன்; என் உறவினர் உடனே அந்த இளம் பெண்ணும் அவளுடைய தாயும் சென்று கொண்டிருந்த காரின் குறுக்கே ஓடி, அதை நிறுத்தி என்னிடம், "அவர்களிடம் சொல்லுங்கள். அவர்களிடம் சொல்லுங்கள்" என்றார். எனவே நான் புத்தகத்தைப் பற்றியும், நான் அதைப் படிக்க ஆரம்பித்திருக்கிறேன் என்றும், மேலும் அதில் காக்லியர் சாதனங்கள் பற்றிய குறிப்பு இருந்தது என்றும் அவர்களிடம் சொன்னேன். அந்த இளம் பெண் தன் காதுகளைச் சுட்டிக் காட்டி, "ஓ, எனக்கும் ஒரு காக்லியர் சாதனம் பொருத்தப் பட்டுள்ளது" என்றார்.




நான் காது கேளாதவர்களின் உலகத்தை ஆராயும் ஒரு நாவலைப் படிப்பது மட்டுமல்லாமல் அந்த உலகத்தைச் சேர்ந்த ஒருவரைச் சந்தித்தும் இருக்கிறேன்! நான் என்ன சொல்வது? நீங்கள் நினைக்காத இடங்களுக்கு புத்தகங்கள் உங்களை அழைத்துச் செல்கின்றன.

மற்ற புத்தகம்: ‘கிங்டம் ஆஃப் கேரக்டர்ஸ்’. இந்த புத்தகம் தெளிவாக சொல்வது போல், மொழிகள் உலகங்களை வெளிப்படுத்துகிறது. இலக்கியம், கலாச்சாரம் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் கலாச்சார வரலாற்றா சிரியரான ஜிங் சூவால் மீண்டும் உருவாக்கப்பட்ட இன்னொரு உலகத்தை இப்புத்தகம் எனக்கு காண்பித்தது. கிங்டாம் அஃப் கேரக்டர்ஸ் என்று அழைக்கப்படும் இது, “சீனாவை நவீனமாக்கிய மொழிப் புரட்சி”பற்றிப் பேசுகிறது. அது என்ன? என்று நீங்கள் கேட்கலாம். பின் அட்டையில் இருந்து மீண்டும் மேற்கோள் காட்டி, ஜிங் சூ ‘சீனாவின் மிகவும் அச்சுறுத்தலான சவால் ஒரு மொழியியல் சவால் என்று வாதிடுகிறார்: உலக வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் நவீன உலகிற்கு வலிமையான சீன மொழியை அணுகக்கூடியதாக மாற்ற ஒரு நூற்றாண்டு காலப் போராட்டம்.’ ‘மொழி எவ்வாறு முழுமைப்படுத்தப் பட வேண்டிய ஒரு தொழில்நுட்பம் என்றும், பயன்படுத்தி மற்றும் விரிவு படுத்தவேண்டிய ஒரு நுட்பமான ஆனால் வலிமையான சக்தி என்பதையும் சூ புத்தகத்தில் வெளிப்படுத்துகிறார்.’

சீன, கொரிய, பாரசீக எழுத்துக்கள் மற்றும் அந்த கலாச் சாரங்களில் அவற்றின் முக்கியத்துவத்தை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். ஆனால் யோ குஹோபெங், யு ஜிண்டாவ் மற்றும் ஜி ஜின்பிங் உள்ளிட்ட சீன நாட்டுத் தலைவர்கள் அதிகாரப்பூர்வ சந்தர்ப்பங்களில் சில எழுத்துக்கள் அல்லது நல்ல சொற்றொடர்களை அடிக்கடி எழுதுவது பற்றி எனக்குத் தெரியாது. பீப்பிள்ஸ் டெய்லியின் மாஸ்ட்ஹெட்டில் மாவோவின் எழுத்துக்கள் பயன்படுத்தப் பட்டதாகத் தெரிகிறது. புத்தகத்தின் முன்னுரையில் காணப்படுவது போல், “...சீனச் சூழலில், எழுத்தறிவு என்பது படிக்கவும் எழுதவும் தெரிந்ததை விட மேலான ஒன்று. இது பாரம்பரியமான பல விஷயங்களைக் குறிக்கிறது: பழங்காலத்தின் உன்னதம் மற்றும் ஞானத்தில் மூழ்கியிருப்பதன்




அடையாளம்; இந்தப் புத்தகம் என்ன செய்கிறதென்றால், அதன் மொழியில் வேரூன்றி இருக்கும் சீனாவின் கலா சாரப் பிரபஞ்சத்தை பார்த்து, ‘அடிமட்டத் திலிருந்து நவீன அரசின் உயர் மட்டம் வரை, அறிவுஜீவிகள், ஆசிரியர்கள், பொறியியலாளர்கள், அன்றாட குடிமக்கள், விசித்திரமான கண்டு பிடிப்பாளர்கள், கடமைக்கு உட்பட்ட நூலகர்கள் மற்றும் மொழி சீர்திருத்தவாதிகள் ஒரு தீர்வைத் தேடி மில்லினியத்தின் மிக அசாதாரண புரட்சிகளில் ஒன்றைத் எப்படி தொடங்கினர் என்பதையும் காட்டுகிறது.’ எதற்கு அந்த தீர்வு? அந்த மொழி மற்றும் அதன் எழுத்துக்களை, மேற்கத்திய அறிவியலின் பல்வேறு பிரிவுகளாலும், தந்தியில் தொடங்கி மின்சாரத்தில் இயங்கும் புதிய தகவல் தொடர்பு முறைகளாலும் பெரிதளவில் மாற்றமடைந்துள்ள நவீன உலகில்’ சாத்தியமானதாக மாற்றுவது ஆகும்.

உரையின் முன்னுரையில் இரண்டு சிறிய மேற்கோள்கள் இந்த புத்தகத்தை பற்றி நமக்கு தெளிவுபடுத்துகிறது. ஒன்று, நவீன சீன இலக்கியத்தின் தந்தை என்று குறிப்பிடப்படும் லு சுன், 1936இல், ‘சீன எழுத்துகள் அழிந்து போகவில்லை என்றால், சீனா நிச்சயமாக அழிந்துவிடும்’ என்று சொன்னது மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. மற்றொன்று, மொழியியலாளர், கவிஞர், கணிதவியலாளர் மற்றும் கணினி விஞ்ஞானியான சென் மிங்யுவான் எழுதியது, ‘இறுதியாக கணினிகள் இப்போது சீன மொழியைச் செயலாக்க முடியும்! சதுர எழுத்துக்கள் வாழ்க!’




சந்தியா ராவ்

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# உங்களின் பற்கள் ஆரோக்கியமாக இருக்க

பரத் — ஷலன் சவூர்

பற்கள் நமது ஆரோக்கியத்துக்கு முக்கியமானது அவை கடினமான தோற்றம் கொண்டவை மட்டுமல்ல; வலிமையானவை. அவை வாயில் இருப்பதால் கெட்ட பாக்டீரியாக்கள் அதிகரித்து நமக்கு பாதிப்பை ஏற்படுத்தும். ஆமாம். நாம் வாய்வழி சுகாதாரத்தை கடைப்பிடிக்கவில்லை என்றால் நம் பற்கள் விழுவது மட்டுமின்றி, நள்ளிரவில் நாம் எழுந்து வலி தாங்காமல் துடிக்கவேண்டியிருக்கும். வலிநிவாரண மாத்திரைகளை சாப்பிட்டாலும், கிரீம்கள் தடவிக் கொண்டாலும் நமது தூக்கம் பாதிக்கும்.

**என்ன நடந்தது:** நமது ஈறுகள் வீக்கமடைந்துள்ளன. நமது இரத்த நாளங்கள் வீக்கமடைந்தால், முதல் கட்டமாக கெட்ட பாக்டீரியாக்களும் உணவுத் துகள்களும் இருக்கக்கூடாது. இந்த வீக்கம் ஈறுகளில் இருந்தாலும், இதயத்தின் செயல்பாடுகளில் அழுத்தத்தை ஏற்படுத்தும். இதயம் ரத்தத்தை வேகமாக பம்ப் செய்யும். அதனால் நாளமில்லா சுரப்பி களிலிருந்து நிணநீர் சுரக்கும்.

இன்னும் சொல்லப்போனால் நினைவாற்றல்கூட பாதிக்கப்படலாம். ஈறுகளில் ஏற்படும் நோய் நம்மில் தாழ்வு மனப்பான்மைக்கு வழிவகுக்கும். கவலை அல்லது மனச்சோர்வை ஏற்படுத்தலாம். இந்த சூழ்நிலையில் தன்னம்பிக்கை குறையும். இது படிப்படியான செயல் முறையாகும். மேலும் உணவு சாப்பிடுவதில் ஆர்வம் குறையலாம்.

எனவே உங்கள் பற்கள், ஈறுகளின் மீதும் கவனம் செலுத்துங்கள். பல்துலக்காமல் இரவில் தூங்காதீர்கள்: ஒரு இரண்டு நிமிடம் பொறுமையாக வாய்க்குள் வட்ட இயக்கங்களில் பல் துலக்கவும். நீங்கள் பற்களை துலக்குவதன் மூலம் ஈறுகளில் நோய் ஏற்படாதவாறு தடுக்கிறீர்கள்.

- ப்ளூரைடு கலந்த பற்பசையை பயன்படுத்துங்கள்: பற்களை வெண்மையாக்கும் சக்தியோ அல்லது பற்பசையின் சுவையோ முக்கியமல்ல. ப்ளூரைடு பற்பசை கிருமிகளைக் கொல்வதுடன் பற்களில் ஓட்டை விழாமல் தடுக்கிறது. வாய் துர்நாற்றத்தையும் போக்குகிறது.
- பற்களுக்கு இடையில் உள்ள உணவுத் துகள்களை வெளியேற்றவும்: இது ஈறுகளுக்கு பலத்தை கொடுக்கிறது. நோய் ஏற்படாமல் தடுக்கிறது. ஈறுகளில் வீக்கத்தை குறைக்க உதவுகிறது.
- ஒவ்வொரு முறை சாப்பிட்ட பிறகும் பல் துலக்கவும்.
- சர்க்கரை, அமில உணவுகள் மற்றும் பானங்களை அளவாக சாப்பிடுங்கள்: சர்க்கரை கெட்ட பாக்டீரியாக்களுடன் சேர்ந்து அமிலத்தை உற்பத்தி செய்கிறது. இது பற்களில் உள்ள எனாமலை அரிக்கிறது. அமிலங்களை நீர்த்துப் போகச் செய்ய தண்ணீர் குடியுங்கள்.
- புகைப்பதை நிறுத்துங்கள்: புகைப்பது வாயில் இயற்கையான முறையில் திசுக்கள் உருவாவதை தாமதப்படுத்துகிறது. இதனால் தொற்றுநோய் ஏற்படும். எனவே புகைப்பிடித்தலை கைவிட்டால் ஈறுகளை நோய் தாக்காது.
- வலுவான பற்களுக்கு பால், தயிர் அல்லது சீஸுடன் உணவை சாப்பிட்டு முடிக்கவும். அவற்றில் கால்சியம் மற்றும் பாஸ்பேட்டுகள் இருப்பதால் பற்களுக்கு உறுதி தருகிறது. எனாமலை பாதுகாக்கிறது. மொறு மொறுப்பான உணவுகளை ஒரு கிளாஸ் தண்ணீருடன் சாப்பிடுங்கள். அவை உமிழ் நீரை தூண்டும். பற்களை சுத்தம் செய்கின்றன. பாக்டீரியாக்களை வெளியேற்றுகின்றன. கேரட், ஆப்பிள், பேரிக்காய், பாதம், முந்திரி, அக்ரூட் பருப்புகள், வேர்க்கடலை போன்றவை



மொறுமொறுப்பான உணவுப் பொருள்களில் அடங்கும். நீங்கள் மீன்களை விரும்பிச் சாப்பிடுபவர்களாக இருந்தால் டின்களில் அடைக்கப்பட்ட சால்மன் மீன் வாங்கி சாப்பிடுங்கள். அவற்றில் பாஸ்பரஸ் நிறைந்துள்ளதால் எனாமலை பாதுகாக்கும். பால் சேர்க்கப்படாத கறுப்பு தேநீர், பச்சை தேநீர், காஃபி ஆகியவை பற்களின் நண்பர்கள். அவற்றில் பாலிஃபினால்கள் அதிகம் உள்ளன. அவை ஆக்ஸிஜனேற்றிகளாகச் செயல்படும். செல்கள் சேத மடையாமல் பாதுகாப்பதுடன் வீக்கத்தையும் குறைக்கும் தன்மை கொண்டவை. புற்றுநோய் வராமல் தடுப்பவை. இறுதியாக ஸ்ட்ராபெர்ரிக்களை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். இவற்றில் வைட்டமின் C உள்ளது.



- வாயில் ஏதேனும் பிரச்னை இருந்தால் பல்மருத்துவரை அணுகவும்: இது மிகவும் முக்கியமானது. ஏதேனும் தொற்று இருந்தால் ஒவ்வொரு முறை நீங்கள் விழுங்கும்போதும் கெட்ட பாக்டீரியாக்கள் உள்ள போகும் இது கெட்ட செய்தி. தீங்கு ஏற்படுத்தும் பாக்டீரியாக்கள் இரத்த ஓட்டம் வழியாக நுரையீரலுக்குச் செல்லும். அதற்கு வாய்ப்பு கொடுத்து விடாதீர்கள். எடுத்துக் காட்டாக நீங்கள் ஒரு பக்கத்தில் வலியிருக்கிறது என்பதற்காக மற்றொரு பக்கமாக உணவை மென்று சாப்பிடலாம். வலியை பொறுத்துக் கொள்வதைவிட ஒரு நல்ல பல் மருத்துவரை ஆலோசிப்பது சிறந்தது. உங்களால் அதிக சூடான அல்லது குளிர்ச்சியான உணவு மற்றும் பானங்களை சாப்பிடமுடியாத, அருந்த முடியாத நிலையில் பற்கள் உணர்திறனற்று இருக்கும். எனவே தெர்மோ சீல் அல்லது சென்ஸோடைன் போன்ற பற்பசை களைக் கொண்டு பல்துலக்குமாறு அறிவுறுத்தப்படலாம் அல்லது பற்களில் ஏற்பட்ட ஓட்டையை அடைக்கவேண்டியிருக்கும்.

உணர்திறனைத்தாண்டி பிரச்னை சென்றுவிட்டால் நீங்கள் பல்வேர்குழி சிகிச்சை (ரூட் கனால்) செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படலாம்.

**பற்களை அரைக்காதீர்கள் நறநறவென கடிக்காதீர்கள்**

மன அழுத்தம் நம் பற்களை பாதிக்கும் என்கிற ஒரு முக்கியமான விஷயத்தை நாம் புறக்கணித்து விடக்கூடாது. கோபம் வரும் போது தாடையை இறுக்கிக்கொண்டு நாம் பற்களை கடிப்பதில்லையா? நீங்கள் அடிக்கடி காலையில் எழுந்திருக்கும்போது தலைவலி அல்லது சோர்வுடன் இருக்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் இரவு முழுவதும் பற்களை அரைத்துக் கொண்டும், நறநற என கடித்துக் கொண்டும் இருந்தது காரணமாக இருக்கலாம். இதை எப்படி நிறுத்துவது? இதற்கு ஒரே வழி மன அழுத்தத்திலிருந்து விடுபடுவது தான். பதற்றத்தை ஏற்படுத்தும் சூழ்நிலைகளிலிருந்து மாறுங்கள். இல்லையெனில் யோகா வகுப்புகளில் சேர்ந்துகொள்ளுங்கள். ஆசனங்கள் உங்கள் பதற்றத்தை குறைக்கும். மனதை ஆசு வாசப்படுத்தும். யோக நித்திரை தியானம் அல்லது இனிமையான இசையை கேட்டபடி தூங்கச் செல்லுங்கள். சூடான தண்ணீரில் குளியுங்கள். தொலைக்காட்சி செய்திகள், சமூக ஊடகங்கள், காஃபின் அடங்கிய பொருள்கள், சிகரெட்டுகள், மதுபானங்களை தவிர்த்துவிடுங்கள். யாரிடமும் வாதம் செய்யாதீர்கள்.

உங்களுக்கு தாடைவலியிருந் தாலும், உணவை மெல்லுவது கஷ்டமாக இருந்தாலும், காதுகளை சுற்றி வலி இருந்தாலும் பல் மருத்துவரை நாடுங்கள். உங்களது தாடையையும் மண்டஒட்டையும் இணைக்கும் இடத்தில் பிரச்னை இருக்கலாம். நாம் தாடையை மேலும் கீழும் அசைப்பதற்கும், பக்கவாட்டில் திருப்புவதற்கும், பேசுவதற்கும், சிரிப்பதற்கும், மெல்வதற்கும், கொட்டாவி விடுவதற்கும் இந்த இணைப்புதான் உதவி செய்கிறது. நாம் பற்களை அரைக்கும்போது அதனால் ஏற்படும் வலி தாடை தசை களிலிருந்து மண்டை ஓடுவரை பரவுகிறது. அதனால்தான் தலைவலி ஏற்படுகிறது. நமது மேல் தாடையும், கீழ் தாடையும் தனித்தனியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கான பாதுகாப்பு கேடயம் மருந்து கடைகளில் கிடைக்கும். மெல்லிய பிளாஸ்டிக்கினால் ஆன இதை வாங்கி பற்களின் மேல் பகுதிக்கும், கீழ் பகுதிக்கும் இடையில் சரியாக பொருத்திக் கொள்ள வேண்டும். இரவு தூங்கும்போது அது தாடையை உறுதிப்படுத்தும் அல்லது தளர்த்தும். பற்களை அரைக்க முடியாது.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

## RC மனோரா பட்டுக்கோட்டை — RID 2981



மல்லிப்பட்டினம் கிராமக் கடற் கரையோரம் இந்தச் சங்கம் நடத்திய மாங்குரோவ் மர நடு விழாவில் DG V செல்வநாதன் பங்கேற்றார்.

## RC தில்லி அனந்தா — RID 3012



கோரி பச்செரா கிராமத்தில் உள்ள ஸ்ரீ காந்தி இடைநிலைக் கல்லூரி, KEI தொழில் நிறுவனத்தின் ரூ.24.3 லட்சம் CSR நல்கைமூலம் புதுப்பிக்கப்பட்டது.

## RC ஸ்ரீரங்கம் — RID 3000



புலி மண்டபம் ரங்கநாதா பள்ளி மாணவர்களுக்கு 100 மணிநேர ஆங்கிலப் பேச்சு வகுப்புகள் நடைபெற்றன. மாநிலக் கல்வி அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி மாணவர்களுக்குப் சான்றிதழ்களை வழங்கினார்.

## RC அகோலா — RID 3030



'என்னுடன் படியுங்கள்' திட்டம், குழந்தைகளின் படித்தல், எழுதுதல் திறமைகளை மேம்படுத்தி வருகிறது.

## RC குர்காவ்ன் குதப் என்க்ளேவ் — RID 3011



CSR நிதி கொண்டு வெவ்வேறு இடங்களில் சூரிய ஒளி விளக்குகள் நிறுவப்பட்டன.

## RC அகமதாபாத் மெஜஸ்டி — RID 3054



சங்க உறுப்பினரும் பெண்ணோயியல் மருத்துவருமான முகேஷ் பவிஷி 225 சமணத் துறவிகளுக்கு மார்பகப் புற்று நோய் பரிசோதனை முகாமை நடத்தினார்.

# செய்திகள்

## RC ஹனுமான்கர்ஹ் சிட்டி — RID 3090



பாத்கைன்ட் ஆய்வகத்துடன் இணைந்து நடத்தப்பட்ட மருத்துவ முகாமில் 70க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டன.

## RC புணே லட்சுமி ரோட் — RID 3131



வார்ஜெ-யில் மாமாசாகேப் மொஹோல் வித்யாலயா -வுக்கு அறிவியல் ஆய்வகப் பொருட்கள், இருக்கைகள் வழங்கப்பட்டன.

## RC மீரட் ப்ரபாத் — RID 3100



நுடெமா மருத்துவமனை, கல்யாணி பேத் லாப் உடன் இணைந்து, சிசோலி-யில் பள்ளி மாணவர் களுக்கு எழுது பொருட்கள், சீருடைகள் வழங்கப்பட்டன.

## RC கரட் — RID 3132



கராட்-இல் கொய்னா வசாஹத் பஞ்சாயத்து ஆதரவுடன் பல் பரிசோதனை முகாமில் 120 பேர் பரிசோதிக்கப் பட்டார்கள்.

## RC விந்தியாச்சல் — RID 3120



உதய்பூர் நாராயண் சேவா சன்ஸ்தான் மருத்துவர்கள் ஆதரவுடன் கை, கால் அகற்றப்பட்ட 220 பேருக்குச் செயற்கைக் கை, கால்கள், கேலிப்பர்கள் வழங்கப்பட்டன.

## RC தானெ காட்பன்டர் ரோட் — RID 3142




DPOன் நெட் ஃபிசியோதெரபி கல்லூரியில் நோயறிதல் மையத்தை DG கைலாஷ் ஜெதானி தொடங்கி வைத்தார்.

## RC ஸ்மார்ட் ஹைதராபாத் — RID 3150



RCகள் ஹைதராபாத் பிரைட், ஜெய்சல்மெர் ஸ்வர்ண நகரி, ஒரு ஃப்ரீ மேசன் சங்கம், இணைந்து நிலோஃபெர் மருத்துவ மனையின் ICU-க்கு ரூ.1 லட்சம் மதிப்புள்ள பொருட்களை வழங்கினர்.

## RC முடிகெரெ — RID 3182

மறைந்த Rtn PR நவீன் நினைவாக அரசுத் பள்ளிகளைச் சேர்ந்த 190 மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.



## RC தாவண்கெரே வித்யாநகர் — RID 3160



RCகள் சித்ரதுர்கா, சித்ரதுர்கா ஃபோர்ட், குல்பர்கா, நட்யால் மற்றும் RID 3150, இவற்றுடன், RIDs 1385, 1410 மற்றும் 1430 இணைந்து குழந்தைகள் மருத்துவமனைக்கு மருத்துவ சாதனங்கள் வழங்கின.

## RC பெங்களூர் பால்ம்விலெ — RID 3190

நீரிழிவு மேலாண்மைக்கான கர்நாடக உட்சுரப்பியியல் கல்வி ஆய்வு நிறுவனத்துக்கு ரூ.25 லட்சம் மதிப்புள்ள மருத்துவப் பொருட்கள் கொடையளிக்கப்பட்டன.



## RC ஹொனாவர் — RID 3170



ஈ-பாட்சாலா திட்டத்துக்கு நிதி திரட்ட நடத்தப்பட்ட ஆட்டோ எக்ஸ்போல் 5,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்றார்கள்.

## RC திருச்சூர் கல்ச்சுரல் சிட்டி — RID 3201

அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் கை கழுவும் நிலையம், RO அமைப்பு கட்டப்பட்டன.



# செய்திகள்

## RC பொள்ளாச்சி — RID 3203



கொல்லபட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில், ரூ.9 லட்சம் செலவில் இரண்டு கழிப்பறைத் தொகுதிகள் கட்டப்பட்டன.

## RC மெட்ராஸ் மவுன்ட் — RID 3232



ஆறு மாதப் பயிற்சி வகுப்பில் தேர்ச்சி பெற்ற 33 பேருக்குத் நங்கநல்லூர் இன்னர் வீல் சங்கத்தின் வழியாக தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

## RC செங்கன்னூர் — RID 3211



16 பெண்களைக் கொண்ட ஆதரவற்றோர் இல்லம் ஒன்றுக்கு மிதிவண்டிகள் கொடையளிக்கப் பட்டன.

## RC ஜாம்ஷெட்பூர் மிட் டவுன் — RID 3250



லால் பகதூர் சாஸ்திரி நினைவுக் கல்லூரி ரோட்டராக்டர்கள், மாணவர்கள் 200 பேருக்கு மாதச் சுழற்சிக் கோப்பைகள் (menstrual cup) வழங்கப்பட்டன.

## RC திருநெல்வேலி டவுன் — RID 3212



மூன்றடைப்பு கிராமத்தில் மனநலக் குறைபாடு கொண்ட 40 பேருக்குச் சங்கம் மதிய உணவு வழங்கப்பட்டது.

## RC கல்கத்தா மெட்ரோ சிட்டி — RID 3291



கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர், சந்தூர் மேதை தருண் பட்டாச்சார்யா தூதர்களாகக் கொண்டு தலசீமியா விழிப்புணர்வுப் தொடங்கப் பட்டது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# போலி கௌரவம் உள்ளவரா நீங்கள்?

LBW

**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

போலியான கௌரவம் பல வகைகளில் வரும். ஒரு குறிப்பிட்ட சமூக பின்னணி கொண்ட அல்லது ஒரு குறிப்பிட்ட உயர் பள்ளியில், கல்லூரியில் அல்லது பல்கலைக்கழகத்தில் அல்லது தொழிலில் இருப்பதன் மூலம், ஆங்கிலம் பேசத் தெரியாதவர்களிடம் தங்களை எல்லாம் தெரிந்தவர்கள் போல் காட்டிக் கொள்வது, அப்படியே ஒருவர் ஆங்கிலம் பேசினாலும், அவர்களிடம் வித்தியாசமான உச்சரிப்பில் பேசுவது, ஒரு குறிப்பிட்ட அரசியல் கருத்துக்களை கொண்டிருப்பது, உடைகளை அணிவது, ஒரு குறிப்பிட்ட விஸ்கியை குடிப்பது, குறிப்பிட்ட உணவுகளை உண்பது, நீங்கள் வசிக்கும் இடம் இப்படி ஏதுவாக வேண்டுமானாலும் இதற்கு காரணமாக இருக்கலாம்.

பல அமைப்புகள் இதை ஊக்குவிக்கின்றன. உங்கள் பள்ளி, கல்லூரி இதற்கு காரணமாக இருக்கலாம். ஒரு பிரிட்டிஷ் கல்லூரியில் நான்கு பிரிவுகள் உள்ளன. பட்டப்படிப்பு, பட்ட மேற்பட்டிப்பு, முனைவர் பட்ட மாணவர்கள் மற்றும் வெளிநாட்டினர் என நான்கு பிரிவுகள் உள்ளன. மேலும் இவை இறங்கு வரிசையில் உள்ளது. இதைக் கேட்டவுடன் நான் ஆச்சரியம் அடைந்தேன். கடைசி மூன்று பிரிவினர் எங்கிருந்து வருகிறார்கள் என்பது எங்களுக்கு தெரியாது. ஆனால், பட்டதாரியான நாங்கள் அவர்களை உயர்ந்தவர்களாக கருதுகிறோம் என்றனர்.

ஆனால், இவற்றில் ஒன்று அல்லது இரண்டை தவிர மற்றவற்றை இணைக்கும் என்னைப் போன்றவர்கள் மோசமானவர்கள். இதைச் சொல்ல எதுவும் தேவையில்லை. என்னுடன் மற்றவர்கள் நட்பாக இருக்க வேண்டும் என்றால், அவர்கள் என்னை மதிக்க வேண்டும் என்று நினைப்பவன் நான். ஒருநாள் என்னைவிட போலி கௌரவம் பார்க்கும் ஒருவரை மட்டுமல்ல, கல்லூரியில் எனது வகுப்பில் படிக்கும் இரு பெண்களையும் சந்தித்தேன்.

என்னைவிட போலி கௌரவம் கொண்டிருந்த அவனிடம் பேசுகையில், நான் தில்லியை ஒட்டியுள்ள, ஆனால், ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த குர்கானில் வசிக்கிறேன் என்று சொன்னேன். ஓ, சிட்டி இல்லையா என்று கூறி ஏளனமாக சிரித்தான். அதன் அர்த்தம் எனக்கு புரிந்தது. நீ தில்லிக்குள் இல்லாவிட்டால் உன்னை கணக்கிலேயே சேர்க்கமாட்டோம் என்பதுதான் அவன் சொல்ல வந்தது. அடுத்து எனது வீட்டை பற்றி கேட்டான். நான் அவனிடம், முதலில் உன்னைப் பற்றி சொல்லு என்றேன். அவன் தில்லிக்குள் மக்கள் அதிகம் வசிக்கும், வளமான பகுதியில் ஒரு சிறிய பிளாட்டில் வசிப்பது தெரியவந்தது. நான் அவனிடம், எங்கள் வீடு மூன்று தளங்கள் மற்றும் தோட்டங்கள், சுற்றுச்சுவர் கொண்ட பெரிய வீடு என்று குறிப்பிட்டேன். அவன் அதை பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. ஒருவேளை தெற்கு தில்லியில் 1,200 சதுர அடி கொண்ட பிளாட்டில் 1,000 சதுர அடி பரப்புள்ள வீட்டில் வசிப்பவர்கள் தான் சமூக அந்தஸ்து உடையவர்கள் என அவன் நினைத்திருக்கலாம். இதை என்னுடைய மனைவியிடம் கூறிய போது, உங்களுடைய பின்னணி, கல்வி மற்றும் வேலையை பார்க்கும் போது அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது என்று கூறினாள். நீங்கள் ஏழையாக இருந்தாலும் போலி கௌரவத்துக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை என்றாள் என் மனைவி.

அந்த இரண்டு வகுப்புத் தோழிகளின் மனக்குறை என்னவென்றால், அதன் பிறகு நான் அவர்களுடன் பேசாமலிருந்தது தான். ஆனால், உண்மை என்னவென்பது எனக்குத் தெரியும். அது போலி கௌரவம் அல்ல. அதற்கு காரணம் என்னுடைய கூச்ச சுபாவம் தான். இன்னொன்றையும் நான் ஒப்புக்கொள்ள வேண்டும். அவர்களுடன் பேசுவதில் எனக்கு ஆர்வம் இல்லை. இன்றுவரை அவர்கள் என்னைப் பற்றி என்ன பேசியிருப்பார்கள் என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் மீது எனக்கு சலிப்பு இருந்தது. ஆனால், அந்த பெண்களிடம் நான் போலி கௌரவம் காட்டவில்லை.

அப்போது முதல் நான் போலி கௌரவம் குறித்து ஆழமாக யோசித்தேன். உங்கள் போலி கௌரவத்தை இறங்கு வரிசையில் தரம் உயர்த்த ஏதேனும் உள்ளதா? போலியான கௌரவத்தை காட்ட நீங்கள் எப்படியெல்லாம் இருக்க வேண்டும்? சில சில்லறை ஆதாயங்களுக்காக நாம் ஏன் போலியான கௌரவத்துடன் நடிக்க வேண்டும். சாதியைவிட வகுப்பு முக்கியமானதா? ஒருவரின் மதம் ஏன் போலி கௌரவத்தை தூண்டுவதில்லை? ஒருவரின் தோல் நிறம் அவர் உயர்ந்தவரா, தாழ்வு மனப்பான்மை கொண்டவரா என்பதை தூண்டிவிடும். இப்படியே சொல்லிக் கொண்டே போகலாம். கேள்விகள் பல இருந்தாலும் பதில்கள் கொஞ்சம்தான்.■

Registered No. TN/CCN/677/2022-2024 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

ADVT.




ADVT.
Rtn. Jennifer E.Jones
R.I.President
Rtn. AKS. V.R.Muthu
District Governor
Rotary
District 3212
IMAGINE
ROTARY
END
POLIO
NOW
More than 2.5 billion Children saved from Polio
Thank you so much for your Donation towards Polio
YOUR MONEY WILL BE SPENT ON
• Raising Awareness
• Vaccines
• Getting vaccine to the children
• Detecting disease
• Remuneration to Epidemiologists
• Research
Contact :
Dr.Chinnadurai Abdullah
EPNC - Zone 5
98424 21334
Now is our chance to change the world. To Make sure no child is disabled by polio ever again. Join in. Speak out. Donate. Be a part of history.
endpolionow.org
We Are This Close To Ending Polio
To reach a Polio free World...
Donate Rs.1 Lakh
(as one time payment)
Get recognized as
END POLIO FELLOW
Donate 100 USD
and give a pledge to donate
100 USD every year till polio is eradicated.
Get recognized as Polio Plus Society Member
Amitabh Bachchan
COURTESY
IDHAYAM Mantra
SAY IDHAYAM • SPELL HEALTH